
தகவம்

# பரிசுக் கதைகள்

தொகுதி - 2




வெளியீடு.

தமிழ்க்
கதைஞர்
வட்டம்

தெணியான்

தெணியகம்
பொலிகண்டி
வல்வெட்டித்துறை

உதயன் புத்தக நிலையம்
பிரதான வீதி
பருத்தித்துறை

# தகவம் பரிசுக் கதைகள்

தொகுதி - 2

வெளியீடு:

**தமிழ்க் கதைஞர் வட்டம்**

யாழ்ப்பாணம், இலங்கை.

இந்நூலின் உரிமையாளர்;

..........................................................................................

'thakavam parisu kathaigal' — volume II ( a collection of prize winning short stories ) ☐ authors; nine writers ☐ language tamil ☐ copyright with 'thakavam' ☐ first edition nov, 1990. ☐ publisher: 'thakavam', old road, kopai, sri lanka ☐ cover design 'ramani' ☐ no. of copies 1000 ☐ printers : new era publications ltd. 267 main street, jaffna ☐ price : rs. 45/-

இந்நூல்,

இலங்கை முக்குலத்தோர் கலாசார சங்கம்
வழங்கிய நிதிகொண்டு அச்சிடப்பட்டது

# உள்ளே.....

பதிப்புரை

புகுமுகம்

காவலூர் எஸ். ஜெகந்நாதன் — *சீதேவிகள்* — 1

கே. ஆர். டேவிட் — *காலம் ஒரு தூரிகை* — 12

எம். எல். எம். மன்சூர் — *முக்காடுகள் மீட்டும் முகாரி...* — 26

கே. ஆர். டேவிட் — *சமுதாயச் சுருக்கங்கள்* — 42

மாத்தளை – சோமு — *இனி ஒரு துன்பமில்லை* — 54

வ. அ. இராசரத்தினம் — *தெய்வம் ஆசி வழங்குகிறது* — 66

எஸ். முத்து குணரத்தினம் — *நியாயப்படுத்துகின்ற...* — 80

செங்கை ஆழியான் — *உப்பங்கழி* — 92

வ. அ. இராசரத்தினம் — *1+1=1; 1—1=2* — 106

ரதி கந்தசாமி — *ஓர் உயிரின் விலை* — 120

காவலூர் எஸ். ஜெகந்நாதன் — *பாய்ச்சல்கள்* — 130

வடகோவை வரதராஜன் — *நிலவு குளிர்ச்சியாக இல்லை* — 142

கலாநிதி க. அருணாசலம் — *ஒரு மதிப்பீடு தகவம் பரிசுக்கதைகள் – தொகுதி 2* — 161

# பதிப்புரை

நூற்பிரசுரமும் விற்பனையும் நம்மிடையே தாபன ரீதியாக இல்லை. நூல்களை எழுதுதல், பிரசுரித்தல், விற்றல் ஆகிய எல்லாவற்றையும் எழுத்தாளனே சுமக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை நமக்கு. இதுதவிர, அதிகரித்து வரும் அச்சுச் செலவும் நம்மை மிரட்டுகிறது. இந்தக் கடினமான சூழ்நிலையில் பரிசுக் கதைகளின் இரண்டாவது தொகுதியைத் தகவம் வெளியிடுகிறது.

இந்த நூலை வெளிக் கொணர்வதற்கு வேண்டிய பொருட்பலத்தை இலங்கை முக்குலத்தோர் கலாசார சங்கம் நமக்கு அளித்திருக்கிறது. இவ்விடயத்தில் இச்சங்கத்தின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி வீரையா விவேகானந்தன் அவர்கள் நல்கிய உற்சாகமும் ஊக்கமும் சொல்லில் அடங்காதவை. இலங்கை முக்குலத்தோர் கலாசார சங்கத்துக்கு, குறிப்பாக அதன் தலைவர் திரு சுப. சோலைமலைத் தேவர் ஜே.பி. க்கும், பொதுச் செயலாளர் விவேகானந்தனுக்கும் தகவத்தின் மனம் நிறைந்த நன்றி உரித்தாகட்டும். இலங்கை முக்குலத்தோர் கலாசார சங்கம் இந்நூல் வெளியீட்டுக்கு உதவுவதன்மூலம் இலக்கியப் பணியில் தனது பங்கைச் செலுத்த முன்வந்திருப்பது பாராட்டுக்குரியது.

'தகவம் பரிசுக்கதைகள்' தொகுதி நமது எழுத்தாளரது சிறந்த படைப்புகளின் பொதுக் கருவூலம். ஆதலால், வாசகர்களிடையே இதற்கு உற்சாகமான வரவேற்பு இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

நூலைச் சிறப்புற அச்சுப்பதித்த நியூ ஈரா பப்ளிக்கேசன்ஸ் முகாமையாளர் அவர்களுக்கும் அச்சக ஊழியர்களுக்கும் நமது அன்பு கலந்த பாராட்டுகள்.

கொழும்பு:13 — மாத்தளை கார்த்திகேசு
10-6-90 — (நூல்வெளியீட்டுக்குழு சார்பில்)

# புகுமுகம்

தகவம் நடத்திவரும் சிறுகதை மதிப்பீடுகளிலே முதற் பரிசு பெற்ற கதைகளின் இரண்டாவது தொகுதி, இந்த நூல். முதலாவது தொகுதியில் உள்ளதுபோலவே இதிலும் 12 சிறு கதைகள் அடங்கியுள்ளன. 1979, 80, 81, 82 ஆகிய ஆண்டு களில் பரிசு வழங்கப்பெற்ற கதைகள் இவை.

இப்பன்னிரண்டு கதைகளும் அகில இலங்கை அடிப்படை யில் தெரிவு செய்யப்பட்டவை. ஆதலால், வடக்கு, கிழக்கு, தெற்கு ஆகிய வெவ்வேறு பிரதேசத்து எழுத்தாளர்களது படைப்புகளையும் இங்கு நாம் ஒருமித்துக் காணலாம். அவ் வாறே வெவ்வேறு பிரதேசத்து மக்களுடைய வித்தியாச மான பிரச்சினைகளையும் இவற்றில பார்க்கலாம்.

மானுடம் முழுவதற்கும் பொதுவான விழுமியங்களையும் மனித வாழ்வை இறுகப் போர்த்திருக்கும் சோக மூட்டத்தை யும் கதைஞர்கள் இங்குள்ள கதைகளில் சித்திரித்திருக்கிறார் கள். அவர்களுக்குரிய தனித்துவமான இலக்கிய நோக்கும் போக்கும் இவற்றிலே பல்லினமாகத் தம்மை இனங்காட்டி நிற்கின்றன. இவையெல்லாம் இந்தக் கதைத் தொகுதியின் தனிச் சிறப்புகள் என்பது தவறல்ல.

ஒவ்வொரு காலக்கட்டத்திலே வெவ்வேறு பிரச்சினைகள் சமூகத்தில் முனைப்புக்கொள்கின்றன. சமூகப் பிரக்ஞையுள்ள எழுத்தாளன் அவற்றைத் தனது புனைகதைளில் கையாளுகி றான். இதன் பேறாக அப்புனைகதைகள் சமூகத்தின் ஒரு குறிப்பிட்ட காலத்து இயக்கத்தை — பரிணாம வளர்ச்சியைக் காட்டுகின்ற பதிவுகள் ஆகிவிடுகின்றன. இவ்வகையில் நோக்கும்போது இங்குள்ள கதைகளும் தாம் புனையப்பட்ட காலப் பகுதியைப் பிரதிபலிப்பனவாக இருத்தல்வேண்டும். அவ்வாறு இல்லையெனில், அதற்குரிய காரணிகளை வாச

கர்கள் ஆராய்வார்கள் என நம்புகிறோம். இத்தகைய ஒரு தேடல் ஆரோக்கியமான இலக்கிய வளர்ச்சிக்குக் கைகொடுக்கும்;

இனி: இங்குள்ள கதைகளின் முகப்புகளில் தரப்பட்டிருக்கும் குறிப்புகள்பற்றி ஒருசில வார்த்தைகள். அவை குதிரையின் முகமூடி போன்று வாசகனுக்கு இடப்பட்ட பார்வை மூடிகள் அல்ல; வாசகனது சுதந்திரமான தேடலை – தனித்துவத்தை ஒடுக்கித் திசை திருப்பி விடுகிற கடிவாளங்களும் அல்ல; அவை கதைகளுக்குரிய அறிமுகம்; அவ்வளவுதான்.

அடுத்து; இந்நூலின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ள 'ஒரு மதிப்பீடு' என்னும் கட்டுரை. அது இங்குள்ள கதைகளைப் படைத்தவர்கள், படித்தவர்கள் ஆகிய இருசாராரது கவனத்தையும் ஈர்க்கும் என நம்புகிறோம்.

பயன்மிக்க இந்த மதிப்பீட்டை எழுதிய கலாநிதி க. அருணாசலம் அவர்களுக்கு நமது மனமார்ந்த நன்றி.

புனைகதைப் படைப்பாளிகள், வாசகர்கள், விமர்சகர்கள் ஆகியோர் இந்நூல் பற்றிய தங்களது கருத்துக்களை ஒளிவு மறைவு இன்றி வெளிப்படுத்தலாம்; வெளிப்படுத்த வேண்டும் எனத் தகவம் எதிர்பார்க்கின்றது. முன்வைக்கப்படும் இக்கருத்துக்கள் தகவம் புரியும் இந்த இலக்கியப் பணிக்கு வளம் ஊட்டும் உரமாக அமையும் என்பது உறுதி.

வணக்கம்.

வ. இராசையா

'அரவிந்தம்'
பழைய வீதி,
கோப்பாய்.

## காவலூர் எஸ். ஜெகந்நாதன்

அரச விவசாயத்துறை ஆராய்ச்சிப் பகுதியில் ஆய்வாளராகச் சேவை புரிந்தவர் திரு. ஜெகந்நாதன் இவர் தமது 20ஆம் வயதில் எழுத்துலகிற் புகுந்தார். இத்துறையில் இவர் ஈடுபட்டிருந்தது சில ஆண்டுகளே. ஆயினும், இலக்கியப் பணியில் மிகத் தீவிரமாகச் செயற்பட்டதால் ஜெகந்நாதன் இலக்கிய உலகின் கவனத்தை விரைவில் தம்பால் ஈர்த்துக்கொண்டார்.

புனைகதை படைத்தலில் ஜெகந்நாதனுக்கு அதிக நாட்டம் இருந்தது. ஏறக்குறைய 200 சிறுகதைகள் இவரால் எழுதப்பட்டுள்ளன. நாவல்களும் படைத்துள்ளார். கவிதை நடையிலும் இவர் தமது கருத்துக்களை முன் வைத்துள்ளார்.

தீவகக் கிராமிய மக்களது வாழ்க்கைப் பிரச்சினைகளும், உணர்வோட்டங்களும் ஜெகந்நாதனுடைய படைப்புகளில் பெரும்பாலும் சித்திரிக்கப்பட்டுள்ளன.

வட்டாரமட்டத்திலும் நாடு தழுவிய வகையிலும் நடைபெற்ற சிறுகதைப் போட்டிகள் பலவற்றிலே ஜெகந்நாதனுடைய கதைகள் பரிசுகளை வென்றெடுத்துள்ளன.

இவருடைய இலக்கிய ஆர்வம், இலக்கிய அமைப்புகளுக்கு ஊக்கம் அளிப்பதிலும் ஆங்காங்கு இலக்கிய அரங்குகளை நடத்துவதிலும் விரிந்து நின்றது.

சாகக் கிடக்கும் செல்லம்மாக் கிழவியை நடுவாகக் கொண்டு இந்தக் கதை விரிகிறது. அன்பும், பரிவும் இருக்க வேண்டிய அந்தச் சூழ்நிலையில் அரட்டையும் மாய்மாலமும் கோலோச்சுகின்றன. மனங்களின் மனிதாபிமானம் மங்கிவிட, போலித்தனப் புழு நெளிகிறது. கிழவியின் மரணப் போராட்டத்தை உரைகல்லாக்கி, அங்கு சுற்றியிருப்போரது மனத்தின் வக்கிரங்களைக் காட்டுகிறார், கதைஞர். கிராமிய வாழ்க்கைச் சித்திரிப்பு இக்கதையின் தனித்துவம்.

# சீதேவிகள்

"மூணு நாள் தவணை தாறன்,"

வல்லிபுரப் பரியாரியார் நெற்றியைச் சுருக்கித் தலையைச் சொறிந்து வழக்கமான பல அங்கசேஷ்டைகளால் தான் சிந்திப்பதாகப் பாவனை காட்டிக் கூறிவிட்டார். அவருக்குத் தெரியும் வருத்தம் கடுமையில்லை என்று கூறினல் எந்தப் பெரிய மருந்தைக் கொடுத்தாலும் பத்து ரூபாவுக்குமேல் புரளாதென்பது. எத்தனை நாளாவது ஒரு தவணையைச் சொல்லி அதற்குள் எதுவும் நடக்கலாம் என்று கூறி, தலையைத்தொங்கப்போட்டால்தான் ஐந்து தாள்களாவது வாரிச் சுருட்டலாம் என்பது அவரது தொழில் அனுபவம்.

''ம்...மூணு நாள் தவணை தாறன்'' என்றுவிட்டுத் தலையை நிமிர்த்தியபோதும் செல்லம்மாக் கிழவியின் கைந்நாடி ஓட்டத்தை இன்னும் அவர் கிரகித்து முடியவில்லை.

''பரியாரியார் என்ன வருத்தம்? வயதுபோனாலும் முற்றத்திலை ஓடியாடிக்கொண்டிருந்தவா-'' கிழவியின் ஒரே மகள் கமலம் கவலையை வார்த்தைகளில் திணிக்கிருள். ''கடுமைதான். மூணு நாள் தவணை தந்திருக்கிறன். பிறகென்ன?'' என்றார் பரியாரியார்.

வல்லிபுரப் பரியாரியார் இப்படித்தான். வருத்தம் இன்னது என்று நிச்சயிக்க முடியாவிட்டால் கடுமை, தவணை என்ற வார்த்தைகளுள் ஒளிந்து கொள்வார் கிழவியைப் பார்த்தபடியே தனது மருந்துப்பையை எடுத்தார். கூடப் பிறக்காவிட்டாலும் அவர் உடலோடு ஒரு அங்கமாகவே மாறிவிட்டிருந்தது அந்த மருந்துப்பை. எந்த வருத்தத்துக்கும் அவரால் கொடுக்கக்கூடிய மருந்துகள் அத்தனையும் அந்தப் பைக்குள் அடக்கம். அட்சய பாத்திரம் மாதிரித்தான்.

''நாலுவேளைக்கு மருந்து இருக்கு. தேனிலை கரைச்சுக் குடுக்கவேணும். தண்ணிச்சாப்பாடு தாராளமாகக் குடுக்கலாம்.''

பரியாரியார் எழுந்தார். ''நாளைக்கு வந்து பார்க்கிறன்.''

எல்லோருக்கும் தெரியும் பரியாரியை விட்டால் பிடிக்க முடியாதென்பது. ஒரு அவசரமென்ருல் ஆளைப் பிடிக்க எந்தக் கள்ளுத் தவறணையென்று தேடுவது?

''பரியாரியார் உங்களை விடமாட்டோம். பக்கத்திலையே இருந்து சுகமானாப் பிறகுதான்...'' பரியாரியார் யோசிப்பது போல பாவனை காட்டிஞர்.

''கன சோலியள் இருக்குது.''

''அதெல்லாம் வீடு தேடி வரும்'' என்ருர் விஷயம் தெரிந்த ஒருவர். வேளைக்கு வேளை சாப்பாடு; தண்ணிச்சாப்பாடும் வரும் என்ருல் பிறகென்ன?

''சிவ சிவா'' என்றபடி ஒரு திண்ணையின் ஒரு புறத்தில் வந்து படுத்துக்கொண்டார் பரியாரியார்.

''செல்லம்மாக் கிழவி முடியப் போகுது'' என்று வல்லி புரப் பரியாரி உறுதிப்படுத்திய செய்தி ஊர் முழுவதும் புகைந்து உறவினர்களைக் கூட்டவைத்தது. கிழவி வழக்க மாகப் படுக்கும் வடக்குத் திண்ணையில் இருந்து வெள்ளை விரிப்பு விரித்த கட்டிலுக்கு மாற்றப்பட்டாள். புல்லம் பாய்கள் வீடு முழுவதும் பரப்பப்பட்டன. பக்கத்து வீட் டுத் திருப்பதி மணித்தியாலத்துக்கு ஒரு தரம் 'விசிற்' கொடுத்துக் கொண்டிருந்தாள். ஒவ்வொரு தடவை வரும் போதும் ஒவ்வொரு சேலை. அதற்கு 'மாட்ச்' ஆன சட்டை அவளது கணவன் கொழும்பிலே புடைவைக் கடை வைத்திருப்பதை இப்படித்தான் வெளிப்படுத்த வேண்டு மென்று நினைத்தாளோ, என்னவோ! செல்லம்மாக் கிழவிக்கு அருகில், தான் வந்து அமர்ந்து கொள்வாள். அப்போதுதான் அவள் சேலை எல்லோரது கண்களிலும் படும் என்பது அவ ளது எண்ணம்.

''திருப்பதி இது ஆராதனாவே? என்ன விலை?'' ''ஔவை யார் சாரி உங்கட அவற்றை கடையிலை என்ன விலை?''

வந்தவர்களில் பலருக்கு செல்லம்மா என்றொரு கிழவி சாகக் கிடப்பதோ, அதைப் பார்க்கவென்றுதான் தாங்கள் வந்திருப்பதோ மறந்துவிட்டது. திருப்பதியின் சேலைக் கண் காட்சி ஒரு பக்கம் அமளிப்பட்டுக்கொண்டிருக்க,

முற்றத்தில்,

''சரி சரி; விண்ணாணம் பாக்கிறதை விட்டுப்போட்டு தேவாரத்தைப் படியுங்க.'' பழைய ஊர்மேளம் குரல் கொடுத்தது. அவருக்குத் தெரியும் தன்னை விட்டால் வேறு யாருமில்லையென்பது. ''இதையெல்லாம் சொல்லிக்காட்ட வேணுமா? நீங்கதானே பாடவேணும்'' என்றார் ஒரு கழுதை.

''புத்தக மில்லாமல்—'' ஊர்மேளம் இழுத்தார்.

''தேவாரப் புத்தகத்தை எடுத்துக்கொண்டுவந்து சிவ சம்பரிட்டைக் குடுங்கோ.'' கழுதை கத்தியது.

சூழலில் அமைதியின் ஆட்சி.

செல்லம்மாக் கிழவியின் மகள் கமலந்தான் முன்னால் வந்து சொன்னாள்; ''இப்ப எங்கை தேவாரப்புத்தகம் கிடக்குது? என்ர பிள்ளையள் சினிமாப் புத்தகங்கள்தான் நிரம்ப வைச்சிருக்குதுகள்.''

''நாசமாப் போச்சுது! பள்ளிக்கூடத்திலை படிக்கிற பெடியளுக் கெண்டாலும் தேவாரம் பாடமில்லையா!''

''என்ர பிள்ளையள் மற்சிலைதான் கெட்டிக்காரன்கள். சமயபாடத்தில கொஞ்சம் வீக்'' என்றாள் கமலம்.

''பக்திப்பாட்டுப் புத்தகங்க ளென்டால் இருக்குது. என்று கொண்டுவந்து கொடுத்தான் கமலத்தின் மூத்தமகன்

ஊர்மேளம் பாடத் தொடங்கி விட்டது.

''கெட்டிக்காறிதான். எல்லோரையும் வரப் பண்ணிப் போட்டா...எணேய் என்னைத் தெரியுதாணை'' உற்சாகத்தோடு கூறிக்கொண்டு கிழவிக்கு அருகில் அமர்ந்தாள், நாகமுத்து. சுற்றி வளைத்து மச்சாள் முறை என்று அவளே சூழ இருந்தவர்களுக்குப் பறைசாற்றிக் கொண்டாள். ''ங்ம்'' செல்லம்மாக் கிழவி அடித்தொண்டைக்குள் முனங்கினாள். விளக்கம் கொடுத்தாள் மகள் கமலம்.

''அவவுக்கெங்க ஆக்களைத் தெரியுதா? குரலிலை மட்டுக் கட்டியிருப்பா.''

''பின்னை என்ர குரலைத் தெரியாமலா இருந்திருக்கும்? என்ன நினைவு தப்பினாலும் என்ர நினைவு தப்புமா? சீதேவி இருந்த இருப்பென்ன! வளர்ந்த வளர்ப்பென்ன! கிடக்கிற கிடப்பென்ன! பெருமையடித்துவிட்டு ஒரு நெளிப்புடன் திரும்பி அமர்ந்தவள் கோப்பியைக் குடிப்பதில் கவனமானாள்.

செல்லம்மாக்கிழவியின் காலடியிலேயே சோகம் கப்பிய முகத்துடன் அமர்ந்திருந்தாள் பேத்தி- கமலத்தின் ஒரே மகள். அந்தச் சிறுமியின் மனம் பாரமான நினைப்பில் அடித்துப்போட்டதுபோல் இருந்தது.

வண்ணாரத் தங்கம் வந்தாள். கிழவியின் மீது தனக்குள்ள வாஞ்சையை வெளிப்படுத்த இதுதான் தருணம் என்று நினைத்தவள்போல் கிழவியின் பேத்தியைப் பார்த்துக் கூறினாள்.

''தங்கச்சி, ஆச்சியை நான் எங்க வீட்டை கொண்டு போகட்டே?''

''வேணாம்'' என்பது போல் தலையை அசைத்தாள். வண்ணாத்தியின்ர நினைவைப் பார்' என்பது போல் சுற்றியிருந்தவர்கள் முகம் சுழித்தார்கள்.

''நான் ஆச்சியைக் கொண்டுபோகத்தான் வந்தனான் ''

ஒடுங்கிக் கொண்டே போன செல்லம்மாக் கிழவியின் உணர்வுப் பொறிக்குள் ஒரு இடி.

''நான் ஆச்சியைக் கொண்டு போகத்தான் வந்தனான்.

வந்திருப்பது யாரென்பது கிழவியின் புலனுக்குப் புரியவில்லை. தங்கத்தின் குரல் மட்டும் மீண்டும் மனச்சுவருள் எதிரொலித்தது. குரலின் திசையில் யமதூதர்களே வலை விரிக்கக் காத்திருப்பதுபோல் இருந்தது.

''மாட்டன்; வரமாட்டன்.'' கிழவியின் சர்வாங்கமும் ஒடுங்கியது ''நான் 'வரமாட்டன்'' வார்த்தைகள் வெளிவரவில்லை. வாய்மட்டும் ஆடியது.

பார்த்தீங்களா? அவவும் வாறதெண்டு சொல்லிறா. என்னிலை எப்பவும் அவவுக்குப் பற்றுதல்." பெருமையடித்துக்கொண்டாள் தங்கம்.

'அவவும் வாறதெண்டுதான் சொல்லிறா' தங்கத்தின் வார்த்தைத் துண்டுகள் மட்டும் நாராசமாகக் கிழவியின் உணர்வுப் பொறிக்குள் இடிமேல் இடியாக,

கிழவிக்கு உதறலெடுத்தது. '' பரியாரியார்! பரியாரியார்''

கள்ளுண்ட மயக்கத்தில் கிடந்த வல்லிபுரப் பரியாரியார் ஓடி வந்தார்.

'' குளிர்க் குணம்; வாய்வுச் சேட்டை; ம் யோசிக்க வேண்டித்தான் இருக்குது.'' தேன் எடுப்பித்தார். எதையெல்லாமோ கலந்தார். அவர் மருந்தைப் பருக்கியபின் தங்கமும் விடை பெற்றுக் கொண்டு போய்விட்டாள். செல்லம்மாக் கிழவிக்கு இப்போது பதட்டமில்லை.

மறுநாள் காலையில்தான் தகவல் கிடைத்து, கொழும்பிலிருந்து வந்துசேர்ந்தான் கிழவியின் ஒரே மகன். வந்ததும் வராததுமாக ''தானம் கொடுக்க வேண்டும்'' என்ற கோரிக்கையை விடுத்தார் ஒரு பக்திமான்.

''இப்படி அம்மா நாலைஞ்சு தரம் இந்தா, அந்தா எண்டு கிடந்தவதானே. முந்தியுமொருக்கா தானம் குடுத்திருக்கிறம்'' என்றான் மகன்.

''இல்லைத் தம்பி; இந்தமுறை அம்மா சாகத்தான் போறா; என்ர மனமும் சொல்லுது. ஏன் அந்தக் குறையை விடுவான்.''

பசுக்கன்றைப் பிடித்துவந்து முற்றத்தில் கட்டிவிட்டு ஐயரை அழைத்துவரப் பேரன் புறப்பட்டுவிட்டான்.

''அம்மா சாகத்தான் போறா. அவவை நல்லா அனுப்பவேணும்.'' தம்பியிடம் கமலம் கூறுவது கிழவிக்கும் கேட்டது.

கோபமும் எரிச்சலும் போட்டியிட முகத்தைச் சுழித்தாள். அவளது முகச்சுழிப்பைப் பார்த்து ''என்ர மருந்து வேலை செய்யுது'' என்றார் பரியாரியார். கிழவியின் மகனி

டமும் பணம் கறக்க முடிவுசெய்து விட்டார் என்பது அதன் அர்த்தம்.

பஞ்சகல்யாணிக் குதிரையில் கிழவியின் பேரனை ஏற்றிக்கொண்டு விரைந்து வந்தார் ஐயர். தானம், திவசம் என்றால் ஐயரின் சைக்கிள் பஞ்ச கல்யாணிக் குதிரை தான். இரண்டு வருடங்களுக்குமுன் இதேபோல் ஐயரை அழைத்துவந்து பசுக் கன்று கொடுத்தனுப்பியதையும் ஆச்சி பிழைத்து எழுந்ததையும் நினைத்துப்பார்த்த பேரனுக்குச் சிரிப்பு வந்தது. அடக்கிக்கொண்டே கேட்டான்;

''ஐயா, சாகிறவை மோட்சத்துக்குப்போறதுக்குத்தானே தானம் குடுக்கிறது?'' ஓம் ஓம் ' ஐயருக்கு மகிழ்ச்சி இளைய தலைமுறையிலே ஒருத்தனென்றாலும் விஷயம் புரிந்து வர வேற்கிறான்.

''தானம் குடுக்கிறம், ஆச்சி சாகாமல்விட்டால், வாங்கிற பசுக்கன்றையெண்டாலும் திருப்பித் தருவீங்களா? அவ சாகாம மோட்சம் போறதெப்பிடி? போனமுறையும் ஒரு பசுக்கன்று கொண்டுபோனியள்'.'

''தம்பி, உப்மோட கதைக்க ஏலாது. இப்பத்தைய பெடியள் கண்டதையும் படிச்சுப்போட்டு...''

எல்லாம் விரைந்து முடிந்தது பசுக்கன்றுடன் ஐயர் புறப்பட்டுவிட்டார்.

இரவு, பெற்றோமாக்ஸ் வெளிச்சத்தில் வீடு மூழ்கிக் கிடந்தது. முற்றத்திலிருந்த வாங்கில் அமர்ந்திருந்து ஏழெட்டு ஆண்கள் சீட்டாடிக்கொண்டிருந்தார்கள். கிழவியின் கால் மாட்டிற்கு இப்பால் நாலைந்து குமர்ப் பெண்கள், சினிமாக் கதை அளந்துகொண்டிருந்தார்கள். கிழவியைச் சுற்றியிருந்த வயதான பெண்கள் ஊர்க்கதைப் பிரசங்கத்தில் ஆழ்ந்து விட்டார்கள்.

பரியாரியார் 'கள்ளு' வேண்டாம்; 'கறுப்பு'த்தான் வேண்டும் என்று அடம்பிடித்து வென்றுவிட்டதன் விளைவாக உலகையே மறந்து விழுந்துகிடந்தார். கிழவிக்காகக் கூடியிருந்தவர்களில் யாருக்குமே கிழவியின் நினைவு இல்லை. கிழவி தனித்து விடப்பட்டாள். நாலைந்து தேவாரங்களைப் பாடக் கேட்டாலாவது மனம் அமைதிப்படும். இப்போது அமைதியைக் குலைத்துக் கொண்டிருந்தது இளைஞர்களின் சினிமாப் பாட்டு. கிழக்குச் சாருக்குள் இருந்து அவர்கள் பாடிக்கொண்டிருந்தார்கள்.

கிழவிக்குத் தன் நினைப்பிலே தவிப்பாக இருந்தது. உயிர் உடலுடனேயிருக்க உள்ளம்மட்டும் தனி உலகத்துக்கு ஓடிவிட்டது. இத்தனை அவலத்துள்ளும் அந்த உலகத்தில்தான் எவ்வளவு அமைதி!

தனது தாய், படுத்த படுக்கையாகக் கிடந்த அந்த நாட்களை நினைத்துப் பார்க்கிறாள், செல்லம்மாக்கிழவி.

ஒரு நாளா, இரண்டு நாளா! மூன்று வருடங்கள்! படுத்த படுக்கையாகச் சலம் வலத்துக்குக்கூட எழுந்து செல்ல முடியாமல் கிடந்தாள் தாய். சிறிதுகூட மனம் சலிக்காமல் கடவுள் திருப்பணிபோன்ற பயபக்தியுடன் கடமை செய்தாள் செல்லம்மா.

''என்ர சீதேவியை விட்டிட்டு நான் எங்க போவன்?'' என்று தாய் கூறும்போது செல்லம்மாவின் உச்சி குளிரும்.

அந்த நாள்... இப்போதைய வல்லிபுரப் பரியாரியின் தகப்பன் அருணாசலப் பரியாரி வந்து 'உண்மையாகவே இரண்டு தவணை சொன்னதும், ஐயருக்குத் தானம் கொடுத்ததும், இரவு பகல் என்று பாராமல் தான் தேவாரம் பாடிக் கொண்டு கண்ணிலே வாய்க்கால் கட்டி ஆறு வழிந்தோட இருந்ததும், இப்போதுபோல் கண்முன்னே தெரிகின்றன. சோகமே வடிவங்களாய் உற்றார் உறவினர்களெல்லாரும் கூடியிருந்து சொந்தத் தாயாகவே எண்ணி அவள் உயிருக்காக மன்றாடிக் கொண்டிருந்ததும்...

''ம்'' செல்லம்மாக் கிழவியின் பெருமூச்சு. இன்றைய அவலத்தைப் பார்த்த அவள் ஆத்மாவின் துயரமூச்சு.

''இழுக்குது, முடியப் போகுதுபோலை.'' பலரும் கிழவியை மொய்த்தார்கள்.

எப்போது போவாள் என்று காத்துக் கிடப்பவர்களை நினைக்க வேதனை மிகுந்தது செல்லம்மாக் கிழவிக்கு. பிணந் தின்னிக் கழுகுகளின் நடுவே அகப்பட்டுவிட்டது போன்ற உணர்வு. மற்றவர்கள்தான் அப்படியென்றாலும் பரவாயில்லை. தான் பெற்று வளர்த்த பிள்ளைகள்

கிழவி இன்னும் சாகவில்லையே என்ற ஏமாற்றத்தோடு கிழவியை விட்டு விலகியவர்கள் தங்கள் தங்கள் பொழுது போக்குகளில் மூழ்கிவிட்டார்கள்.

''நாகம்மா மச்சாளைக் காணயில்லை, ஊர் முழுக்க வந்திட்டுது, ம்.'' கமலம் பிரச்சினை கிளப்பினாள்.

''அவவுக்குப் பழைய கோவமிருக்கும். மகளின்ர சாமத்தியச் சடங்குக்கு நாம போகயில்லை'' தம்பி காரணம் கூறினான்.

''ஓமோம், அவவும் ஒழுங்கா உறவெண்டு கொண்டாடினால் எல்லோ! அம்மா செத்தவுடன், கட்டி அழ வருவாதானே, அப்ப பேசுவம்.'' கமலம் சபதமெடுத்தாள். எப்போது தாய் சாவாள்; சபதத்தை நிறைவேற்றலாம் என்பது போல் இருந்தது அது.

செல்லம்மாக் கிழவியால் தாங்க முடியவில்லை.

கோபங்கள் தாபங்கள் என்று எதையுமே பாராமல் உறவினரெல்லாம் கூடியிருக்க, பால் பருக்கிய கையோடு தாயின் உயிர் பிரிந்து போனதை நினைந்துப் பார்த்தாள், செல்லம்மாக் கிழவி. ''ம் சீதேவி போனாள், அண்டைக்குப் பிடிச்ச சனியன்தான்'' என்று மனம் வெதும்பியது. தனக்கெண்டிருந்த கணவனின் அணைப்பும் போய்விட, அதனால் அவள் இன்று எப்போது சாவாள் என்று ஆசை

யோடு காத்திருக்கிறார்கள். இந்த உலகத்திலே தனித்துப் போய் இருக்க வேண்டி வந்துவிட்டது. சுற்றியிருப்பவர்க ளிடம் தோற்றுவிட்டுப் போய்விட விரும்பாமல் இரண்டு நாட்களின் பின் செல்லம்மாக்கிழவி எழுந்து உட்கார்ந்து விட்டாள். கிழவிக்கு இப்போது நல்ல சுகம் என்பதைக் கண்டுகொள்ளப் பரியாரியார் தேவையில்லை. வருத்தம் பார்க்க வருபவர்களிடமெல்லாம் ''எப்படி? சுகமா இருக்கிறி யளா ?'' என்று கேட்கும் நிலைக்குக் கிழவி வந்துவிட்டாள் என்றால் ...

இனியும் ''தவணை''க் கதையுடன் இங்கேயே படுத்துக் கிடக்க முடியாதென்பதால் தன் மருந்துகளின் மாண் பைப் பற்றிப் பிரசங்கம் செய்துவிட்டு பணத்தை வறுகிக் கொண்டு வல்லிபுரப் பரியாரியார் போய்விட்டார்.

விழா முடிந்த மண்டபம் போல் இருந்தது வீடு. நாலைந்து பேர்தான் கூடியிருந்தார்கள்.

''எனக்குத் தெரியும் அம்மா சாகமாட்டாவென்று. அவ முதலே கனவில் சொல்லியிருக்கிறா. சித்திரைக்குத்தான் போவனெண்டு. அதுக்கு முந்தி ஒருநாளும் போகமாட்டா சித்திரைக்குத்தான்.'' கமலம் மகிழ்ச்சியோடு கூறினாள்.

மகிழ்ச்சியா? சித்திரைக்கும் இன்னும் இரண்டே மாதங் கள்தானே இருக்கின்றன. இப்படிக் கூறித் திருப்திப்படுத்த முனைகிறாளா?

செல்லம்மாக் கிழவிக்கு மகள் கூறிய வார்த்தைகள் சம்மட்டி அடியாக நெஞ்சில் விழுகின்றன. ஒரு கவளம் சோற்றுடன் மூலையில் கிடக்கின்ற நானென்ன அவளுக் குப் பெரிய பாரமா? தீராச்சுமையென்றல்லவா இறக்கிவைக்கத் துடிக்கிறாள்! அந்தக் காலத்தில் இரண்டு வருடங்கள் அம்மாவைப் படுக்கையில் வைத்து பராமரித் தேன். நான்.

இன்று? ......

ஏதோ ஒன்றிரண்டு நாட் படுக்கையில் விழுந்ததற்கே...

''அக்கா, பொங்கல் வியாபாரமும் நான் இங்க வந்த தாலை பழுதாப் போச்சுது. இனிச் சித்திரைக் கெண்டால் வருசப் பிறப்பு வியாபாரம். அம்மா கட்டாயம் போவா வெண்டால்தான் அறிவிக்க வேணும்'' என்றான் மகன் தமக்கையிடம்.

செல்லம்மாக் கிழவியின் இதயத்தில் 'சுள்' ளென்று வலித்தது.

வாழ்க்கையே நஞ்சாக ... சித்திரை யென்ன, அதற்கு முதலே இந்த உலகத்தைவிட்டே போய்விடவேண்டும் போல் ஆசை துளிர்த்தது. வாழவேண்டும் என்ற நினைப் பையே இழந்துவிட்டுச் செல்லம்மாக் கிழவி சாவுக்குக் காத்திருந்தாள்.

அவள் வாழ நினைத்த காலமும் ஒன்றிருந்தது. அது அந்தக் காலம்!

சீதேவிகள் வாழ்ந்த காலம்! இது?...... ☐

— சுடர் 1979

# கே. ஆர். டேவிட்

டேவிட் அவர்கள் 1963 இல் எழுத்துத் துறைக்கு வந்தவர். சிறுகதை, குறுநாவல், நெடுநாவல் எனப் புனைகதைத்துறையின் மூன்று கிளையிலும் இவரது பேனா படர்கின்றது. ஆயினும், தமது உணர்வுகளின் பன்முகப் பரிமாணங்களையும் காட்டுவதற்குச் சிறுகதையையே பொருத்தமான ஊடகமாக டேவிட் பயன்படுத்துகிருர்.

ஏறக்குறைய எண்பது சிறுகதைகள், ஐந்து குறுநாவல்கள், ஒரு நெடுநாவல் என்பன இவரது படைப்புக்கள் ஆகும் 'வரலாறு அவளைத் தோற்று விட்டது' இவர் எழுதிய நெடுநாவல். இது வீரகேசரிப் பிரசுரமாக ( 1976 ) வெளியாயிற்று. மலையகத்துத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைப் போராட்டத்தின் ஒரு கோணம், இதன்கரு.

டேவிட் அவர்கள் ஆசிரியராகத் தொழில் புரிகிருர். தமது உத்தியோகம் காரணமாக நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் பல ஊர் மக்களிடையேயும் பழகியும் வாழ்ந்தும் இவர் பெறும் பல்லினமான அவதானிப்புகளும் உணர்வுகளும் இவருடைய கதைகளில் வீறுடன் விகசிக்கின்றன

சமுதாய அநீதியொன்றை ஆத்திரத்துடன் சுட்டிக் காட்டி, அதன் மேலே கறுவுகின்ற கதை. பிள்ளையின் அழுகைக் குரலோடு, உழைப்பவனது உயர்வுக்கான எழுகைக் குரலும் கதையிலே கேட்கிறது! மனித குல மேம்பாட்டுக்கான தமது அரசியற் சார்பு நிலையைக் கதைஞர் துல்லியமாகக் காட்டி நிற்கிறார் சீராக ஒலிக்கிறது, கதையின் நாடித்துடிப்பு. அதற்கு ஒத்திசைவாக அமைகின்றன, செட்டான சொல்லாட்சியும் முனைப்பான கதைவளர்ச்சியும்.

# காலம் ஒரு தூரிகை

**கா**ல்கள் முடமாகிப் போன ஒருவன், கைகளைக்கால்களாக்கி சிறுகச் சிறுக நகர்வது போல், கனகம் சிறுகச் சிறுக நகர்ந்து, கொச்சி மரங்களிலுள்ள கொச்சிப் பழங்களை ஒவ்வொன்றாகப் பிடுங்கிக் கடகத்தில் போட்டுக் கொண்டிருக்கின்றாள்.

கனகம் முடமாகிப் போனவளல்ல.

அவள் நிறைமாதக் கர்ப்பிணி; இன்றோ நாளையோ அவள் தாயாகப் போகின்றவள்.

அந்த வயிற்றுச் சுமையைத் தாங்கி நின்று கொச்சிப் பழங்களைப் பிடுங்க அவளால் முடியவில்லை. அதிலும் இப்போது தான் அவள் முதல் முறையாகக் கர்ப்பிணியாகியிருக்கின்றாள்.

அனுபவமில்லாத புதிய சுமை!

ஆதவனின் ஆதிக்கம் மேற்கு வானத்தில் அடங்குகின்ற நேரம்; கிட்டத்தட்ட ஆறு மணி.

அவன் கணேசன் — கனகத்தின் புருஷன் — தோட்டத்திலுள்ள அறையில் மலைபோற் குவிக்கப்பட்டிருக்கும் செத்தல் மிளகாயைச் சாக்குகளில் நிறைத்து நிறுத்துக்கொண்டிருக்கின்றான்.

கணேசனும், கனகமும் இத்தோட்டத்தில் சீவியம் நடத்தும் நிரந்தரக் கூலிகள்.

இத்தோட்டத்து நிலமும், இந்த நிலத்தில் விளைகின்ற விளைச்சலும் இன்னொருவருக்குச் சொந்தம். ஏனைய சகல வேலைகளும் கணேசனுக்கும் கனகத்துக்கும் சொந்தம்!

இந்த நிலச் சொந்தக்காரர் மகேசன் முதலாளி.

கணேசன் இயந்திர வேகத்தில் செத்தல் மிளகாயைச் சாக்கில் நிறைத்து நிறுத்துக்கொண்டு நிற்கிறான். மகேசன் முதலாளி பேனையையும், பேப்பரையும் வைத்துக்கணக்குப் போட்டுக்கொண்டு நிற்கின்றார்.

செத்தல் மிளகாய் வாங்க வந்த வியாபாரிகளும் நிற்கின்றனர்.

உழைக்காமல் லாபத்தைப் பெறுவோர் இருவகையினர், ஒருவர் முதலாளி, இன்னொருவர் வியாபாரி! ஆனால் உழைப்பாளி!......?

தனக்குச் சேராத உழைப்பு என்பதைக் கணேசன் உணர்ந்தாலும், தனது உழைப்பில் கிடைத்த ஊதியம் என்ற தொழில் உணர்வில் அவன் மிகவும் மகிழ்ச்சியோடும் உற்சாகத்தோடும் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றான்.

கால்களிருந்தும் முடத்தியைப் போல் நிலத்தில் அரைந்து மிளகாய்ப்பழம் பிடுங்கும் கனகத்தை எவருமே கண வில்லை. ஏனென்றால், மிளகாய்ச் செடிகள் செழித்து உயர்ந்து நிற்கின்றன.

கணேசனுக்கு மட்டுந் தெரியும்.

''கனகம்......இனிமேல் நீ வேலைக்கு வராதை ....'' இப்படி எத்தனையோ தடவைகள் கணேசன் சொல்லி விட்டான்.

''பிறந்ததிலை யிருந்து தொழில் செய்து பழக்கப்பட்ட உடம்பு .....சும்மாயிருக்க ஏதோ மதிரிபாய் இருக்கு.'' — இப்படித்தான் கனகம் கூறுவாள்,

கணேசன் கலியாணம் முடித்து ஐந்து வருடங்களாகின்றன. அன்று தொடக்கம் அவன் மனதில், தான் தகப்பனாக வேண்டுமென்ற எண்ணம் அடிக்கடி எழுவதுண்டு, அப்போதெல்லாம், நானோ பரதேசி, நானொரு பிள்ளையைப் பெத்து என்ரை பரதேசிக் கோலத்தை மேலும் வாழ வைக்க வேணுமா? என்னோடு என்ரை பரதேசிக் கோலம் முடிஞ்சு போகட்டும், எனக்குப் பிள்ளை வேண்டாம், இப்படியொரு எண்ணமும் தோன்றும், ஆனால் அடுத்த நிமிடமோ, அடுத்த நாளோ தான் தகப்பனாக வேண்டுமென்ற எண்ணம் திரும்பவும் தோன்றும்!

அவனுடைய ஆசையின் ஜனனிப்பும், சிந்தனையின் மரணிப்பும் ஒப்வதில்லை.

அவனது ஆசைப்படி கனகமும் கர்ப்பிணியாகி பூரணத்துவம் பெற்றுவிட்டாள்,

''ஏன் கணேசு, கனகம் எங்கை?'' மகேசன் முதலாளி கேட்கின்றார்

''மிளகாய்ப்பழம் ஆயிறா...''

''எங்கை?......''

''எட்டிப் பாருங்கோ. எங்கையாவது தலைக் கறுப்புத் தெரியும்.

''கனகத்துக்கு எது மாதம் ?''

'' இதுதானுங்க ''

''உனக்கு என்ன புள்ளை விருப்பம் ?''

''கனகத்துக்கு என்ன புள்ளை விருப்பம் ?'.

''...என்ன புள்ளை பிறந்தாலென்ன......புள்ளை என்ரை தானே.

''அது சரி... ஆனால், ஆம்பிளைப்புள்ளைதான் பிறக்க வேணுமெண்டு எனக்கு ஆசை ......'' மகேசன் முதலாளி தன் எண்ணத்தை வெளிப்படுத்துகிறார்.

''ஏன் முதலாளி அப்படி?'' ''பொம்பிளைப் புள்ளை யெண்டால் கலியாணம் முடிச்சு வேறை எங்கையாவது போயிடும். ஆம்பிளைப்புள்ளையெண்டால் கலியாணம் முடிச் சாலும் இந்தத் தோட்டசதிலே இருந்திடும் உனக்குப்பிறகு உன்ரை மகனை இந்தத் தோட்டத்திலேயே இருத்தலாம்'' மகேசன் முதலாளி சிரித்தபடி கூறினார்.

அவரது பேச்சில் புரையோடிப் போயிருக்கும் முதலாளித் துவ சிந்தனை...கணேசன் பாவம்.. அவனும் சிரிக்கிறான்! அர்த்தமற்ற வெள்ளைச் சிரிப்பு!

''உன்ரை ஐயாவும் இந்தத் தோட்டத்திலே தான் வேலை செய்தவர். நீயும் இந்த மண்ணிலைதான்...'' மகேசன் முதலாளி பெருமையோடு கூறுகின்றார்.

தலை முறை தப்பாத அதிகாரமும், தலைமுறை தப்பாத கூலிகளும்!

கணேசனின் தகப்பன் நமச்சிவாய முதலாளியிடம் வேலைக்குச் சேர்ந்துகொண்டான்.

நமச்சிவாய முதலாளி, கோணேசனுக்கு ஒரு கலியா ணத்தையும் செய்து, இந்தத்தோட்டத்திலே ஒரு செட் டிலையும் போட்டுக் குடியிருத்தினார்.

கோணேசனுக்குப் பிறந்த ஒரே மகன் கணேசன்; கணே சன் வளர்ந்து வாலிபனாக இருந்தபோது, கோணேசன்

இத்தோட்டத்தில் பயிர்களுக்கு மருந்து அடிக்கும்போது நச்சுக் காற்றுப்பட்டு இந்த மண்ணிலேயே இறந்துவிட்டான்.

கணேசனின் தாய் இன்னமும் இருக்கிறாள்.

கணேசனின் கலியாணத்தைக்கூட நமச்சிவாய முதலாளி தான் நடாத்திவைத்தார்; நமச்சிவாயர் கிழவராகி விட்ட தால், அவரது மகன் மகேசன் ஆட்சிக் கோலைப் பற்றியிருக்கின்றான்.

இப்பகுதியிலுள்ள அனேகமான தோட்ட நிலங்கள் மகேசனுக்குச் சொந்தமானவைகள்.

''ஏன் முதலாளி செத்தலை றாத்தல் என்ன விலையாய் குடுக்கப் போறியள்?''

''ஊரில் என்ன விலை நடக்குது?''

''றாத்தல் பதினைஞ்சு ரூபா''

''அப்ப நாங்களும் அப்பிடிக் குடுப்பம்.....''

''ஏதோ பாத்துப் போடுங்கோ முதலாளி... எங்களுக்கும் ஏதாலும் ஆதாயம் வேணுமே'' வியாபாரிகள் தங்கள் வழமையான ஒப்பாரியைத் தொடங்குகின்றனர்.

''எவ்வளவு கேட்கிறியள்?''

''றாத்தல்] பதின் மூண்டாய்ப் போடுங்க.''

''முதலாளி...இது அழுகிப்போற சாமானில்லை...பதின் மூன்று சரியான நட்டம். குடுக்காதேயுங்கோ.'' முதலாளிக் காக கணேசன் வக்காலத்து வாங்குகிறான். நியாயப்படி பார்த்தால் இந்தச் செத்தலுக்கு விலை பேசுகின்ற அருகதை கணேசனுக்குத்தான் உண்டு!

இந்தப் பொருளில் கிடைக்கின்ற லாபத்தில் தனக்கு எள்ளளவும் சேராதென்பது அவனுக்குத் தெரியும். இருந் தாலும் தனது உழைப்பென்ற தொழிலுணர்வு.

பெற்ற தாயைவிட, செவிலித் தாய்க்குத்தான் பிள்ளையில் பாசம் அதிகம்!

தாய் பெற்றிருந்தாலும், குழந்தையைப் பாலூட்டி, சீராட்டி வளர்ப்பது செவிலித்தாய்தானே !

செவிலித் தாயின் பாசத்தைக் குழந்தை வெளிப்படுத்தி விடும். கணேசனின் உழைப்பின் பெறுமதியை செத்தலால் உணர்ந்த முடியுமா?

''அப்ப பதிமூண்டரையாய்ப் போடுங்கோ...'' வியாபாரி கெஞ்சுகிறான்.

''ஒரு சதமும் குறையாது. பதினைஞ்சுதான்''.

''அப்பிடியெண்டால் எங்களுக்குக் கட்டாது......''

''அப்ப போங்கோ.''

''கடைசியாய் என்ன விலை சொல்லுறியள்?''

பதினாலரை.'' கணேசன் பதினைந்திலிருந்து பதினாலரைக்கு இறங்குகிறான்.

'' சரி ... அந்த அரையையும் விட்டு பதினாலாய்ப் போடுங்கோ.''

''உது சரிவராது. பதினாலரையில ஒரு சதமும் குறைக்கேலா .'' கணேசன் விடாமல் முதலாளிக்காக வாதாடுகிறான்.

சப்பாணிபோல் நிலத்தில் அரக்கி மிளகாய்ப்பழம் பிடுங்கிய கனகம் கடகத்தோடு வருகின்றாள்.

கண்கள் பஞ்சடைந்து, சேறும் சகதியுமாய், மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்க அவள் களைத்து நிற்கின்ற கோலம்! ...

வயிற்றுச்சுமையைவிட, வாழ்க்கைச் சுமையின் தாக்கத்தின் பிரதிபலிப்பு!

ஏழைகளாய் பிறப்பவர்கள் பெண்களாப் பிறக்க வேண்டும். ஏனென்ருல் கர்ப்பிணிக் காலங்களிலாவது ஏதோ பார்வைக்காவது வயிறு ஊதியிருக்கும்.

ஆண்களென்ருல் ......

நிரந்தரமாக ஒட்டியவயிறுதான் !

''என்ன கனகம் இவ்வளவு தான் பிடுங்கினியா ?'' கனகம் வைத்திருந்த கடகத்தை எட்டிப்பார்த்த மகேசன் முதலாளி கேட்கின்ருர்.

''என்ன முதலாளி என்னுலை ஏலாமல் கிடக்கு. இண்டைக்கு அமாவாசை. வயித்துக்கை ஏதோ மாதிரிக் கிடக்கு ...... கனகம் அலுப்புப்பட்டுக் கூறுகிருள்.

அமாவாசை —

இயற்கை நிகழ்ச்சி.

ஏழைகளின் கைவிளக்கு!

அவர்களால் எதையுமே நடத்தி விட முடியாது.

நடப்பதுதான் முடிவு! அது தான் மிச்சம்!

அதனுல்தான் கனகமும் அமாவாசை என்று அஞ்சுகிருள். இந்த அச்சத்துக்குப் பாதுகாப்பு ......? அதுவும் இயற்கையின் கையில்தான்.

''கனகம் ஆம்பிளைப் புள்ளையாய்ப் பெத்துப்போடு'' முதலாளி தனது கருத்தை மீண்டும் சிரிப்புடன் வலியுறுத்துகிருர்.

கனகமும் சிரிக்கிருள்.

எதுவுமே புரியாத வெள்ளைச் சிரிப்பு!

''கணேசு பதினுலாய்க் குடுப்பம்.'' மகேசன் முதலாளி விலையின் முடிவைக் கூறுகின்ருர், கணேசன் ஆட்சேபிக்கவில்லை.

ஒரு சாக்கில் ஐம்பது ரூத்தலாகப் பத்துச் சாக்குகள் கட்டப்படுகின்றன.

வியாபாரிகள் கொடுத்த பணத்தை ஒவ்வொன்ருக எண்ணியதில் முதலாளியின் பெருவிரலிலும், சுட்டுவிரலிலும் இலேசான — இதமான எரிவு!

கணேசனின் கைகளில் ... கைகள் மட்டுமா ! செத்தலை அள்ளியதால் உடலெல்லாம் எரிவு. அதிலும் நெருப்புத் தணல்பட்ட எரிவு!

செத்தல் வெக்கையைச் சுவாசித்ததால் ஓயாமல் தும்மி மூக்குச் சிவந்து, நீர் வடிகின்றது!

முதலாளியும் வியாபாரிகளும் புறப்படுகின்றனர்.

கணேசனும் கனகமும் அதே இடத்தில் அமர்கின்றனர்.

'' உடம்பெல்லாம் எரியும். நீ போய்க் குளிச்சிட்டு வாவன்'' கனகம் கூறுகிருள்.

''கையெல்லாம் எரியுது ..... துலாக்கொடி புடிச்சு தண்ணி அள்ளேலாது'

''அப்ப என்ன செய்யப் போகிருய் ?''

''என்ரை கையுச்கு கொஞ்சம் நல்லெண்ணை தடவிவிடு,

தோட்டத்தின் நடுவிலுள்ள தங்கள் குடிசைக்குச் சென்று, கனகம் கணேசனின் கைகளுக்கு நல்லெண்ணெய் தடவுகிருள்.

விடியற்புறம் நான்கு மணி

கனகத்துக்கு வயிற்றுக்குத்து. கர்ப்பிணிகளுக்கு வருகின்ற நோக்காட்டுக் குத்து.

''தம்பி, கனகம் கன்னிப் புள்ளைத்தாச்சி. வீட்டிலை வெச்சுப் பெறுவிக்கேலாது. ஆசுப்பத்திரிக்குத்தான் கொண்டு

போகவேணும். ஓடிப்போய் காரொண்டு புடிச்சுக்கொண்டு வா " கணேசனின் தாய் கூறுகிறாள்.

துவாயை உதறித் தோளிற் போட்டுக் கொண்டு கணேசன் புறப்படுகின்றான்.

அமாவாசை இருட்டு.

கை எரிவு இன்னும் மாறவில்லை.

இதுவரை அப்பகுதியில் பழகிய அனுபவத்துணையோடு அவன் நடக்கின்றான்.

மகேசன் முதலாளியின் வீடு. முதலாளி எழுந்து வருகின்றார்.

"என்ன கணேசன்?"

"கனகத்துக்கு வயித்துக்குத்து, முதலாளி ..."

"அதுக்கு இஞ்சை ஏன் வந்தனி? ஆசுப்பத்திரிக்குக் கொண்டுபோவன்."

"அதுதான் முதலாளி ... காசுவேணும் ..."

முதலாளி மௌனமாக நிற்கிறார், அவரது மௌனம் கணேசனைப் பயமுறுத்துகின்றது.

"என்ன முதலாளி! ..."

"என்னட்டை இப்ப காசில்லையே ..."

"என்ன முதலாளி சொல்லுறியள்! ...

"உண்மையைத்தான் சொல்லுறன். மிளாகாய் வித்த காசை ஒராளுக்குக் குடுத்திட்டன்"

"என்ன முதாலாளி நான் மாடுமாதிரி உங்கடை தோட்டத்திலை பாடுபடுகிறன். இந்த நேரத்திலை இப்பிடிக் கையை விரிச்சுப் போட்டியள்!" கணேசன் சிறிது கோபமாகவே கதைக்கிறான்.

''ஏன் கணேசா, உன்ரை கூலிக்காசிலே நான் ஏதாலும் தருமதி இருக்கா ?

''இல்லே.''

''பிறகென்ன! இல்லையெண்டால் போகவேண்டியது தானே . '

'' ... முதலாளி, என்ரை மனச்சாட்சி உங்களிட்டைப் போகச் சொல்லிச்சிது, வந்தன் உங்கடை மனச்சாட்சிப்படி நீங்கள் என்னை வெளியிலே போகச் சொன்னால் நாம் போறன்...''

''...கனகம் புள்ளை வயித்தோடை பாம்பு போலை அரைஞ்சரைஞ்சு மிளகாய்ப்பழம் பிடுங்கினாள். அவள் அரைஞ்ச தழும்புகூட இன்னும் அந்த மண்ணிலை கிடக்குது. செத்தல் அள்ளினதிலை என்ர கையிலை ஏற்பட்ட எரிவு... அதுகூட இன்னும் மாறவில்லை ... முதலாளி... நாங்கள் உழைச்சுத் தந்த பணத்திலை நிண்டுகொண்டு எங்களையே உதைக்கிறியள்'...

''நன்றி கெட்ட மனிசன் நீங்கள்!''

கணேசன் ஆவேசத்தோடு கூறினான்.

''வெளியிலை போடா ! நீ போனாலென்ன! உன்னைப் போலை ஆயிரம் பேரை நான் புடிப்பன்.''

''முதலாளி, என்னைப் போலை ஆயிரம் பேரில்லை லட்சக்கணக்கானவை இந்த மண்ணிலை இருக்கினம்''

கணேசன் வெளியேறுகிறான்.

தோட்டத்துக் குடிசைக்கு வருகிறான்.

''அம்மா... கனகத்தையும் கூட்டிக் கொண்டு வெளியிலை வா...!''

''ஏனடா?...'' கணேசனின் மாற்றத்துக்குரிய காரணத்தை அவனது தயாலே புரிந்துகொள்ள முடியவில்லை.

''இந்த மண்ணிலை என்ரை புள்ளை பிறக்கக் கூடாது...''

' ஏனடா! ..''

''இது ஒரு நன்றி கெட்டவனுக்குச் சொந்தமான மண்.''

''நீ என்னடா சொல்லுறாய்!,'

கணேசன் நடந்தவற்றை விளக்குகிறான்.

''அம்மா கனகத்தையும் கூட்டிக்கொண்டு வா. எங்கயாவது போவோம்...''
கணேசன் கூறுகிறான், தாய்மௌனமாக நிற்கிறாள்.

''என்னம்மா நிக்கிறாய்...''

''கணேசா, இந்தப் பூமியிலை உனக்கெண்டு சொந்தமாய் ஒரு பிடி மண்ணாவது இருக்கா?''

'' இல்லையம்மா.''

'' பிறகு... எங்கைதான் போகப்போறாய்?''

''எங்கையாவது போவம்!''

''இந்த மண்ணை விட்டு உன்னாலை போக முடியுமே தவிர உன்ரை பரதேசிக் கோலத்தை விட்டுப் போக உன்னால் முடிமா?''

''என்னம்மா சொல்லுறாய்?''

''எடேய்! எங்களைப் போல கூலியாளின்ர முடிவு இது தானடா. இது மண்ணிலை உள்ள முரண்பாடில்லை. மனிசன்ரை அமைப்பிலை உள்ள முரண்பாடு...எங்களைப்போல் கூலியள் எங்கை போனாலும் முடிவு ஒன்றுதான்... அந்த முடிவு இந்த மண்ணிலேயே நடக்கட்டும்''

''அப்படியெண்டால்...''

''மகேசன் முதலாளி நன்றி கெட்டவன். அவனை வேண்டாமென்டிட்டு நாங்கள் போகலாம் ஆனால், நாளைக்கு இன்னுமொரு முதலாளியிட்டைத்தான் கூலியாளாய் இருக்கப்போறம், முதலாளிமாரை மாத்திப் பிரயோசனமில்லை. எங்களிலை மாற்றத்தை நீயும் நானும் மட்டும் செய்யேலாது...''

கணேசனின் தாய் அமைதியாகக் கூறுகிறாள்.

கணேசனால் பேச முடியவில்லை.

கனகக்கின் முனகல் ஒலி, கணேசனின் தாய் குடிசைக்குள் செல்கிறாள்.

நிமிடங்கள் நகர்ந்து கொண்டிருக்கின்றன.

பூமியைத் தழுவிய புதிய உயிரின் அழுகைக் குரல் குடிசைக்குள் கேட்கின்றது!

ஆண் குழந்தை!

இதுவரை பூமியையும் அதிலுள்ள பயிர்களையும் பார்த்த கணேசன் இப்பொழுது வானத்தைப் பார்க்கிறான்.

சிந்தனைக் கதவுகள் அசைகின்ற ஒலி......

'காலம் ஒரு தூரிகை.

அதன் வரைவுகள் அநித்தியமானவை;

ஒரு பொழுதில் அத்தூரிகையினால் வரையப்படும் வரைவுகள் மறுபொழுதில் அத்தூரிகையினாலே அழிக்கப்படும்...

மண்பார்த்த கூலிகளின் வாழ்க்கை இருள்மயமானது;

இத்தூரிகையின் வரைவுகளில் இதுவும் ஒன்று!

இத்தூரிகையே இந்த இருளை அழிக்கும்;

அழிக்கவைக்கும் சக்தி வேறு யாரிடமுமல்ல, மண் பார்த்த கூலிகளிடமே நிறைந்து கிடக்கின்றது,

என்றோ ஒரு நாள் கணேசனின் செவிப்பறையை அதிர்த்து அவனது இதயத்தில் புரையோடிப்போன இந்த வாக்கியங்கள் இப்போது போர்ப் பேரிகையாய் அவனது இதயத்தை அதிர்க்கின்றது!

அவனது பார்வை இன்னமும் வானத்திலேயே நிலைத்து நிற்கின்றது.

— சுடர் 1979

# எம். எல். எம். மன்சூர்

கண்டி மாவட்டத்தில் அமைந்திருக்கும் உடுநுவரை மன்சூர் அவர்களது சொந்த ஊர். 1950இல் பிறந்த இவர் தமது பதினெட்டவாது வயதில் இலக்கிய உலகில் பிரவேசித்தார். இதுவரை 15 சிறுகதைகள் படைத்துள்ளார். இக் கதைகளிற் பெரும்பாலானவை கண்டிப் பிரதேசக் கிராம முஸ்லிம்களது வாழ்க்கையின் நெளிவு சுழிவுகளைச் சித்திரிப்பவை.

வீரகேசரியில் (1978) பிரசுரமான 'முரண்பாடுகள்' என்னும் இவரது சிறுகதை, அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மகா நாட்டின் போது வெளியிடப்பட்ட (கொழும்பு, 1979) 'பிறைப்பூக்கள்' என்னும் சிறுகதைத் தொகுப்பிற் சேர்க்கப்பட்டது. பின்னர், இக் கதையைச் சென்னையிலிருந்து வெளிவரும் 'பசுங்கதிர்' மாத இதழ் மறு பிரசுரஞ் செய்தது.

திரு. மன்சூர் ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்ததாகிய, கிரீஷ் கர்னாட்டின் 'துக்ளக்' நாடகம் க. பலேந்திராவின் நெறியாள்கையில் (1982) மேடையேறியது.

சில சிங்களச் சிறுகதைகளை இவர் தமிழாக்கம் செய்துள்ளார்.

மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பகுதியில் பணிபுரியும் மன்சூர் அவர்கள், அப்பகுதி வெளியிடும் 'பொருளியல் நோக்கு' சஞ்சிகையின் பொறுப்பாசிரியராவர்.

"வெறுமையும் சூனியமும் ஊழி ஊழிக்கால நிசப்தமும் ஆட்சிசெலுத்தும் அகண்டதோர் பாலை வெளி என் கண்ணெதிரே விரிகின்றது! கொடிய அந் தப் பாலை நிலத்தின் சுடுமணலில் என்னுடைய துயரம் தோய்ந்த நாளைய தினங்கள் புதையுண்டு தெரிகின் றன!" புறவுலகின் அபசுரங்கள் வந்து கலந்துவிடாத ஓர் உள்ளத்திலே வறுமை, இளமை, அழகு, ஆசை கள், இயலாமையின் ஏக்கம் ஆகியவை சங்கமித்து அலைமோத எழுகின்ற உணர்ச்சிப் பெருக்கு இந்தக் கதையின் நாதம். இதமான எளிய மொழிநடை இதன் லயம்.

# 'பூக்காடுகள் மீட்டும் முகாரி ராகங்கள்'

'இதோ இன்னொரு புதுநாள் விடிந்து விட்டது. இது இதற்கு முன்னர் இருந்ததுமில்லை. இனிமேல் வரப்போவது மில்லை. சரித்திரத்தில் ஒரே ஒரு முறை இன்று மட்டுந்தான் இது வருகின்றது.

பாயிஸ் நானா தந்த புத்தகத்தில் இருந்த வரிகள் என் நினைவில் ஒலிக்கின்றன. என்னைப் பொறுத்த வரையில், இந்த வாசகத்துக்கு எந்த முக்கியத்துவமுமில்லை. நேற்றி லிருந்து இன்றையையும், இன்றிலிருந்து நாளையையும் பிரித்துணர்ந்து வித்தியாசம் கண்டு கொள்ள முடி

யாத அளவுக்கு என்னுடைய நாட்கள் ஒரே மாதிரியாக ஜனித்து, ஒரே வழியில் பயணித்து இரவின் இருட்டில் சுவடு களின்றி மரணித்துவிடுகின்றன.

''ராகிலா; வாப்பாட சட்டயேம் சாரத்தேம் நீலம் போட்டு கழிகிவை. ராவக்கி கலியாணத்துக்குப் போர துக்கு.''

உம்மாவுக்கு மெதுவாகப் பேசத் தெரியாது...நாலு வீடு கேட்கவே பேசிப்பழகிவிட்டது.

''உம்மா கொஞ்சம் மொள்ளப் பேசுங்கோ.'' என்று சொல்லி விட்டால் போதும். அவவுக்குப் பொல்லாத கோபம் வந்துவிடும். ''என்ன மட்டுப்படுத்தேலுமோடி ஒனக்கு?'' என்று வந்த ஆவேசத்துடன் கத்தத் தொடங்கி விடுவார். கேட்டுக்கொண்டிருப்பவர்கள் என்ன நினைப்பார்கள். வெட் கம் என்னைப் பிடுங்கித்தின்னும்.

வாப்பாவும் சரியானபயம் உம்மாவுக்கு. எனக்கு உம்மா வின்மீது அப்படி யொன்றும் ஆசையில்லை. வாப்பாவை நினைக்கும் போது தான் கவலையாக இருக்கின்றது. வாப் பாவுக்கும் என்மீது சரியான பிரியம். எனக்கு இன்னும் கலி யாணம் ஆகாதது பற்றி உம்மாவை விட அவருக்குத் தான் கவலை அதிகம்.

எப்போதாவது இரவுகளில் தூங்கப் போகும் போது உம்மாவிடம் அவர் சொல்வது எனக்கும் கேட்கும்.

''ராகிலாட விஷயத்தச் சுருக்க முடிச்சிடோணும்.'' உம்மா குரலை உயர்த்திப் பதில் சொல்வார்.

''நீங்க ஒப்பிடிச் செல்லி செல்லி அவள் கெழவியகங் காட்டீம் இரீங்கோ; பீடியைக் குடிச்சிக் குடிச்சி.''

இதைக் கேட்கும் பொழுது எனக்கு அழுகைதான் வரும். அதன்பிறகு அவர் ஒன்றும்பேசமாட்டார். தூக்கம்

வராமல் நான் நீண்ட நேரம் புரண்டு கொண்டிருப்பேன். தூக்கத்திலும் எனக்கு பயங்கரமான கனவுகள் வரும். எத்தனை இரவுகளில் என்னை பென்னம்பெரியதொரு யானை துரத்தி வந்திருக்கிறது. கூக்குரலிடுவதற்கு நான் வாயைத் திறக்கிறேன். ஆனுல் சத்தம் வராமலே இருக்கின்றது. இந்தக் கனவுகளால் நான் எவ்வளவு அவஸ்தைப்பட்டிருக்கிறேன். பயத்தில் எத்தனை முறை எனது இரத்தம் உறைந்து போயிருக்கின்றது!

எட்டுமணி. கம்பளை பஸ்வந்து சங்கங்கடையருகில் நின்று செல்கின்றது. புறக்கடைப் பக்கம் போய் விளக்குமாற்றை எடுத்து வந்து முற்றத்தைப் பெருக்கத் தொடங்குகிறேன். வேலையில் மனசு லயிக்கவில்லை. வேடிக்கை பார்க்கும் ஆசையில் கண்கள் வெகுதூரம் அலைபாய்கின்றன. ஒரே இடத்தில் நின்று உலகத்தை வேடிக்கை பார்ப்பது எனக்கு இப்பொழுது பழக்கமாகி விட்டது.

பீலியடிப் பன்சலையிலிருந்து ஓடைக்கரை வழியாக விழுந்திருக்கும் நீண்ட வரம்பில் கையிலே குடையை எடுத்துக்கொண்டு ஹாமுதுரு வருவது தெரிகின்றது. வரம்பில் நின்று மேய்ந்து கொண்டிருந்த மாட்டை குடையைத் தூக்கி விரட்டி விட்டு வேகமாக அவர் நடந்து கொண்டிருக்கிறார்.

தம்பியும் ஹாமுதுருவும் நல்ல சிநேகிதர்கள். நாளின் பெரும்பகுதியை அவன் பன்சலையில்தான் கழிக்கிறுன். அதில் அவனுக்கு இல்ாபங்களும் உண்டு.

பன்சலைக்குச் சொந்தமான கோப்பி மரங்களை குத்தகையில் விற்கும்போது தரகர் வேலை செய்வதும் அவன்தான். பன்சலையில் தேங்காய் பறித்த நாளன்றைக்கு எங்கள் வீட்டுக்கும் தேங்காய்கள் வரும்.

ஓடையில் நீர்வற்றிவிடும் காலத்தில் நாங்கள் பன்சலை பீலியில்தான் போய்க் குளிப்போம். வந்து குளித்து விட்டுப் போகுமாறு ஹாமுதுருவே தம்பியிடம் சொல்லிஅனுப்புவார்.

'சாமி நல்லமனிசன்' வாப்பா சொல்வார்.

வரம்பில் ஏறி ரோட்டுக்குப் போய் ஹாமுதுரு மறைந்து செல்லும் வரையில் எனது பார்வை அவர் பின்னாலேயே அலைந்தது. வயல் வெளியின் பசுமையில் கண்கள் மீண்டும் நிலைகுத்தி நிற்கின்றன.

வீட்டுக்கு முன்னால் பாய் விரித்தாற் போல் பரந்திருக்கும் இந்த வயல் வெளியை, வகிடு பிரித்து ஓடும் ஓடையை நெளிந்து சென்று கூட்டுறவுக் கடையுடன் மறைந்து விடும் கம்பளை ரோட்டை, பொட்டுப் பொட்டாக வயல் வெளியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக மேய்ந்துகொண்டிருக்கும் மாடுகளை, தனதுகஷ்டங்களையெல்லாம் யாரிடமோ முறையீடு செய்வதுபோன்றதொனியில் வினோதமான சத்தங்களை எழுப்பிக் கொண்டு உழுது கொண்டிருக்கும் புஞ்சி பண்டாவை, அறுவடைக்குப்பின் மாலை நேரங்களில் வயலில் கிரிக்கெட் விளையாடும் பையன்களை... எத்தனை வருடங்கள்தான் இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருப்பது! அலுத்துப் போய்விட்டது. ஆனால், ஒரு நாளைக்கு இவற்றைப் பிரிந்து செல்லவேண்டும் என்பதை நினைக்கும்போது கவலையாகவும் இருக்கின்றது.

பச்சைக்கம்பளம் போன்ற வயல் வெளி; உயிரோட்டத்தின் சாசுவதத்தை இசை மீட்டிப்பாடுவது போல் சதா காலமும் ஓடிக்கொண்டிருக்கும் இந்த ஓடை; யுகயுகாந்திரங்களாக மோனத்தில் தவங் கிடக்கும் சிறிதும் பெரிதுமான அந்த மலைகள்! இயற்கை எவ்வளவோ அழகாகத்தானிருக்கிறது!

''ஆனால், அழகைச் சாப்பிட முடியாது.''

பாயிஸ் நானா சொன்னார். நிசந்தான், மிக ஆழமாக யோசித்துத்தான் அவர் பேசுவார். உலகத்தைப்பற்றி நிறைய விஷயங்களை நான் அவரிடமிருந்து தெரிந்து கொண்டேன். அவரிடம் கல்வி கற்கும் பிள்ளைகள்; அதிர்ஷ்டசாலிகள் என்று நான் நினைத்துக் கொள்வேன். பாயிஸ் நானா

தரும் புத்தகங்களின் உதவியால்தான் நான் இப்பொழுது ஒரு மாதிரியாக நாட்களைப் பிடித்துத் தள்ளிக்கொண்டிருக் கிறேன்.

ஸ்கூலுக்குப் போவதை நிறுத்திப் பத்து வருடங்களுக்கு மேலிருக்கும். பள்ளி நாட்கள் மிக மங்கலாக நினைவிலே தரித் திருக்கின்றன, முன்னிரவில் கண்ட கனவுகள் மாதிரி.

பாதை நெடுகிலும் பாடசாலைப் பிள்ளைகள் போவ தும் வருவதும் தெரிகிறது. சிங்கள ஸ்கூலில் விளையாட்டுப் போட்டி நடைபெறுகிற காலம்... சந்தோஷமான நாட்கள் இவை. பாடசாலை நாட்கள் மீண்டும் என் நினவைில் வரு கின்றன. ஒவ்வொரு வருடமும் நடைபெறும் இல்ல விளை யாட்டுப்போட்டிகளில் நாங்கள் எவ்வளவு உற்சாகத்துடன் பங்குபற்றினோம். நான் சேர்ந்திருந்த இல்லங்களுக்கு எத் தனை வெற்றிகளை, பெருமைகளை நான் சேர்த்துக் கொடுத்திருக்கிறேன்!

''இந்த முறை ராகிலா எந்த ஹவுஸ்'' என்று எல்லோரும் கேட்குமளவுக்கு என்னுடைய மதிப்பு உயர்ந்திருந்தது. தவ ணைப் பரீட்சைகளில் முதலாவது இடத்தைப் பெறுவதற்கு என்னுடன் போட்டி போட யாரும் இருக்கவில்லை.

கண்டியில் நடந்த மாவட்டப்பாடசாலைகளின் கலைவிழா வை என்னால் மறக்கவே முடியாது. பதின்மூன்று வருடங் கள் கரைந்துவிட்டபோதிலும் நேற்று நடந்த ஒரு சம்பவம் போல அது மனக்கண்ணில் பதிந்திருக்கின்றது. எங்கள் பாட சாலையின் சார்பில் இடம்பெற்ற அபிநயப்பாடலை நான் அனீஸா, பாத்துமா. ஹம்சியா, ஜெஸீமா எல்லோரும் சேர்ந்துபாடினோம். மேடையிலிருந்து பார்த்தபோது வண்ண பல்புகளின் மெல்லிய ஒளியில் ஜனங்கள் நிரம்பி வழிந்து உயிர்ப்புடன் காணப்பட்ட அந்த மண்டபம் ஒரு கனவுலகம் போல் எனக்குத் தோன்றியது! நாங்கள் ஐந்து பேரும் வெள் ளையும், சிவப்பும் கலந்த ஒரேவிதமான ஆடைகளை அணி ந்திருந்தோம். பூமியிலிருந்து ஆயிரக்கணக்கான அடிகளுக்கு

மேலே சிறகடித்துப் பறப்பது போன்ற பிரமையும் பூரிப்பும் எனக்கு.

மெல்லிய இருட்டில் பின்னணி இசையுடன் சேர்ந்து நாங்கள் பாடினோம்.

''நாளைய தினம் நமக்காக விடிகிறது.
நல்ல செய்தி சொல்ல வந்தோம்.
நல்ல செய்தி சொல்ல வந்தோம்.
ஏழை எளியவர்கள் இல்லையினி உலகினிலே.
என்ற செய்தி சொல்ல வந்தோம்.
இந்த உலகினையே வெல்ல வந்தோம்.''

எவ்வளவு பலமான கைதட்டல், பாராட்டுக்கள்! ஓ...! வாழ்க்கை எவ்வளவு இனிமையானது' என்று நான் பூரித்துப்போனேன்!

கடைசியில் எல்லாமே பொய்யாய், பழங்கதையாய்... இறந்த காலங்கள் விட்டுச்சென்ற வெறும் நினைவுக் குவியல்களாக எஞ்சி விட்டன!

கனவுகளைச் சுமந்து கொண்டு ஓடைக்கரைவழியே ஸ்கூலுக்கு போன நாட்கள்... இடைவேளை நேரங்களில் தோழிகளுடன் சேர்ந்து ஆய்வு கூடத்துக்கு முன்னாலிருக்கும் மாமர நிழலில் அமர்ந்து 'பெரலிக்காய்' சுவைத்த கணங்கள் ... 'ராகிலா நான் உன்னைத்தான் கலியாணம் முடிப்பேன்' என்று வேடிக்கையாகச் சொல்லி பாருக் மாஸ்டர் என்னைத் திக்குமுக்காட வைத்த சந்தர்ப்பங்கள்... அந்தக் கனவுகள், இனிமைகள், ஒலிகள், சுவாரஸ்யங்கள் எல்லாமே முடிந்து போய்விட்டன!... வேகமாக குலுக்கலுடன் சென்றுகொண்டிருந்த ஒரு ரெயில்வண்டி திடீரென்று நின்றுவிட்டது போன்ற பிரமை எனக்கு.

நான் ஒன்பதாம் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கும்போது உம்மாவுக்குச் சுகமில்லாமல் வந்தது. கண்டி ஆஸ்பத்திரியில் ஒரு மாதம் இருந்தார். இந்நாட்களில் நான் ஸ்கூலுக்குப் போகவில்லை. உம்மாவுக்கு உணவு சமைத்

துத் தம்பியிடம் அல்லது வாப்பாவிடம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கும் வேலையை நான்தான் செய்தேன். குண மாகி வீட்டுக்கு வந்த பின்னரும்கூட உம்மாவால் நன்கு ஓடியாடி வேலை செய்ய முடியவில்லை. ஸ்கூலுக்குப் போவ தைப் பற்றி நினைக்கவும்கூட எனக்கு நேரம் கிடைக்க வில்லை.

''கொமருபுள்ள இதமட்டும் படிச்சது போதும். என்னத் தென் படிச்சி. ஏஜெந்து வேல எடுக்கவென். இனி ஊட்ல இரி.'' வாப்பா சொன்னார்.

எனக்கென்றால் ஸ்கூலுக்குப் போக உள்ளூர விருப்பந் தான். இருந்தாலும். வாப்பாவின் சொல்லை மீற முடிய வில்லை. அப்படி நான் போக ஆயத்தமானாலும் உம்மா நிச்சயமாகச் சொல்லியிருப்பார்.

''படிச்சவல்ல ஓவள்போர மாப்பிள தேட''

'ஒரு கரச்சலும் வாணம்' என்று. நான் பேசாமல் விட்டு விட்டேன்

O O O

யசவதி துணி மூட்டையுடன் ஓடக்கரைக்கு வருவது தெரிகிறது. இந்தத் துணிகளையெல்லாம் அவள் துவைத்து முடியும்போது பொழுது உச்சிக்கு வந்துவிடும். ஊரார் அழுக்குகளைக் கழுவும் வேலையைக்கூட அவள் எவ்வளவு உற்சாகமாகச் செய்கிறாள்! யசவதியுடன் கதைத்துக் கொண் டிருந்தால் பொழுது போவதே தெரியாது. நான் கத்திரி போல சிங்களம் பேசப் பழகிக்கொண்டது அவளிடந்தான். அவள் எனக்கு இப்பொழுது அந்தரங்கமான சிநேகிதியாகி விட்டாள். நான் நல்ல அழகாம். அவள் சொல்கிறாள். ஸ்கூலுக்குப் போகும்போது அப்படித்தான் எல்லோரும் சொன்னார்கள்.

அன்று பாயிஸ் நானாவின் வீட்டுக்கு வந்துவிட்டுப் போன அவருடைய கூட்டாளிமார் என்னுடைய அழகில்

கிறங்கிப் போனார்களாம். அவர்கள் போனபிறகு பாயிஸ் நானா என்னிடம் சொன்னார்.

எனக்கென்றால் இதையெல்லாம் கேட்கும்போது ஒரே நேரத்தில் சிரிப்பும், அழுகையும் வரும். நான் இப்பொழுது கண்ணாடியில் முகத்தைப் பார்ப்பதே இல்லை. எங்கள் வீட்டுக் கண்ணாடியும் உடைந்துபோய்விட்டது. ஒரு துண்டு தான் மிஞ்சியிருக்கிறது. அந்தத் துண்டில் ஒரே நேரத்தில் முகம் முழுவதையும் பார்க்க முடியாது. மேலே பிடித்துப் பார்த்தால் மூக்கும், கண்களும் தெரியும். கொஞ்சம் கீழே திருப்பினால் உதடுகளும், கழுத்தும் சிவப்பாகத் தென்படும்.

வாப்பாவின் சட்டையையும், சாரத்தையும் கழுவிப் போடவேண்டும். மத்திசம் வீட்டில் இன்றைக்குக கல்யாணம். ஒருகிழமையாக உம்மாவுக்கு கலியாண வீட்டில் தான் வேலை. வாப்பாவும் மாத்தளையிலிருந்து இரவுக்கு முந்தி வந்துவிடுவார். மத்திசம் மாமா மாத்தளையில் வாங்கியிருக்கும் மிளகுத் தோட்டத்தில் வாப்பா காவல் வேலை.

எட்டாம் வகுப்பில் நான் பள்ளிக்கூடம் போய்க்கொண்டிருந்தபோது வெறும் ‘ஜங்கி’யுடன் மட்டும் முற்றத்தில் நின்று விரலை வாய்க்குள் போட்டுச் சூப்பிக் கொண்டே ‘இச்சி கூலுக்கு பேரலோ’ என்று மழலையில் கேட்ட சின்னோனா — அதுதான் மத்திசம் மாமாவின் மகள். — இன்று புதுமணப் பெண்ணாக நாணிக்கோணி உட்கார்ந்திருக்கப் போவதை என்னால் கற்பனை செய்தும் பார்க்க முடியாதிருக்கிறது.

“சிரிக்கிக்கு வயசே இல்லே. ஈந்தாலும் கொமருகள் ஊட்டுக்குள்ள வெச்சிரது பகுத்தில நெருப்பக் கட்டிக்கொண்டரது போலல்லன. அஹோறாலுக்குப் பணமீக்கு. குடுக்கிறஹ.”

உம்மா சொன்னார். உம்மாவின் குரலில் தொனித்த ஆதங்கத்தையும், இயலாமையையும் என்னால் இனங்கண்டு கொள்ள முடிந்தது.

யசவதியிடம் கதை கொடுத்துக்கொண்டே, துவைக்கக் கொண்டு போயிருந்த உடுப்புக்களை நான் நனைக்கத் தொடங்கினேன். அவளுடன் கதைத்துக் கொண்டிருப்பது இன்பமான ஒரு அனுபவமாக இருக்கிறது. எனக்குத் தெரி யாத எத்தனை விஷயங்களையெல்லாம் இவள் தெரிந்து வைத்திருக்கிருள், அவள் பிறந்தது ஆயிரத்துத் தொளாயி ரத்து ஐம்பத்து எட்டாம் ஆண்டிலாம். நம்பவே முடியாம லிருக்கின்றது. என்னைவிட எட்டு வயது இளமை.

''வண்ணச் சிரிக்கியோட ஒனக்கென்னத்தென்டி கூட் டாளித்தனம்? இதனுகளை ஊட்டுக்குள்ளுக்கு எடுத்துக் கொண்டு.''

ஆரம்ப நாட்களில் உம்மா இப்படித்தான் எனக்கு ஏசிக்கொண்டிருந்தார். ஆனால் கொஞ்ச நாட்களில் 'ஆச்சி ஆச்சி! என்று வாஞ்சையுடன் அழைத்து அவள் உம்மாவை யும் மயக்கிக் கொண்டாள்.

யசவதி அடிக்கடி பயணங்கள் போவாள். தனியாகக் கண்டிக்குப் போய்வருவது அவளுக்குச் சின்ன விஷயம். ஆஸ் பத்திரிக்கு, பெரஹரா பார்க்க, படம் பார்க்க என்று சொல்லிக்கொண்டு தொடைட் தெரிய கவுன் அணிந்து, லேடீஸ் குடையை எடுத்துக்கொண்டு அவள் போவதைப் பார்க்க எனக்குப் பொறாமையாக இருக்கும். நான் கண்டிக் குப் போய் வந்து எத்தனை வருடங்களாகி விட்டன! உம்மா ஆஸ்பத்திரியில் இருக்கும்போது போய் வந்ததுதான் கடைசி யாகப் பரோனது. பத்து வருஷங்களுக்கு மேலிருக்கும். மௌத் தாவதற்கு முந்தி ஒருமுறை போய், கொழும்பு நகரத்தை யும், கடலையும் பார்த்துவிட்டு வரவேண்டுமென்று எனக்கு சரியான ஆசை.

''இன்னும் நான் கடலப் பாத்தில்ல'' என்று சொன்ன போது பாயிஸ் நானாவின் மனைவிக்கு ரொம்ப ஆச்சரிய மாக இருந்தது. எனக்கு வெட்கமாயும் போய்விட்டது.!

யசவதி பெரஹர பார்த்த அனுபவங்கள் ரொம்பச் சுவை யாக இருக்கும்.

பொடியன்கள் தன் இடையைக் கிள்ளியதை, காலை மிதித்ததை, கூட்டத்தில் நசுங்கியதை அவள் மிகச் சாதார ணமாக வர்ணிப்பாள். இச்செய்திகளை அவள் சொல் லும் தொனி, 'இதெல்லாம் நடக்கவேண்டிய சர்வசாதாரண விஷயங்கள்' என்று சொல்வது போலிருக்கும். எனக்கென் றால் மேல் கூசும்! நான் இந்த விஷயங்களையெல்லாம் யச வதியுடம் கதைப்பதை அறிந்தால் உம்மா என்னைக் கொன்று போட்டு விடுவார்.

''குட்டிகளும், பொடியன்களும் பெரஹரா பார்க்க மட்டும் வருவதில்லை''

யசவதி சொல்கிறாள்.
சரியாக இருக்கலாம். அதைப் பற்றி எனக்கெதுக்கு கவலை!

கண்டி பெரஹராவைப் பார்க்க முடியாவிட்டாலும் நானும் ஒவ்வொரு வருடமும் பெரஹரா பார்த்துக்கொண் டுதான் இருக்கிறேன். எங்கள் பக்கத்து ஊர்த் தேவாலயத்தில் ஒவ்வொரு வருடமும் ஏழுநாள் பெரஹரா இருக்கும். நீர் வெட்டிக் கொண்டு வரும் எட்டாவது நாள் கடைசிப் பெர ஹரா. எங்கள் வீட்டுக்கு முன்னாலிருக்கும் ரோட்டால் தான் வந்துபோகும்.

சிறுமியாக இருந்த காலத்தில் கடைசிப் பெரஹரா வரும் அந்த ஞாயிற்றுக்கிழமைகளை நாங்கள் எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்போம்! பலூன், சீனிக்கடலை, கரும்பு, பம்பாய் முட்டாய்...இப்படியெல்லாம் விற்பவர்கள் பெரஹரா வருவதற்கு முன்னால் கூவிக் கொண்டு வருவார்கள். சீனிக்கடலையில் தான் எனக்கு விருப்பம்.

இப்பொழுதெல்லாம் ஒதுங்கியிருந்து இந்தப் பெரஹரா வைப் பார்க்கும் போது, 'தெரியாமலே இன்னொரு வருட மும் கழிந்து விட்டது' என்று பெருமூச்சு விடத்தான்தோன் றுகிறது.

வண்ண வண்ண ஆடைகளால் அலங்கரிக்கப்பட்டு மெதுவாக. ராஜ நடை நடந்து வரும் யானைகளைப் பார்க்கும் போது, 'சாதுவான இந்த யானைகள் கனவில் என்னை எவ்வளவு வேகமாகத் துரத்தி வருகின்றன' என்று எண்ணி நான் வியப்படைந்து போகிறேன்.

பெரஹரா என்கிறபோது மௌத்தாகிப்போன வாப்பும்மாவின் ஞாபகம் வருகின்றது. வாப்பும்மா ஒரு நாளும் பெரஹரா பார்ப்பதில்லை. தூரத்தில் 'பெர' அடிக்கும் சத்தம் கேட்கும்போதே அவ குசினியில் போய் நுழைந்துகொண்டு விடுவா.

''பெரஹர பாக்கிற முஸ்லிம் ஆளுக்களுக்கு மறுமேல் நாயகங்கள்ட திருக்கல்யாணம் பாக்க கெடச்சிர இல்லயம்.''

வாப்பும்மா மௌத்தாகியும் ஐந்து வருடங்களுக்கு மேலாகி விட்டன. நேற்று மாதிரி இருக்கிறது.

o o o

லீவு நாட்களென்றால் மாலை ஐந்து மணியானவுடன் பாலத்தில் உட்கார்ந்து சிகரெட் புகைத்துக் கொண்டு அரட்டை அடிப்பதற்கு ஒரு கூட்டம் வந்து விடும். படித்து உத்தியோகம் பார்க்கும் நண்பர்கள் இவர்கள், பாலத்துக் கட்டில் அமர்ந்து ஓடையில் சிறு கற்களை வீசிக்கொண்டே இவர்கள் உரத்த குரலில் ஏதாவது விவாதித்துக் கொண்டிருப்பார்கள். சில நேரங்களில் தூரத்தே தெரியும் மலைகளை மௌனமாக வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். பாதையில் போகும் யாருடனாவது ஏதாவது 'ஜோக்' சொல்லிச் சிரிப்பார்கள். சில வேளைகளில் நான் முற்றத்தில் நின்றிருந்தால் யாராவது எங்கள் வீட்டுப் பக்கமும் பார்வையை வீசுவார்கள். எப்போதாவது சிகரெட் பற்ற வைக்க நெருப்புப் பெட்டி கேட்டுக் கொண்டு யாராவது ஒருவர் எங்கள் வீட்டுக்கு வருவார்.

இவர்களில் ஒருவரும் இன்னும் திருமணம் செய்துகொள் ளவில்லை. ஒரு வேளை திருமணம் செய்து கொண்ட பின் னர் மாலை நேரங்களில் பாலத்துக்கு வரமாட்டார்களோ என்னவோ!

''என்னதான் பொழுது போக்கு என்று சொல்லிக் கொண்டாலும் கல்யாணம் செய்யும்வரை பீடிக்கிற ஒரு வகை நோய்தான் இது.''

பாயிஸ்நானா சொன்னார்.

எனக்கும் கொஞ்சம் வெட்கமாகிப் போய்விட்டது. என் னையும் இந்த நோய் பீடித்திருக்கிற தோ? தெரியாது!

அடுத்த மாதம் யசவதியும் போய் விடுவாள். அவளுக் குக் கல்யாணம். காதல் கல்யாணம் என்று சொல்கிறாள். அவள்தான் சுதந்திரமானவளாச்சே. எனக்கு இதையெல் லாம் நினைத்துப் பார்க்கவும் முடியாது! யசவதியை நினைக் கும்போது கொஞ்சம் பொறாமையாகவும் இருக்கிறது. நெஞ்சுக்கு மிகவும் நெருக்கமான சிநேகிதியை இழக்கப் போகின்றோம் என்பதை எண்ணிப் பார்க்க மனசுக்குக் கஷ்ட மாகத்தான் இருக்கிறது. அவள் சந்தோஷமாக இருக்கட் டும்! நானும் ஒரு நாளைக்குப் போகத்தானே வேண்டும்.

இந்த வயல்வெளியை, ஓடையை, பாலத்தை, வித வித மான இந்த மனிதர்களை, ரம்மியமான இந்தச் சூழலை எல் லாம் விட்டு விட்டு முன்பின் தெரியாத ஓர் ஆடவனின் பின்னால் முக்காட்டை இழுத்து மூடிக்கொண்டு போகத் தான் வேண்டும். அவனது பிள்ளையை வயிற்றில் சுமக்க வேண்டும். இல்லாமையைச் சகித்துக் கொண்டு, துயரங் களை நெஞ்சுக்குள் புதைத்துக் கொண்டு, அடக்கமான மனைவியாக, தாயாக...... வாழ்ந்து முடிக்கத்தான் வேண் டும்.

திருமணத்தின்மூலம் தான் ஒரு பெண்ணின் வாழ்க்கை மலர்ச்சியடைகின்றதாம். அனீஸாவைப் பார்த்த பிறகு

இந்த மலர்ச்சியிலும் எனக்கு நம்பிக்கை இல்லாமல் போய் விட்டது.

நான்கு வருடங்களுக்கு முன் அனீஸாவுக்குக் கல்யாணம் நடந்தது. எத்தனையாயிரம் கனவுகளைச் சுமந்து கொண்டு அவள் கணவன் வீட்டுக்குப் போனாள்! நான்கு வருடங்களில் எல்லாக் கனவுகளும் சிதைந்து, இரண்டு குழந்தைகளுடன் வறுமை சுதந்திரமாக விளையாடிச் சுவடுகளை விட்டுச் சென்றிருக்கிற மெலிந்து, கறுத்துப்போன உடம்புடன் மீண்டும் தாய் வீட்டுக்கு வந்திருக்கிறாள்! சீதனம் கேட்டு கணவன் அவளை அனுப்பியிருக்கிறானாம்;

அனீஸாவைக் கண்டவுடன் அடையாளம் கண்டு கொள்வதே எனக்குச் சிரமமாக இருந்தது. பரிதாபமாக மெலிந்து போயிருந்தாள். முன்பு இவள் எவ்வளவு அழகாக இருந்தாள்! முன் பற்கள் விழுந்து, முகம் விகாரமாகி ... ஓ ! அனீஸ் என்னையும் நீ பயமுறுத்துகிறாயா! கணவன் வீட்டில் நிறையக் கொடுமைகள் நடந்திருக்க வேண்டும். நன்கு மௌனம் சாதிக்கப் பழகியிருக்கிறாள். ஓரிரு வார்த்தைகள் தான் பேசினாள்.

உனக்கு நினைவிருக்கிறதா அனீஸா! மெல்லிய சிவப்பு வெளிச்சத்தில் தேவதைக் குஞ்சுகள் போல் மேடையில் நின்று கைகளைக் கம்பீரத்துடன் மேலேயுயர்த்தி,

'இந்த உலகினையே வெல்ல வந்தோம்' என்று பாட்டிசைத்தோமே; அந்த நாள் உனக்கு நினைவிருக்கிறதா? இல்லை; நீ மறந்திருப்பாய். சின்னத்தனங்கள் மலிந்துபோன இந்த மனிதர்களின் உலகத்தில் இதையெல்லாம் நினைத்துப் பார்க்க உனக்கு எங்கே நேரமிருக்கிறது! ஆனால், 'நாளைய தினம் நமக்காக விடிகிறது' என்று நாமெல்லோரும் கைகோத்துக் கொண்டு நம்பிக்கைக் கீத மிசைத்த அந்த நாள் எனக்கு நினைவிருக்கிறது அனீஸ். யாரை வஞ்

சித்த தற்காக, யாருடைய பொருளை அபகரித்த குற்றத்துக்காக நாமெல்லோரும் இப்படிச் செத்துக் கொண்டிருக்கிறோம்!

அனீஸாவைக் கட்டியணைத்துக் கொண்டு கதற வேண்டும் போன்ற வெறி என்னுள் கிளர்ந்தெழுந்தது!

O O O

யசவதி என்னிடம் பிரியாவிடை பெற்றுக் கொண்டு போக வந்திருந்தாள். அவள் சாரி அணிந்திருப்பதை இன்று தான் நான் முதலில் பார்த்தேன். சாரியில் அவள் எவ்வளவு அழகாக இருக்கிறாள்! மாலை கணவனுடன் தெல்தெனியாவுக்குப் போகப்போகிறாளாம்.

''ராகிலா! உங்கள் கல்யாணத்துக்கு எனக்குக் கடிதம் போடுங்கள். நிச்சயம் வருகிறேன்.'

அவளது இளமை ததும்பும் கைகளைப் பிடித்து மெதுவாக வருடிக்கொண்டே மௌனமாக நான் தலை குனிந்து நின்றேன். துக்கத்தின் வடிகால் மௌனம் தானோ! ''ஒரு நாளும் உங்களை மறக்க மாட்டேன் ராகிலா'' என்று தளர்ந்த குரலில் சிங்களத்தில் கூறிக்கொண்டே குனிந்து அவள் என்னை முத்தமிட்டபோது, அவள் கண்களில் விளிம்பு கட்டி நின்ற கண்ணீர்த் 'துளிகள் என் கன்னங்களில் விழுந்து தெறித்தன.

வெறுமையும், சூனியமும், ஊழி ஊழிக்கால நிசப்தமும் ஆட்சி செலுத்தும் அகண்டதோர் பாலை வெளி என் கண்ணெதிரே விரிகின்றது. கொடிய அந்தப் பாலை நிலத்தின் சுடுமணலில் என்னுடைய துயரம் தோய்ந்த நாளைய தினங்கள் புதையுண்டு தெரிகின்றன!

இந்த வருடமும் பெரஹரா வரும்.

அடுத்த வருடமும், அதற்கடுத்த வருடமும், அதற்கடுத்த வருடமும்... இன்னும் இன்னும் அலை அலையாக அவை வந்துகொண்டே இருக்கும்.

பெருநாள், நோன்பு, பள்ளிக் கந்தூரி, பெரஹரா என்று... சிறுமியாக இருந்த நாட்களில் எல்லையில்லாத சந்தோஷத்தையும், குதூகலத்தையும் சுமந்து வந்த இந்த வருடாந்த நிகழ்வுகளை, துக்கத்துடன், ''காலம் ஓடிக் கொண்டே இருக்கின்றது'' என்ற பிரக்ஞையுடன் இனி மேலும் நான் சந்தித்துத் தான் ஆகவேண்டும்!

என்னுடைய பிரியமான சிநேகிதியை அணைத்துக் கொண்டு நான் குலுங்கிக் குலுங்கி அழுகின்றேன்! □

—வீரகேசரி; 1980

# கே. ஆர். டேவிட்

'மனிதனால் உருவாக்கப்படுவது சமுதாயம்; சமுதாயத்தால் உருவாக்கப்படுபவன் மனிதன்' என்று கூறும் டேவிட் அவர்கள், சமூக அநீதிகளுக்கும் நலிந்த மக்களின் இன்னல்களுக்கும் எதிராகத் தம்முடைய எழுத்தாற்றலை முனைந்து பயன்படுத்தும் படைப்பாளி. கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக எழுதி வருபவர்.

'புதிய இரத்தத்தால் பூமி சிவக்கிறது' (பரிசு பெற்றது), வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை (யாழ். இ. வட்ட முதற்பரிசு பெற்றது), 'பாலைவனப் பயணிகள்' 'உதயத்தைநோக்கி' 'ஆறுகள் பின்னோக்கிப் பாய்வதில்லை' என்பன இவர் எழுதியுள்ள குறு நாவல்கள். பத்திரிகைகளில் வெளிவந்த இந் நாவல்களில் 'பாலைவனப் பயணிகள்' நூலுருப் பெற்றுள்ளது. ஏனையவற்றுள் மற்றும் இரண்டு குறுநாவல்கள் நூலாக வெளிவரவுள்ளன.

''டேவிட் அவர்கள் சமூக வெப்பத்தால் ஏற்பட்ட கொப்புளக் குமுறல்களையே குறுநாவலாகத் தந்திருக்கின்றார். அவரின் மன அழுத்தங்களே அவருடைய ஆக்கங்கள். அவர் பார்வையாளராகவிருந்து கதை படைப்பதில்லை. பங்காளியாக இருந்தே கதை படைப்பவர்.'' என்கிறார் சிரித்திரன் — சுந்தர்.

நாளை மலர விருக்கும் நமது சமுதாய மலரினது குண வியல்புகள் இன்றைய மொட்டுக்களில் சூட்சுமமாகக் கிடக்கின்றன. வளமூட்டும் இயல்புகள் மாத்திரமல்ல; அழிவு விளைக்கும் இயல்புகளுந்தாம். இத்தகைய இயல்புகளுள் ஒன்று — ஒரு தீப்பொறி — பள்ளி மாணவர்களது செயற்பாடு ஒன்றிலே பயங்கரமாக முகங்காட்டுகிறது! அதனை இனங்கண்டு நம் முன் வைக்கிறார், கதைஞர் டேவிட். அது அவருக்கு ஏற்படுத்திய அதிர்வு, இக் கதை மூலம் நம்முள்ளும் பாய்கிறது! 'என்ன இது! மண்வாசனையா!' — நமக்கும் அதே திகைப்பு!

# சமுதாயச் சுருக்கங்கள்

நான் ஆசிரியனாகிப் பத்து வருடங்கள், இந்தப் பத்து வருடங்களும் 'வெளி மாவட்டச் சேவை' என்ற சட்டத்தோடு 'வ்ாரோட்டம்' நடாத்தி எப்படியோ சட்டத்தை வென்று, சொந்த ஊர்ப் பாடசாலையொன்றைக் கட்டிப் பிடித்துக்கொண்டு இருந்து விட்டேன்.

இந்த வருடம்......
எனது அரசியல் தீர்க்கதரிசனம் பிழைத்ததால், இம்முறை எனக்கு ஏற்பட்ட இடமாற்றத்தை ரத்துச்செய்ய முடியாமற் போய்விட்டது.

இம்முறை நடந்த தேர்தலில் நான் ஆதரவு காட்டிய வேட்பாளரால் தேசியப் பேரவைக் கதிரையில் குந்த முடியாமற் போய்விட்டதால்......

அதன் பிரதிபலிப்பு......?

இடமாற்றப்பட்டியலில் எனது பெயர்தான் முதலாவது. அதிலும் கஷ்டப்பிரதேசமான மூதூரில் ஒரு பாடசாலை.

தேசியப் பேரவைக் கதிரையில் குந்தியிருக்கும் எனது எதிரியின் கால்களைப் பிடிக்கக் கூடாது என்ற மன வைராக்கியத்தோடு 'வெற்றிகரமாக'த் தோல்வியை ஒப்புக் கொண்டு, மூதூர்ப் பாடசாலைக்கு வந்துவிட்டேன்.

மார்கழிமாத விடுமுறையின் பின் இன்றுதான் பாடசாலைகள் ஆரம்பம்.

மூதூர்ப் பாடசாலை —

அதிபரின் காரியாலயத்தில் அமர்ந்திருக்கின்றேன்.

திருகோணமலையிலிருந்து கிட்டத்தட்ட ஒன்றரை மணித்தியாலங்கள் கடலில் பிரயாணம் செய்யவேண்டும். பிரயாணம் செய்த அந்த 'அவதியுணர்வு'கள் எனது இதயத்தில் இன்னமும் பூரணமாக மரித்துப் போய்விடவில்லை.

உத்தியோகம் புருஷலட்சணம். இந்த அவதிகளுக்காக அந்த லட்சணத்தை விட்டுவிடமுடியுமா?

இப்பாடசாலையில் படிப்பிக்கின்ற ஆசிரியர்களை அதிபர் எனக்கு அறிமுகஞ் செய்துவைக்கின்றார்.

அதிபர் —

அவர் பெயர் கனகசிங்கம்.

இவரது பெயரை அடிக்கடி பத்திரிகைகளிலே பார்த்த நினைப்பு எனக்குண்டு. ஏனென்றால் இவர் ஒரு கவிஞன்.

கறுத்தவர்; மிக மெல்லியவர்; சுருண்ட கேசம், கண்ணாடி. நிலத்தில் விழுந்த பந்து துடிப்பதைப் போன்ற சுறுசுறுப்பு,

சம்பிரதாய பூர்வமாகவும், மனிதாபிமானமாகவும் அதிபருக்கும் எனக்கும் இடையில் சிறு சம்பாஷணை நடந்து முடிகின்றது.

''மாஸ்ரர் உங்களை ஐந்தாம் வகுப்புப் பொறுப்பாசிரியராய்ப் போட்டிருக்கிறேன், பிறகு பார்த்துச் செய்வம்...'' அதிபரின் வேண்டுகோள் கலந்த கட்டளையை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

''ஏதாலும் தேவையெண்டால் சொல்லுங்கோ...'' அதிபர் என்னிடம் கூறுகிறார்.

''சேர்...''

''சொல்லுங்கோ ...''

''நான் நாளைக்கு ஊருக்குப் போகலாமெண்டு நினைக்கிறேன்...''

''என்ன மாஸ்டர் இப்பதானே வந்தனீங்கள்...''

''உண்மைதான்... என்ரை புள்ளையளைப் பிரிஞ்சிருந்து எனக்குப் பழக்கமில்லை... அதாலை ஊருக்குப் போய்க் குடும்பத்தைக் கூட்டிவரப் போறன்...''

'சரி... போட்டு வாருங்கோ...'

''சேர்...''

''சொல்லுங்கோ...''

''இரண்டு மணிக்கு திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒரு பஸ் இருக்கு... நான் இஞ்சையிருந்து பதினொரு மணிக்குப் புறப்பட்டால்தான் அந்த பஸ்ஸிலை போகக்கூடியதாக இருக்கும்...''

''சரி மாஸ்டர்... நீங்கள் பதினொரு மணிக்குப் போங்கோ...'' அதிபர் பெருமனதோடு எனது வேண்டுகோளை ஏற்று அனுமதியளிக்கின்றார்.

எனக்குப் பெரும் மனத்திருப்தி.

இப்போது ஒன்பதுமணி. இன்னும் இரண்டு மணித்தியாலங்களைக் கடத்த வேண்டும். ஆனால் இனியும் அதிபரின் காரியாலயத்தில் அமர்ந்திருப்பது முறையல்ல.

''சேர் நான் வகுப்புக்குப் போகட்டா...''

''நல்லது... போங்கோ...''

நான் ஐந்தாம் வகுப்பைத் தேடி நடக்கின்றேன்.

ஐந்தாம் வகுப்பு —

''வணக்கம் சேர்''

''வணக்கம்...'' மாணவர்களும் அமர்கின்றனர். நானும் அமர்கின்றேன்

கிட்டத்தட்ட முப்பது மாணவர்களிருக்கும், புதிதாக வந்த என்னைச் சகலரும் ஆவலோடு பார்க்கின்றனர்.

'நாளைய சமுதாயத்தை நிர்ணயிப்பவர்கள்...' பத்து வருடங்களாக ஒரே பாடசாலையில் இருந்து பார்த்துப் புளித்துப் போன முகங்களை விட்டு, புதிய முகங்களைப் பார்த்ததாலோ, என்னவோ என்னையறியாமல் இப்படியொரு எண்ணம் எனது மனதிலே தோனறி மறைகின்றது.

''என்னுடைய பெயர் விபுணசேகரம்... இனிமேல் நான் தான் உங்களுக்கு வகுப்பு மாஸ்டர்...'' நான் என்னைப் பற்றிய அறிமுகத்தைச் சுருக்கமாக முடிக்கிறேன்.

''சரி; நான் என்னுடைய பெயரைச் சொல்லிவிட்டேன் இனி, நீங்கள் ஒவ்வொருவராய் உங்கடை பெயர்களைச் சொல்லுங்கோ.''

''சிவமுரளிதரன்... தெய்வேந்திரன்... கபிலநாதன்... செந்தூரன்...'' இப்படியே ஆண்களும் பெண்களும் தங்கள் பெயரைக் கூறுகின்றனர்.

''இந்த வகுப்பு மொனிற்றர் ஆர்...'' நான் கேட்கி றேன்.

''சேர், என்னும் மொனிற்றரைத் தெரியவில்லை...' அவள் வாணிசிறீ கூறுகின்றாள்.

''அப்ப ஒரு மொனிற்றரைத் தெரிவு செய்வம்...''

பதினொரு மணிவரை இப்படியே நேரத்தைக் கடத்தி விட முனைகின்றேன்.

ஆசிரியருக்குரிய இலட்சணங்களில் இதுவும் ஒன்றோ, என்னவோ! நேரத்தைப் போக்காட்டுகின்ற தந்திரக்குணம் என்னிடம் நிறையவுண்டு.

''சரியுங்க சேர்... மொனிற்றர் தெரிவம்...'' மாணவர் களும் தயாராகின்றனர்.

இந்த வகுப்பில் யார் கெட்டிக்காரன் ?

''கபிலநாதன் சேர்...''

''கபிலநாதன் எழும்புங்கோ ...'' நான் கபிலநாதனைத் தேடுகிறேன்.

கபிலநாதன் எழுந்து நிற்கின்றான்.

கறுத்து மெலிந்த, கட்டைத் தோற்றம். சொந்த நிறத்தை இழந்து வெளிறிய ஒரு ரெர்லின்சேட்; அதிலும் பல பொத்தல்கள். ஒரு சிறிய களிசான்... சிறுபிள்ளைகள் போல் இன்னமும் முன்னோக்கி வளர்ந்திருக்கும் தலைமயிர்...

சோக்குக் கட்டியில் தொட்டந்தொட்டமாகக் கறுப்பு மை ஊறியிருப்பது போல், அவனது தோற்றத்தில் தொட் டந்தொட்டமாக வறுமைப் பிரதிபலிப்புகள் தெரிகின்றன.

எனது மனம் அவனுக்காகப் பரிதாபப்படுகின்றது.

''கபிலநாதனை மொனிற்றராக்குவம்...''

''ஓம் சேர்...'' அநேகமானவர்கள் எனது பிரேரணையை ஆமோதிக்கின்றனர்.

இடையில் —

புதியதொரு பிரேரணை வெடிக்கின்றது !

''சேர் செந்தூரனை மொனிற்றராக்குவம்'' அவன் விநாயகமூர்த்தி கூறுகின்றான்.

சின்னஞ் சிறிசுகளிடம் ஏற்பட்டுள்ள போட்டி. நான் மௌனமாக இருக்கிறேன்.

''சேர்,... உவன் விநாயகமூர்த்தி செந்தூரனிட்டை வாங்கித் தின்னிறவன் சேர். அதாலை தான்... உவன் செந்தூரனைத் தெரிவு செய்யிறான்...'' வாணிசிறீ கூறுகின்றாள்.

''நக்குண்டார் நாவிழந்தார்.'' அந்த உணர்வா ?... அந்தப் பெரிய உணர்வு இந்தச் சின்னஞ் சிறிசுகளுக்கு வருமா ?...

எனக்குள் ஒரு உணர்வுக்குமிழ் வெடிக்கின்றது.

நாக்கு நனைத்ததற்காக நாக்குப் புரட்டுகின்ற தப்பிலித்தனம்..., விநாயகமூர்த்திக்கு ஏற்படுமா ?...

எனது மனம் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றது.

''சேர்... நான் மொனிற்றராய் இருக்கிறன்'' அந்தச் செந்தூரன் எழுந்து நின்றான்.

செந்தூரன் —

புத்தம்புதிய சோக்குக்கட்டியின் அழகு, மதாளிப்பு...
மொனிற்றர்... ஒரு பதவி.
இவன் செந்தூரன்... இவனுக்குப் பதவி ஆசையா ?

உலகம் புரியாத வயது. அப்படிப்பட்டவனுடைய செயலுக்கு நான் அர்த்தம் கற்பிக்கலாமா ? இது சிறுபிள்ளைத் தனம்.

நிச்சயமாகப் பதவி ஆசையல்ல :

''அப்ப... ஆரை மொனிற்றராக்குவம் ?...'' நான் பிரச்சினையைப் பொதுவாக வைக்கிறேன்.

''சேர், கபிலநாதன்தான் கெட்டிக்காறன், அவன்தான் மொனிற்றர்''

''சேர், செந்தூரன் வெறும் மொக்கன், அவனை மொனிற்றராக்க வேண்டாம் ''

கபிலநாதன் கெட்டிக்காரன்; செந்தூரன் மொக்கன். கபிலநாதன் தான் மொனிற்றர் !

செந்தூரன் வேண்டாம் !

வகுப்பில் பெரும் கலவரம், பெரும்பான்மையான மாணவர்கள் கபிலநாதனை ஆதரிக்கின்றனர்.

வகுப்பில் ஏற்பட்ட போட்டி மனப்பான்மையை ஆசிரிய அதிகாரத்தைப் பாவித்து அடக்கிவிட நான் விரும்பவில்லை. அப்படியென்றால் முடிவு?... யார் மொனிற்றர் ?...

ஒரு தேர்தல்.

மொனிற்றர் பதவிக்கான தேர்தல் !

இவர்கள் ... இந்த மாணவர்கள்... நாளைய மனிதர்கள் ! நாளைய சமுதாயத்தில் இவர்கள் பங்குபற்றப் போகும் நிஜமான தேர்தலுக்கு இன்று ஒத்திகை நடாத்தப் போகிறேனா? எனது மனம் கூசுகின்றது !

ஏன் ?

தேர்தல் சாக்கடையை மிடறு முறித்துப் பலதடவை குடித்த அனுபவம் எனக்குண்டு !

இந்தச் சமுதாயத்தில் வாழ்ந்து பழக்கப்பட்ட உணர்வு, உலகம் புரியாத இந்தச் சிறிசுகளின் செயல்களுக்கு மிகப் பெரும் அர்த்தங்களைக் கற்பித்து, நானே எனக்குள் அவதிப்படுகிறேன் !

''சரி போட்டி வைப்பம்...'' நான் கூறுகிறேன்.

''என்ன போட்டி சேர் ?''

''முதலிலை கபிலநாதனை விரும்புறவை உங்கடை வலது கையை உயர்த்துங்கோ... ஆருக்குக் கூடவோ, அவன் தான் மொனிற்றர்...''

''சரி... சேர்...''

''கபிலநாதனை மொனிற்றராக்க விரும்புறவை உங்கடை வலது கையை உயர்த்துங்கோ...'' நான் கூறுகிறேன்.

தொண்ணூறு வீதமான கைகள் உயருகின்றன.

கபிலநாதன் மொனிற்றர் என்பதை எனது மனம் தீர்மானித்துக் கொள்கின்றது.

''சேர் உங்களைப் பிறின்சிப்பல் வரட்டாம்'' பெரிய வகுப்பு மாணவன் ஒருவன் வந்து கூறிவிட்டுப் போகின்றான். போட்டியை நிறுத்திவிட்டு நான் அதிபரின் காரியாலயத்தை நோக்கி விரைகின்றேன்.

அதிபரோடு கதைத்த நான் பதினொரு மணிக்குப் புறப்பட்டு விடுகிறேன். திரும்பவும் வகுப்பிற்குப் போகமுடியவில்லை.

ஒரு கிழமை லீவின் பின் —

பாடசாலைக்குத் திரும்பவும் வந்து ஐந்தாம் வகுப்பிற்கு வருகிறேன்.

''சேர்... மொனிற்றர் தெரிவம்...'' நான் மறந்து போய் விட்டேன், மாணவர்கள் மறக்கவில்லை. ஒரு கிழ

மைக்கு முன் இந்த வகுப்பில் நடாத்தப்பட்ட மொனிற்றர் தெரிவு சம்பந்தமான நிகழ்ச்சிகளை எனக்குள் இரைமீட்புச் செய்கிறேன்.

கபிலநாதன்... செந்தூரன்...

கபிலநாதனுக்காகத் தொண்ணூறு வீதமான கரங்கள்... கபிலநாதன் தான் மொனிற்றர்...

''கபிலநாதனை மொனிற்றராக்க விரும்புறவை வலது கையை உயர்த்துங்கோ'' நான் முதலில் இருந்து போட்டியை ஆரம்பிக்கின்றேன்.

என்னையே என்னால் நம்பமுடியவில்லை !...

இப்படியும் நடக்குமா ?...

என்ன கொடுமை !...

கபிலநாதனுக்காக ஒரு கைகூட உயர்த்தப்படவில்லை!

''சரி... செந்தூரனை மொனிற்றராக்க விரும்புறவை உங்கடை வலது கையை உயர்த்துங்கோ...'' என்னை நான் சமாளித்துக் கொண்டு போட்டியைத் தொடர்கிறேன்,

போட்டியில் வாக்காளராக நின்றவர்கள் செந்தூரனை ஆதரித்துத் தங்கள் கைகளை உயர்த்துகின்றனர்...

கபிலநாதன் தலைகுனிந்து நிற்கிறான்.

செந்தூரன் தலை நிமிர்ந்து நிற்கிறான்.

இந்த மாற்றத்துக்குரிய காரணம் ?... சென்ற ஒரு கிழமைக்குள் நடந்ததென்ன ?...

என்னாலே புரிந்து கொள்ள முடியவில்லை !...

கபிலநாதன் எப்படித் தகுதியை இழந்தான் ?

செந்தூரன் எப்படித் தகுதியைப் பெற்றான் ?

புரியாத புதிர் !

போட்டி முடிவுப்படி செந்தூரனை மொனிற்றராக்கு கின்றேன்.

எவருக்குமே கையுயர்த்தாமல் இருந்த அந்த ஒரே யொரு மாணவன்... அவன் பெயர் பவதாரணன்... அவன் தான் எனது புதிரை விரியவைக்கும் கருவியென்பதை நான் உணர்ந்து கொள்கிறேன்.

அவனை விசாரிக்க நேரத்தை எதிர்பார்த்திருக்கின்றேன்.

பாடங்கள் நடக்கின்றன.

இடைவேளை வருகின்றது. இதுதான் சரியான நேரம். நான் பவதாரணனைத் தனிமையில் அழைக்கின்றேன்.

''பவன்''

''சேர்...''

''நீங்கள் ஏன் ஒருதருக்கும் கை உயர்த்தயில்லை...''

''எனக்கு விருப்பமில்லை சேர்.''

''ஏன் ?''

''பொய் சொன்னால் களவு செய்தால், கடவுள் புழுக் கிடங்கிலை போடுவரெண்டு லில்லி ரீச்சர் சொன்னவ.''

''இதிலை என்ன களவு, பொய்?''

''உண்மையிலை கபிலநாதன் தானே சேர் கெட்டிக் காறன் ?''

''ஓம்''

''பிறகேன் சேர், செந்தூரனுக்காக எல்லாரும் கை உயர்த்தினவை?

''ஏன் ?''

''போனகிழமை முழுக்க செந்தூரன் எல்லாருக்கும் ஐஸ் பழமும், கச்சானும், ரொபியும் வாங்கிக் குடுத்தவன் சேர்''

''ஏன்?''

''தனக்குக் கையை உயர்த்தச் சொல்லி. அதுதான் சேர். எல்லாரும் அவனிட்டை வாங்கித் திண்டுபோட்டு... அதுக்காகக் கையை உயர்த்தினவை. இது பொய்தானே சேர் ?''

தேர்தல் தர்மம். அதைத்தான் பவன் என்னிடம் கேட்கின்றான். பவன் புரிந்து கொண்டது தேர்தல் தர்மமென்றால்... செந்தூரன் புரிந்துகொண்டது ?...

தேர்தல் தந்திரமா ?

பவனுக்குத் தர்மத்தைக் கற்பித்தது லில்லி ரீச்சர்...

செந்தூரனுக்குத் தந்திரத்தைக் கற்பித்தது ?...!...? மண்வாசனையா ?... இன்று —

ஐஸ்பழம்... கச்சான்... ரொபி... மொனிற்றர் பதவி...

நாளை —

சாராயம் !... இறைச்சி !... பணம் !... ? ! ...?

இந்த மாணவர்கள் ...

நாளை விரியப்போகும் சமுதாயச் சுருக்கங்கள்!

நாளைய சமுதாயத்தை நான் இன்றே இங்கே காண்கிறேன்! □

— சிரித்திரன், 1980.

# மாத்தளை சோமு

மாத்தளைச் சோமு என்னும் புனை பெயரில் இலக்கியம்படைக்கும் மு. சோமசுந் தரம் அவர்கள் இரண்டு தசாப்தங்களுக்குமுன் சிறுகதை எழுத்தாளராக இலக்கியத்துறைக்கு வந்தவர். சோமு இதுவரை 35 சிறுகதை களும் 3 நாவல்களும் சில புதுக்கவிதை களும் படைத்திருக்கின்றார். தீபம், கணை யாளி முதலிய தமிழகச் சஞ்சிகைகளிலும் இவரது படைப்புகள் பிரசுரமாகியுள்ளன.

மலையக எழுத்தாளர்களது சிறுகதைத் தொகுப்பாகிய 'தோட்டக் காட்டினிலே' என்னும் நூலில் சோமு எழுதிய கதைகள் மூன்று இடம் பெற்றுள்ளன. 'நமக்கென் றொரு பூமி', அவன் ஒருவனல்லன்' என்பன இவரது சிறுகதைத் தொகுதிகள். 'அவள் வாழத்தான் போகிறாள்' என்னும் இவர் எழுதிய நாவல் தினகரன் பத்திரிகை யில் பிரசுரமாயிற்று.

சோமுவின் மற்றொரு நாவலாகிய 'அந்த உலகத்தில் இந்த மனிதர்கள்' நூலாக வெளிவந்துள்ளது. இது பின்பு மஞ்சரி சஞ்சிகையில் மறுபிரசுரஞ் செய்யப் பட்டது. அந்தரே கதைகளை 'இலங்கை நாட்டுத் தெனாலிராமன் கதைகள்' எனனும் பெயரில் சோமு தமிழிலே தந்திருக்கிறார்.

அறியாமையும் வறுமையும் சமுதாயத்தை வாட்டுகின்ற இரண்டு கொடிய பீடைகள். மதுப்பழக்கம் இவை ஈன்றெடுத்த நச்சுச் சிசு. இவை மூன்றினதும் தாக்கத்தால் நம் நாட்டுத் தோட்டத் தொழிலாளரது வாழ்வு வளம்பெற முடியாது வாடுகின்றமைக்கு ஓர் உதாரணத் துளியாக அமைகிறது இந்தக் கதை. அந்தச் சமுதாயத்திலே இன்று தோன்றி வளருகின்ற விழிப்புணர்வினது ஓர் ஒளிக் கீற்றின் குறியீடாகச் சிறுவன் முத்துவைக் கதைஞர் நம்முன் நிறுத்துகிறார். நெருடலற்ற கதைப்பின்னல்; சரளமான மொழிநடை.

# இனி ஒரு துன்பமில்லை

கயிற்றில் தொங்கிய காற்சட்டை உலர்ந்து விட்டதா என்று தொட்டுப் பார்த்தான் முத்து. அது உலர்ந்திருந்தது ஆச்சரியம்தான். நேற்று இரவுதான் காம்பராவின் பின்பக்கம் இருக்கும் ''பெரல்'' தண்ணீரில் அந்தக் காற்சட்டையை நனைத்துத் துவைத்துக் கழுவி, அடுப்பிற்கு மேலே ஒரு கயிறு கட்டி அதில் போட்டு வைத்தான். நெருப்புத்துண்டுகளையும் கிளறி விட்டான்.

அடுப்பு உஷ்ணத்தில் காற்சட்டை காய்ந்து விட்டது, இனி ஸ்கூலுக்குப் போகவேண்டியதுதான்.

காற்சட்டையைக் கையிலெடுத்த முத்து, அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்தான். அப்போதுதான் காற்சட்டையின் பின்பக்கத்தில் ஐந்து அங்குல நீளத்தில் வாய் திறந்து

இருப்பதுபோல் கிழிந்திருப்பதைக் கண்டான். நேற்று இரவு கல்லில் அடித்த அடியின் பிரதி பலிப்புத்தான் அது. இனி எப்படிக் காற்சட்டையைப் போடுவது? இருப்பதே இது ஒன்றுதான். அதுவும் பல்லிளிக்கிறதே!

முத்துவின் கண்கள் கலங்கின. மறுகணம் நெஞ்சில் ஒரு நினைவு மெல்ல மெல்ல மிதந்து வந்தது. ''இதே தோட்டத்தில் இதே லயத்தில் அவனோடு படித்துவருகிற குமார் எவ்வளவு அழகாக உடுத்தி வருகிறான்.''

அவனுடைய அப்பாவும் இவனுடைய அப்பாவைப் போல ரப்பர் மரங்களை நம்பி வாழ்கிறவர்தான். அவனுடைய அப்பனுக்கு அடிக்கிற வெய்யில்தான் இவனுடைய அப்பனுக்கும். அங்கே கொட்டுகிற மழைதான் இங்கேயும்.

வெய்யில் அடித்தால்தான் ரப்பர் மரம் பாலைப் பொழியும். வேலையும் இருக்கும். மழை பெய்தால் ரப்பர் மரங்கள் அழுதுகொண்டே இருக்கும். அதனோடு சேர்ந்து அவர்களும் அழவேண்டியதுதான். வேலை இருக்காது.

இப்போதெல்லாம் வெய்யில் காலம்; வேலை இருக்கிறது. இருந்தும் என்ன பயன்? முத்துவின் அப்பாவிற்குத் தான் வேறு வேலை இருக்கிறதே! அப்புறம் குடும்பத்தைப் பார்க்க அவரால் எப்படி முடியும்?

குமார் அவன் கண்களுக்குள் வளைய வந்தான் குமாரிடம் மூன்று ஜோடி உடுப்புகள் இருக்கின்றன. அவன் இரண்டு நாளைக்கு ஒன்றாக உடுத்தி வருகிறான். தன்னிலையை எண்ணிப் பார்க்கிறான், முத்து.

''பாட்டீ! ஆயா ... நான் ஸ்கூலுக்குப் போயிட்டு வாறேன்!'' பக்கத்து காம்பரா ராசு காம்பராவில் உள்ளவர்களிடம் விடைபெறும் சத்தம் அவனுக்குக் கேட்டது. ஓ! ஸ்கூலுக்கு நேரமாகி விட்டது! என்ன செய்வது? திடீரென்று ஒரு யோசனை எழுந்தது. உடனே அவன்

சோற்றுப் பானையைத் திறந்து சோற்றுப் பருக்கைகளை எடுத்துக் கொண்டு நடுக் காம்பராவிற்கு வந்தான்.

பழைய கத்தரிக்கோலைத் தேடியெடுத்து, ஒரு பேப்பர்த் துண்டை வெட்டி, அதில் சோற்றுப் பருக்கைகளை நசுக்கி, பசையாக்கிப் பூசி காற்சட்டையின் உட்பக்கம் கிழிசலை இணைத்து ஒட்டினான். கிழிசல் தெரியவேயில்லை.

காற்சட்டையை அணிந்து கொண்டான். புத்தகங் களையும் கொப்பிகளையும் எடுத்துக் கொண்டு "யம்மா...! நா ஸ்கூலுக்கு போயிட்டு வாறேன்" என்று குரல் கொடுத்து விட்டுச் சிட்டாகப் பறந்தான்.

படுக்கையிற் கிடந்த மீனாட்சி தன் தலையைத் தூக்கிப் பார்த்தாள். முத்து அதே காற்சட்டையோடும் மேற்சட்டையோடும் போகிறான். நேற்று இரவு அவன் துவைத்ததும் சற்று முன்னர் கிழிசலை ஒட்டியதும் அவள் ஞாபகத்தில் வந்தன.

'வேறு எந்தப் பிள்ளையாக இருந்தாலும் இந்தக் கிழிசலோடு காம்பராவை விட்டு நகரவே நகராது. ஆனால், அவனோ படிக்க வேண்டும் என்ற ஆசையில் கிழிசலை இணைத்துக்கொண்டு ஓடுகிறான்' என்று தனக்குள்ளே எண்ணிய அவள் நீண்ட பெருமூச்சொன்றை விட்டாள்.

மீனாட்சி படுக்கையில் ஒரு பக்கமாகப் புரண்டு கண் களை மூடிக்கொண்டாள். மூடிய கணகளுக்குள்ளே ஒரு காட்சி ... 'சிவந்த கண்களுடன் அவள் புருஷன் ஆடிஆடி காம்பராவில் நுழைகிறான். அவன் வருமுன்னரே வாடையும் வந்து விடும். நாட்டுக் கள்ளு அவனுள்ளே போய் அவனை ஆட்டிப் படைக்கும். அவன் வைத்ததுதான் சட்டம். அவன் சொன்னதுதான் பேச்சு ...'

அவள் படுத்திருப்பதைப் பார்த்துக் கிண்டலாகப் பேசுவான் ... "உனக்கென்னாடீ கேடு? சும்மா படுத்துக் கெடக்கிற ... ஏன்டீ?"

இது கற்பனையல்ல ... நிசம் ... இப்போது அவன் அங்கே வந்தால் இப்படித்தான் நடக்கும். தினமும் கள் வெறியுடன்தான் லயத்திற்கு வருவான். அதுவும் மூன்று ஆளாக ... யாரும் எதுவும் கேட்க முடியாது. கேட்டால் அடி உதைதான் கிடைக்கும்.

ஸ்கூலுக்குப் போன முத்து உற்சாகம் இல்லாமல் இருந்தான். பாடங்கள் நடந்து முடிந்துகொண்டே இருந் தன. அவன் மனமோ பாடங்களில் ஒட்டாமல் எங்கெல் லாமோ போய்க் கொண்டிருந்தது. அவன் நினைவெல் லாம் காற்சட்டையிலேயே லயித்திருந்தது.

அடிக்கடி அவனை அறியாமலே அவன் கை காற்சட்டை யின் பின்பக்கம் போய்க்கொண்டே இருந்தது. இடை வேளை வந்தது. அவன் எழுந்து வெளியே போகும் போது, காற்சட்டையின் கிழிசல் பிரிந்துவிடுமோ என்ற பயத்தில் மெது மெதுவாக நடந்து போனான். அவனைத் தேடிவந்த ராமன், அவன் சோர்வுடன் இருப்பதைப் பார்த்துவிட்டு ''ஏன் ஒரு மாதிரியா இருக்கிற முத்து?'' என்று கேட்டான்.

முத்து சமாளித்தான் ... ''ஒன்னுமில்லை ...'' அப் போது ரட்ணம் வந்தான்.

முத்து மெல்ல நடந்து போனான். அதைக் கண்ட ரட்ணம், ''எங்கடா போற?'' என்று கேட்டவாறு அவன் காற்சட்டையின் ஒருபகுதியைப் பிடித்திழுத்தான். அவ்வளவு தான்! அந்தக் காற்சட்டையின் பின் பக்கம் மூடிக் கிடந்த வாய் திறந்து கொண்டது. அவன் கையால் தடவித் தட விப் பார்த்தான். கிழிந்தேவிட்டது. அதற்குள் ரட்ணம் காற்சட்டைக் கிழிசலைப் பார்த்துச் சத்தம் போட்டுச் சிரித்தான். அவனோடு மற்றவர்களும் சேர்ந்துவிட்டார் கள். வெட்கம் முத்துவை பிடுங்கித் தின்றது.

''ஒன்னே ஒன்னுதான் வைச்சிருந்தான்; அதுவும் கிழிஞ்சிபோச்சே!'' என்று சற்று சுருதி சேர்த்துப் பாடி

னான் ரட்ணம். மற்றவர்களைக் கிண்டல் செய்வது அவ னுக்கு விருப்பமான கலை.

''வேற கால்சட்டை இல்லியா? கால்சட்டை தரவா? ''

''வேற கால்சட்டை இல்லேனா கிழிஞ்ச கால்சட் டையை போட்டுக்கிறதா? வெட்கம் இல்ல ...'' அவன் தொடர்ந்து சத்தமிட்டுக்கொண்டிருந்தான்.

இனிமேல் அவனால் அங்கே நிற்க முடியாது. அவர் களுக்கு அவன் கேலிப் பொருளாகி விட்டான். வகுப்புக்கு ஓடியவன் புத்தகங்களைக் கையில் எடுத்துக் கொண்டு வகுப்பாசிரியரிடம் சொல்லிவிட்டு ஓடினான் அந்த ஓட்டம் லயத்தின் கடைசிக் காம்பராவில்தான் முடிந்தது.

மீனாட்சி கேட்டாள்; ''ஏன்டா நேரத்தோட வந் திட்ட ... ? ''

அவன் அழுது கொண்டே சொன்னான்: ''நா இனிமே... ஸ்கூலுக்கு போக மாட்டேன் ... கால்சட்டை கிழிஞ்சி போச்சி. ஸ்கூல் புள்ளைகள்ளாம் கிண்டல் செய்யிறாங்க ...''

அவள் பதிலே பேசவில்லை. கிழிந்த கால்சட்டை யோடு போனால் ஸ்கூல் பிள்ளைகள் கிண்டல் செய்யாமலா விடுவார்கள் எனத் தனக்குள்ளே எண்ணிக் கொண்டாள்.

''ஏம்மா! நீயாவது சொல்லி அப்பாக்கிட்ட காற்சட்டை வாங்கி தாவேன்''

''நானா! உன் அப்பனுக்கிட்டையா? நடக்குமா?''

என்று கேட்ட மீனாட்சி ''இந்தாப் பாரு! என் சேலை லச்சணத்தை ...'' என்று தன் சேலை முந்தா னையைக் காட்டினாள். அதில் பல நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருந்தன. அத்தனை சிறிய ஓட்டைகள்! அவற்றின் வழியாக வெளிச்சம் வந்து கொண்டிருந்தது.

முத்து. ''ஓ வென்ற சத்தத்துடன் அழ ஆரம்பித்தான். ''இனி நா ஸ்கூலுக்கு போகமாட்டேன்!' அவன் உறுதியாகக் கூறினான்.

மீனாட்சி கெஞ்சினாள் ,..''நீ இதுக்கா அழுதாக நா எப்படி அழுவனும்? ஒன் அப்பனை கட்டினதிலயிருந்து நா என்னா சொகத்தைக் கண்டேன், ஒரு நாள் எண்டாலும் இரண்டு பேரும் சந்தோஷமா சிரிச்சி பேசினதில்ல. ஒன்னா ஒரு இடத்துக்கு போனதில்ல. யாரோ மாதிரி இந்த லயத்துக் குள்ள இருக்கேன். நானும் எத்தனையோ தரம் சொல்லிப் பார்த்திட்டேன். ஒன் அப்பன் கேட்டாதானே! வேலை செய்ய வேண்டியது. கள்ளு சாராயம் குடிக்க வேண்டியது; ஆடி ஆடி செவந்த கண்ணோட வரவேண்டியது! யாரு புத்தி சொல்லுவா?'' என்று கூறி நிறுத்தினாள் அவன் அன்னை.

''அப்பாவாம் அப்பா!'' கசப்பேறிய நினைவுகளோடு முத்து காம்பராவைப் பார்த்தான்... உள்ளே அவனுடைய தம்பி தங்கைகள் அரை குறை நிர்வாணமாகக் கிடந்தார்கள்.

கண்களைக் கசக்கிக் கொண்டிருந்த முத்துவின் கண்களில் அந்தப் படம் பட்டது. எப்போதோ டவுன் கடை முதலாளி ஒருத்தர் கொடுத்த கலண்டர். அந்தப் படத்தையே உற்றுப் பார்த்தான் முத்து. புகைபடிந்து பழுப்பேறியிருந்தாலும் படம் இன்னமும் கவர்ச்சியாகத்தான் இருந்தது.

ஒரு பீடத்தில் சின்னஞ்சிறு முருகன் அமர்ந்திருக்கச் சிவபெருமான் கீழே இருந்து ஒரு குருவிடம் சிஷ்யன் பாடம் கேட்பதுபோல் செவி கொடுத்துக் கொண்டிருக்கிறார்... இதைத்தான் படம் சித்திரிக்கின்றது. அந்தப் படம் சொல் லும் கதையும் அவன் ஞாபகத்தில் மெல்லமெல்ல வந்தது. வகுப்பில் ஆசிரியர் என்றோ ஒரு நாள் சொன்ன கதை.

தந்தைக்கு மகன் உபதேசம் செய்கின்றான். சிவபெரு மான் தந்தை. முருகன் மகன். தந்தைக்கு மகன் உபதேசம் செய்கிறான். இது மேலே தேவலோகத்தில். இங்கே இந்தப் பூலோகத்தில். அவன் வீட்டில் இப்படி நடக்குமா?

முத்து ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டு யோசித்துக் கொண்டேயிருந்தான். பிறகு காம்பராவைவிட்டு வெளியே இறங்கி ஆலமரத்தருகே போனான். அந்த இடம் அவன் மட்டுமல்ல, அந்த லயத்தில் உள்ள பிள்ளைகள் அனைவரும் விளையாடுவதற்கென ஒதுக்கபபட்டிருந்தது.

அங்கு சென்ற அவன் கூடியிருந்தவர்களைப் பார்த்தான். சிலர் காற்சட்டை இல்லாமலே இருந்தார்கள். சிலர் அவனுடைய காற்சட்டையைவிட மோசமாகக் கிழிந்த காற்சட்டையை உடுத்தியிருந்தார்கள். இந்த வகையில் அவன் காற்சட்டை மேல்! ஆனாலும் மனிதனின் கிண்டல் புத்தி சும்மா விடுமா?

''என்னடா முத்து! ஒன் கால் சட்டை கிழிஞ்சிருக்கு'' ஒருத்தன் கேட்டான். தன் காற்சட்டை கிழிந்திருப்பதைப் பற்றி அவனுக்கு அக்கறை இல்லை. அடுத்தவன் காற்சட்டையைப்பற்றிக் கேட்கிறான். சின்னஞ்சிறு உள்ளங்களுக்குள் இந்த உணர்வுகள் எப்படி நுழைந்தனவோ!

முத்து மௌனமாக இருந்தான். அதற்குள் இன்னொருத்தன் சொன்னான்... ''முத்துகிட்ட இருக்கிறது ஒரே காற்சட்டை! அது கிழியாம என்ன செய்யும்?'' சிவசாமி கதையைத் திருப்பினான். ''நேத்து நம்ம அப்பன் டவுனிலயிருந்து எனக்குக் காற்சட்டை தைச்சி கொண்டாந்தாரு. அதை கொண்டாரவா, பார்க்கிறீங்களா?''

''கொண்டுவா பார்ப்போம்.'' முத்துவைத் தவிர மற்றவர்கள் யாவரும் சொன்னார்கள்.

சிவசாமி ஓட்டமும் நடையுமாக ஓடி தன் காற்சட்டையைக் கொண்டு வந்து காட்டினான். முத்துவைத் தவிர மற்றவர்கள் யாவரும் அதைக் கையால் வாங்கிப் பார்த்தார்கள். முத்து கண்களால் பார்த்தான். முத்து மெல்ல தன் காம்பராவை நோக்கி கவலையோடு நடந்தான்...சிவசாமியின் அப்பாவும் அதே தோட்டத்தில் ரப்பர் மரத்தோடு போராடுகிற தொழிலாளிதான். ஆனால் அந்த அப்பன் தன் மகனின் கல்வி

யில் அக்கறை செலுத்திவந்தான். முத்துவுக்குத் திடீரென்று ஒரு யோசனை பளிச்சிட்டது. அப்பாவிடம் கேட்டால் என்ன? எப்படிக் கேட்பது?...

காம்பராவிற்கு வந்த முத்து புத்தகத்தை விரித்துப் படித்துக் கொண்டிருந்தான். இருட்டியதும் சிவந்த கண்களுடன் தட்டுத்தடுமாறி, அவனுடைய அப்பா வந்தார். முத்துவைப் பார்த்து, ''டேய்! முத்து வாடா இங்கே.'' என்றார். ''நா படிக்கிறேன்'' என்று அவன் சொன்னான்.

''என்னடா பெரிய படிப்பு! இவரு படிச்சி கிழிச்சி, தொர வேலைக்கா போகப் போறாரு. போடா! போயி பீடி வாங்கிட்டு வா!'' அப்பா இரைந்தார்.

முத்து சத்தம் போட்டுப் படிக்க ஆரம்பித்தான். ''அட நான் பீடி வாங்கச் சொல்றேன், இவரு படிக்கிறாரு'' என்று பல்லைக் கடித்துக்கொண்டு முத்துவை அடிக்கப் போனார். தாய் தடுத்தாள்... ''நீ சும்மா இருடீ.'' முத்து புத்தகத்தை மூடி வைத்துவிட்டு நின்றான். அவனிடம் காசைக் கொடுத்தான். அவன் அதை வாங்கிக்கொண்டு வெளியே ஓடினான்.

''படிக்கிறவன் படிப்பைக் கெடுத்து அவனுக்கு ஒழுங்கா உடுப்பு தைச்சி குடுக்காம ஏன் அநியாயம் பண்றே!'' என்று முணுமுணுத்துக்கொண்டு இருந்தாள், முத்துவின் அம்மா.

வெளியே போன முத்து வெகு நேரமாகியும் வரவே இல்லை. அவனுடைய அப்பா உறுமிக் கொண்டு இருந்தார்.

ரொம்ப நேரம் சென்று முத்து வந்தான். வந்தவன் அப்படியே நின்றான். ''ஏண்டா நட்ட மரம் மாதிரி நிக்கிற? பீடி வாங்கலியா?''

அவன் மௌனமாக நின்றான். அவன் மௌனம் அவன் அப்பாவிற்குக் கோபத்தைக் கிண்டியது.

''எங்கடா பீடி...'' பல்லை நறுவிக் கொண்டு கேட்டார்.

''பீடி வாங்கப் படிக்கட்டுலே ஓடினேன். நீங்க கொடுத்த ஒரு ரூபா எங்கயோ விழுந்திருச்சி...''

முத்துவின் அப்பனுக்கு வந்ததே கோபம்! எங்கிருந்தோ வந்த ஆவேசத்தில் முத்துவைக் கட்டிப் பிடித்து அவன் முதுகில் போடப் போனபோது குறுக்கே விழுந்தாள் முத்துவின் அம்மா... ''ஒத்த ரூபாவுக்குப் போயி அடிக்கிறீங்களே, விடுங்க... விடுங்க...!''

''நீ சும்மா இருடீ... ஒனக்கென்னா தெரியும்? ஒத்த ரூபா எவன் தருவான்? ஒத்த ரூபா சம்பாதிக்க நான் படும் பாடு எனக்குத்தானே தெரியும்...'' என்று வேதம் ஓதிய முத்துவின் அப்பா முத்துவின் முதுகில் ஓங்கி அடித்தார். மறு அடி அடிக்க கை ஓங்கிய போது அவன் திமிறிக் கொண்டு போனான்.

''நா ஒரு ரூபாவை காணாமாக்கிட்டேன்னு சொன்னதும் ஒங்களுக்கு எம்புட்டு கோபம் வருது! ஆனா நீங்க இதுவரைக்கும் எவ்வளவு பணத்தை இஷ்டம் போல குடிச்சி நாசமாக்கியிருக்கீங்க! இதைப் பத்தி யாரும் கேட்டாங்களா? அம்மாவுக்கு கட்டிக்க சேலை இல்ல, எனக்கு போட்டுக்க கால் சட்டை இல்ல, இப்படி நாங்க கஷ்டப்பட நீங்க கொஞ்சம் கூட அக்கறை இல்லாம எவ்வளவு பணத்தைக் குடிச்சி முடிச்சீங்க.

''அதைப் பத்தி யாராவது கேட்டாங்களா? ஆனா ஒத்த ரூபாவ நான் காணாமாக்கிட்டேன்னதும் கோபம் வருது ஒங்களுக்கு. அப்படின்னா நீங்க குடிச்சு முடிச்சதைக் கணக்கு பண்ணிப் பார்த்தா எங்களுக்கு எவ்வளவு கோபம் வரும்?'' என்று கூறிய முத்து தன் காற்சட்டை சேப்பில் இருந்த

ஒரு ரூபா நாணயத்தை எடுத்து அப்பாவின் முன்னே போட்டான்.

அது அவன் காலடியில் வந்து விழுந்தது...

முத்துவின் அப்பா ஒன்றும் புரியாமல் முழித்தார். அப்போது முத்து சொன்னான், ''நா ஒத்த ரூபாவ காணாமாக் கல்ல, அப்படி நடிச்சேன்... ஒங்களுக்கு எவ்வளவு கோபம் வந்திச்சி. ஆனா நீங்க குடிச்சி செலவழிக்கிற எத்தனையோ ஒத்த ரூபாவப் பத்தி கவலைப்படாம இருக்கிறீங்க... ஏன்? தட்டிக்கேக்க ஆள் இல்லாததனால்... அப்படித்தானே? அப்பா!''

முத்துவின் அப்பா சிலையாக நின்றார். தன் காலடியில் கிடந்த ஒரு ரூபாவை உற்றுப் பார்த்தார். அங்கே ஒரு ரூபா நாணயக் குவியல் இருப்பதாக அவர் கண்களில் தோன்றியது.

''ஆம்; அவர் குடியில் கொட்டிய ரூபாக்கள் அங்கே குவிந்திருப்பது போன்ற பிரமைதான் அவருக்குத் தோன்றியது.

அவர் ஒரு ரூபா நாணயத்தைக் கீழே குனிந்து எடுத்தார். காம்பராவில் மேலே சுவரில் மாட்டியிருந்த கலண்டர் காற்றில் லேசாக அசைந்தது... கலண்டரில் மகன் தந்தைக்கு உபதேசம் செய்துகொண்டிருக்கும் காட்சியைக் கண்டதும் அவரின் கண்கள் பனித்தன. மறுகணம் முத்துவைக் கட்டியணைக்க அவரின் கைகள் விரைந்தன. முத்து துள்ளிக் குதித்து ஓடினான்.

அதுவரை முகிற்போர்வைக்குள் அடைபட்டுக் கிடந்த வெண்ணிலா மெல்ல மெல்ல வெளியேறிக் கொண்டிருந்தாள். அவளின் தைரியத்தைக் கண்டு தனக்குள்ளே சிரித்துக் கொள்கிறார் முத்துவின் அப்பா.

இதுவரையும் தன்னை மறைத்திருந்த மது அரக்கனிடம் இருந்து தப்பித்துக் கொண்டேனே என்ற மனமகிழ்ச்சியாக அது இருக்குமோ என்னவோ! □

சிந்தாமணி, 1980

# வ. அ. இராசரத்தினம்

மகாவலிகங்கை வளம்பெருக்கும் பிரதேசமாகிய மூதூரில் பிறந்து, அந்த மண்ணிலே இலக்கியப் பயிர் விளைத்து வருகின்றவர் இராசரத்தினம் அவர்கள. இலங்கையர்கோன் நாற்பதுகளின் பிற்பகுதியில் டி. ஆர். ஓ. ஆகப் பதவிவகித்து மூதூரிலேயிருந்தபோது, அவருக்கும் இவருக்கும் இடையே இலக்கிய நட்பு மலர்ந்தது. அப்பொழுது இலங்கையர்கோன் ஊட்டிய ஆர்வமும் காட்டிய திசையும் தம்மைப் படைப்பிலககியத் துறைக்குக் கொண்டுவந்தன என்கிறார், இராசரத்தினம்.

இவரது முதற் சிறுகதையாகிய தோணி 1954இல் பிறந்தது. சிறுகதைகள் எழுதத் தொடங்குமுன் இவர் கவிதை புனைவதில் நாட்டம் கொண்டிருந்தார். கோயம்புத்தூரிலிருந்து வெளியான 'வசந்தம்' மாசிகையிலே இவருடைய முதற் கவிதை 1947இல் வெளியாயிற்று.

இராசரத்தினம் தோணி என்னும் தமது சிறுகதைத் தொகுதிக்காக 1963இல் இலங்கைச் சாஹித்திய மண்டலப் பரிசு பெற்றார்.

இவருடைய படைப்புகளில் மாவலிக் கழிமுகத்தின் மண்மணங் கமழும்.

திரு. இராசரத்தினம் ஆசிரியராகப் பணிபுரிந்து இப்போது ஓய்வு பெற்றிருக்கிறார்.

ஆசிரியம் உயர்ந்தது — மகத்துவமானது. ஆனால், ஆசிரியர்களது வாழ்க்கை நிலை......? ஆசிரிய உலகில், இன்றைய அருணோதயத்துக்கு முன்பிருந்த அந்த இருட்காலத்திலே, அவர்களுக்கு மட்டான வருவாய்; வளம்பெறா வாழ்வு; ஓயாத தொழிற்றுறைப் போராட்டம். அன்று விரக்தியின் உச்சியில் நின்றுகொண்டிருந்த அந்த ஆசிரியர் சமூகத்தின் உள்ளக் குமுறல் இந்தக் கதையிலே அதிர ஒலிக்கிறது. ஒரு கணம் அதனையும் விஞ்சி எழுகிறது, ஆசிரிய மகத்துவத்தின் இனிய நாதம்!... கதையினது இலக்கியச் செழுமை மனத்தைக் கவர்கிறது.

# தெய்வம் ஆசி வழங்குகிறது

வழக்கம் போல அதிகாலை பஸ்ஸைப் பிடித்துப் பத்து மைல்கள் பயணம் செய்து சந்தியில் இறங்கிய ஆசிரியர் சுந்தரலிங்கம், ஐப்பசி மாதத்து மழையைத் தாக்குப்பிடித்து ஒருமைல் தூரம் சேற்று வழியில் பதனமாக நடந்து பாடசாலையை அடைந்தபோது, எதிர் வீட்டுக்காரன், நேற்று வந்த கடிதத்தை அவரிடம் நீட்டினான்.

அதிபர் என்ற பொது விலாசத்திற்கு வராமல், அவரது சொந்தப் பெயருக்கு வந்த அரசாங்கக் கடிதம் என்பதனால் ஆசிரியர் அக்கடிதத்தை எடுத்துப் பரபரப்புடன்

படித்தார். ஒருமுறைக்கு இரண்டு மூன்றாந் தடவையாக அதைப் படித்தார்.

1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நான்காம் திகதியுடன் உமக்கு ஐம்பத்தைந்து வயது பூர்த்தியாகி விடுகின்றது. அன்றைய தினமோ அதற்கு முன்னரோ பாடசாலைக்குரிய சகல பொருட்களையும் பிரதம உதவி ஆசிரியரிடமோ அல்லது நாம் குறிப்பிடும் வேறு யாராவது ஒருவரிடமோ ஒப்படைக்க வேண்டும். உமது உபகாரச் சம்பளம் சம்பந்தமாக இத்திணைக்களத்தோடு தொடர்பு கொள்ளவும். சேவை நீடிப்புத் தேவையாயின் ஆறு மாதங்களுக்கு முன்னதாக எமக்கு விண்ணப்பிக்கவும்.

மீண்டும் ஒரு முறை அக்கடிதத்தைப் படித்தார் சுந்தரலிங்கம்.

சேவை நீடிப்பு......!

சுந்தரலிங்கத்தார் தன்னை அறியாமலே புறுபுறுத்துக் கொண்டார்.

''இந்தச் சேவை நீடிப்பு யாருக்கு வேண்டும்? எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும் என்று பழைய வாக்கியம் இருக்கத்தான் செய்கிறது. ''ஆசிரியன் நாட்டின் அச்சாணி. அவர்களுடைய சேவை மிகமிக மகத்தானது'' என்று பேசிக்கொள்ளாத அரசியல்வாதியே கிடையாதுதான்.

ஆனால், அந்த மகத்தான சேவையைச் செய்துவரும் ''இறைவனுக்கு'' நாட்டில் உள்ள அந்தஸ்துதான் என்ன?''

ஆசிரியர் சுந்தரத்தின் மனப்பாம்பு, இறந்தகாலச் சருகுகளில் சரசரவென்று ஊரத்தொடங்கியது.

முப்பத்து மூன்று ஆண்டுகளின் முன்னே, வெள்ளைக்காரனின் ஆட்சி அஸ்தமித்து, இந்த நாடு சுதந்திரோதயத்தைத் தரிசித்துக்கொண்டிருந்த பொற்காலம். அந்தக்

காலத்திலேதான் அவர் ஆசிரியப் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறுகிறார்.

மூன்று மாதங்களின் பின்னால் அவருக்குப் புருஷ லட்சணமான உத்தியோகம் கிடைத்தது.

'நான் அழகாகத்தான் இருப்பேன்'' என்று அடம் பிடித்துக்கொண்டு நிற்கும் கண்டி நாட்டின் நித்திய செளந்தர்யம் இருபத்திரண்டு வயது இளைஞரான அவரைச் சொக்குப் பொடி போட்டு மயக்கிற்று. பசுமை போர்த்த மலைகள், மலைக்குவடுகளிலிருந்து உருக்கிய வெள்ளிபாய் இழிந்து வரும் நீரோடைகள், கண்ணைப் பறிக்கும் வண் ணங்களில் புஷ்பித்துக் கிடக்கும் பள்ளத்தாக்குகள் எல் லாமே அவரைக் கவிஞனாகவே மாற்றிவிட்டன.

ஆனால் இந்நாட்டின் சுதந்திரோதயம் அந்தக் குறிஞ்சி நாட்டு உழைப்பாளிகளின் உரிமைகளைப் பறித்தபோது; நாளைக்கு இதுதானே நமக்கும் நடக்கப்போகின்றது என அவர் உள்ளுணர்வு சொல்லிக்கொள்கையில் அவரது கவித் துவம் ''தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டு'' நிர்க்கதியாக நிற்கும் அத்தொழிலாள மக்களுக் காகக் கண்ணீர் வடித்தது. அவரது மன உளைச்சல்கள் நிர்க்கதியாகிவிட்ட அச்சமூகத்துக் குழந்தைகளுக்கு ஆகக் குறைந்தது எழுத்தறிவையாவது புகட்டிவிட வேண்டும் என்ற கர்ம யோகமாய் அவருள் விரிந்தன.

ஆ! இந்தத் தொழிலாள வர்க்கத்துக்குத்தான் எழுத் தறிவிக்கும் இறைவன்மேல் எத்தனை மரியாதை!

ஒரு நாட் சாயங்கால வேளை,

மலைக் குவடுகளில் வீசியெறியப்பட்ட சாம்பலின் மூட் டமாக மேகம் படர்ந்து கொண்டிருந்தது. சற்று முன்னர் பெய்த ஒரு பாட்டம் மழையில் தலை முழுகிய தேயிலைச் செடிகளின் குமரியழகைத் தலை நீட்டிய தளிர்களில் தரி சித்தவராக அவர் ''சித்தம் போக்கு சிவம் போக்காக'' நடந்துகொண்டிருந்தார்.

அருமையான அமைதி...! தூரத்தே தேயிலைத் தொழிற்சாலையிலிருந்து வரும் ஓசை, அந்த அமைதியைக் குலைக்கத் திராணியற்றதாய், அந்த அமைதியில் அடங்கிற்று.

சுந்தரம் நடந்து கொண்டேயிருந்தார்.

அவருக்கு எதிராக வந்துகொண்டிருந்த அவரது சக ஆசிரியர் கேட்டுக் கொண்டார்.

''மாஸ்டர் கொஞ்சம் கெதியாக நடவுங்கள்.''

''ஏன்......?''

''ஏனா...? பின்னால் திரும்பிப் பாருங்கள். தங்கள் வேலை முடிந்து தொழிலாளர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் உங்களைத் தாண்டி முன்னால் செல்ல முடியாமல்...''

''ஏன் அவர்கள் போவதை நான் தடுத்தேனா...?''

''தடுப்பது போலத்தான். அவர்கள் உங்களை முந்திக் கொண்டு போகமாட்டார்கள். இது அவர்கள் நமக்குக் காட்டும் மரியாதை...''

சுந்தரம் திரும்பிப் பார்க்கிறார். புல்லுக் கத்திகள், முள்ளுக்கிண்டிகள் சகிதம் பத்துப் பதினைந்து தொழிலாளர்கள். அவர், ஓரமாக ஒதுங்கிக்கொண்டு ''நீங்கள் போங்கள்'' என்கிறார்.

அத்தொழிலாளர்கள் தோளிலிருந்த ஆயுதங்களைக் கையிலெடுத்தபடி அடக்கமாக அவரைத் தாண்டிச் செல்கின்றனர்.

ஆசிரியருக்கு மெய்சிலிர்க்கிறது! ஏற்கனவே கர்மயோகமாக அவருள் விடிந்துவிட்ட ''இறைவன் சேவை'' அந்தக்கணமே பக்தியோகமாய், அந்த யோகமே அவருக்கு எல்லாமாய்... கீதோபதேசம் குருக்ஷேத்திரத்தில் மட்டுமா நடக்க வேண்டும்?

இதெல்லாம் பழைய... பழைய கதை.

மலையகத்து மக்கள் சிவனாரின் தென்னாட்டில் இருந்து வந்தவர்களின் பரம்பரையினர்தான். ஆனால் அவர்கள் ஐந்தொழில் புரியும் அம்பலவாணரேயல்ல. அப்படி யிருந்திருந்தால் மதுரை மாறனின் பிரம்படி அந்தக்கணத்தி லேயே அண்டசராசரங்களின்மீதும் பட்டது போலச் சுதந் திரோதய காலத்திலேயே அவர்கள் மேலே விழுந்த அடி நம்மீதும் பட்டிருக்கும்.

ஆனால் அந்த அடி ஐம்பத்தாறில் விழுந்தது. அடுத்த அடுத்த ஆண்டுகளில் சுந்தரம் ஊருக்கு மாற்றம் பெற்றார்.

மலைநாட்டுச் சேவைக் காலத்திலேயே அவருக்கு ஊரிலே திருமணமாகியிருந்தது. ''ஊரோடு மாற்றம்'' என்ற ஜீவன்முக்தி இப்போது அவருக்குச் சித்தித்திருந் தாலும் ஆண்டுகள் வளரவளரக் குடும்பச் சுமையும் கூடிக் கொண்டுதான் வந்தது. ஆனால், என்றைக்கோ கர்மயோ கமாய் விடிந்துவிட்ட அவரது சேவைமனப்பான்மை அல் லும் பகலும் பாடசாலை மாணவர்கள் என்றே சிந்திக்க வைத்தது.

அந்தச் சிந்தனை திறமை மிக்க ஆசிரியர் வரிசையில் அவரைச் சேர்த்தது.

ஆனால் திறமையும், சேவை மனமும் இருந்தால் மட் டும் போதுமா...?

அவருக்கு வளைந்து கொடுக்கத் தெரியவில்லை. எவ ருக்கும் கூழைக்கும்பிடு போட அவரால் முடியவில்லை. ''காக்காய் பிடிக்க'' மனமில்லை. ஆகவே, அவரோடு- ஏன் அவருக்குப் பின்னாலும் சேவைக்கு வந்தவர்கள் பலரும் அதிபராக உயர்ந்தபோதும் சுந்தரம் உதவி ஆசிரியராகத் தான் இருந்தார்.

''என் சேவை மூப்புக்காக என்னை அதிபராக்கட்டும். அல்லது நிருவாக ரீதியான பரீட்சைப் பேறுகளின் அடிப்

படையில் எனக்குப் பதவி உயர்வு தரட்டும். எந்த அரசியல்வாதியினதும் சிபார்சில் எனக்குப் பதவி உயர்வு தேவையில்லை'' என்று அவர் நெஞ்சை நிமிர்த்தியதில், அவரிலும் சேவை மூப்புக் குறைந்தவர்களின் கீழ் உதவி ஆசிரியராகச் சேவை செய்யவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு அவர் ஆளானார்.

ஆனால், அவர் அதைப் பற்றிக் கவலைப்படவேயில்லை!

காலம் மாறும் என்ற நம்பிக்கை அவருக்கிருந்தது. ''உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள்'' என்ற தத்துவார்த்த கோஷத்தில் நம்பிக்கை கொண்ட அவர், தொழிற் சங்க அங்கத்தவராகிக் கொண்டு ''பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு மொழி அடிப்படையில் சம்பள வித்தியாசம் இருக்கக் கூடாது. எல்லோருக்கும் சம சம்பளம் வேண்டும். எந்த ஆசிரியரும் கடமையினிமித்தம் கந்தோருக்கோ அல்லது வேறெங்கோ சென்றாலும், ஏனைய அரசாங்க ஊழியருக்குப் போல அவர்களுக்கும் பிரயாணச் செலவும், படிச் செலவும் வழங்கப்படல் வேண்டும்.'' என்று உரத்துக் குரல் எழுப்பினார்.

அவரது குரலுக்குப் பதில் கிடைக்காமலுமில்லை. சம சம்பளம் என்ற கோரிக்கை வெற்றியடைந்ததாகத் தோன்றியபோது, அவரது மாணவனாக இருந்த ஆசிரியருக்கும் அவருக்கும் ஒரே சம்பளம் கிடைத்தது! ஆகக்குறைந்தது மூன்றுவருட சேவைக்கு ஒருவருடச் சம்பள உயர்வாவது தேவை என்ற கோரிக்கை இன்னமும் கோரிக்கையாகவே இருக்கின்றது.

பிரயாணச் செலவு, படிச்செலவு என்பன வார்த்தைகளில் வடிக்க முடியாத வேய்ங் குழலின் இனியநாதம் போல இன்னமும் நாதரூபமாகவே இருக்கின்றது.

ஆனால் ஆறு ஆண்டுகளின் முன்னால் பரீட்சை ஒன்று எழுதிச் சித்தியடைந்ததில் அவர் அதிபராக உயர்ந்து விட்டார்.

ஆனாலும் அதனால் என்ன பயன் ......?

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னே அவரது மாணவனாக இருந்தவன், எந்த அரசியல் வாதியையோ பிடித்து வங்கி உத்தியோகத்தன் ஆகிக்கொண்டு முப்பத்துமூன்று வருடங்கள் மட்டையடித்த அவரைவிட அதிகமாகச் சம்பளம் பெறுகிறான்.

மகா வித்தியாலயங்களில் பொருட் கணக்கெடுக்கவரும் தமது அலுவலக உத்தியோகத்தர்களோடு ஒரு சில ஆசிரியர்களும் அதே வேலையைச் செய்ய பணிக்கப்படுகிறார்கள். கந்தோர் எழுத்தாளர்களுக்குப் பிரயாணச் செலவு, படிச் செலவு வேறு. ஆனால் ஆசிரியர்களுக்கு ......?

அரசியல்வாதிகள் ''ஆசிரியத் தொழில் மகா புனிதமானது'' என்று சொல்லிச் சொல்லியே தமது வர்க்கத்தினரின் தலையில் மிளகாய் அரைக்கிறார்கள். அவர்களிடம் அரைபட்டது போதும் என்று நாட்டின் அறிவாளிகள் நைஜீரியாவிற்கும் ஸாம்பியாவிற்கும் செல்கிறார்கள்.

அந்த வசதியற்றவர்கள், ஓய்வு பெறுவதைத் தவிர வேறு வழியேயில்லை !

சுந்தரத்தின் நினைவு இழைகள் படீரென அறுபட்டது போலத் தோன்றிற்று. கணந்தான். ஆயினும் தன்னைச் சுற்றி நூலிழை பின்னும் பட்டுப்புழுவின் துரிதத்தோடு மீண்டும் நினைவு இழைகளை அவர் மனம் பின்னிக் கொள்கிறது.

வயிற்றுக்கும் வாய்க்குமே போதாது என்ற நிலையில் தான் அவரது சம்பளம். இந்த லட்சணத்தில் பிள்ளைகளின் ''போடிங்'' செலவு வேறு! எத்தனை தான் செட்டாகச் சீவித்தாலும் கடன்தான் மிஞ்சுகிறது. இந்த அழகில் மாதமாதம் கிடைக்கும் வருமானமும் அடுத்த மே மாதத்துடன் நின்றுவிட்டால் ......

சுந்தரத்தால் அந்த நினைவைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. நமது கந்தோர் என்ன நாம் ஓய்வுபெற்ற

அடுத்தமாதமே உபகாரச் சம்பளத்தைத் தந்துவிடப் போகிறதா ? அதற்குப் பலமாதங்கள் — ஏன் வருடங்கள்கூட ஆகலாம் ...... உபகாரச் சம்பளத்தைப் பெறுமட்டும் எப்படித் தான் காலந்தள்ளுவது ? சில்லென்றடிக்கும் ஐப்பசி மாதத்து வாடைக் கடுவலிற் கூட அவருக்கு வியர்த்தது.

நேற்றிரவு தன் சகதர்மினியிடம் நடத்திய சம்பாஷணை அவர் ஞாபகத்திற்கு வந்தது. அவள் கேட்டாள்:

''இப்பவே பென்ஷனுக்குப் போய் என்ன செய்யப் போறீங்க ? அரசாங்கம் அறுபது வயசுவரை சேவை நீடிப்புத் தருகுதாமே ......''

''இன்னமும் ஐஞ்சு வருஷமா? என்ர ஐம்பத்தைஞ்சு வருஷ வாழ்க்கையில் நாற்பத்தெட்டு வருஷம் பள்ளிக்குப் போய் அலுத்துப் போச்சு ...'' என்று சொல்லிச் சிரித்தார் அவர்.

அவரது நகைச்சுவையை விளங்கிக்கொள்ளாமல் அவர் மனைவி அலமருகையில் சுந்தரமே அதற்கு விளக்கம் சொன்னார்,

''பிறந்ததிலிருந்து ஐஞ்சு வருஷம் பள்ளிக்குப் போகல்ல. பிறகு எஸ். எஸ். சி. யைப் பாஸ் பண்ணிற்று ரெயினிங் கொலிஜ் போறவரைக்கும் இரண்டு வருஷம் பள்ளிக்குப் போகல்ல. மற்றக் காலமெல்லாம் — சரியா நாப்பத்தெட்டு வருஷம் பள்ளிக்குப் போய்ப் போய் அலுத்துப் போச்சு ...''

''என்ன செய்றது, இன்னமும் இரண்டு வருஷமாவது போகத்தான் வேணும். அதுக்குள்ள மூத்தமகளுக்கு ஒரு வழி பிறந் ......''

''அந்த வழி நான் உத்தியோகம் பாத்தாத்தான் பிறக்குமாக்கும்...? எனக்கென்னவோ இந்த உத்தியோகமே அலுத்துப் போச்சு. அதிலயும் இப்ப படிப்பிக்கிற பாட

காலையில் படிப்பிக்கிறதே பெரிய வேதனையா இருக்கு. என்ர தரத்துக்கு நான் ஒரு பெரிய. பாடசாலையிலே அதிபராக இருக்க வேண்டியவன்.''

''இந்தக் கெறுவாலதானே ஏற்கனவே, உங்களுக்கு மூணாந்தர அதிபர் பதவிகிடைக்கல்ல. போய்வந்த இன்ரெவியூக்கு அது கிடைக்கிற வரைக்குமாவது கொஞ்சம் அமைதியாயிருங்க: அது கெடைச்சாக் கெடைக்கிற பென்ஷன்லயாவது பத்துப் பதினைஞ்சு வாரதா?''

இன்ரெவியூக்குப் போய் மூணுவருஷமாச்சு. அந்தப்பைல் எல்லாம் எந்தக்குப்பையில கிடக்குதோ! அது வாறதாயிருந்தாக்கூட நான் இன்னமும் சேவையில் இருக்கவிரும்பல்ல. எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் பகடைக்காயாத் தள்ளப்பட்டு மாற்றம் பெறுபவன் வாத்தியார் மட்டுந்தான். வேற எந்தக்கந்தோர் பியோனைக்கூட மாத்த ஏலாது: ஐம்பத்தைஞ்சுக்குமேல ஒரு நிமிஷமும் நான் வேலை பார்க்கவே மாட்டன்...''

''வேலையில்லாம என்ன செய்யப்போறீங்க''

''செய்யிறதா ? நம்மூர் மகாவித்தியாலயத்திற்கு முன்னால கடலைத்தட்டி வைச்சி யாவாரம் பண்ணுவன். அப்ப வாச்சும் தொறக்க வேண்டியவன்கள்ர கண் தெரறக்கட்டும்......''

அவர் மனைவி நாடியைத் தோள்பட்டையில் இடித்துக்கொண்டு வேகமாக அடுக்களைக்குள் சென்று விடுகிறாள்

தனது தீவிரத்தின் மன உளைச்சல்களோடு சுந்தரம் சாய்கதிரையில் படுத்திருக்கையில் அடுத்த தெருச் செல்லையா அவரைத் தேடிக்கொண்டு வருகிறார்.

''மாஸ்டர். உங்களிட்டைத்தான் வந்தன் ......''

''எனக்கிட்டவா? என்ன சங்கதி அண்ணன் ......?''

''வேறொன்றுமில்ல மாஸ்டர். என்ர மூத்தமகன்ர வியாதிய இங்க ஒருத்தரும் கண்டு பிடிக்கிறாங்க இல்ல. திருகோணமலைப் பெரியாஸ்பத்திரிக்குப் போய் எக்ஸ்ரே எடுக்கட்டாம். அங்க இருக்கிற டாக்குத்தர் ராமலிங்கம் உங்கட மாணவன் என்று சொல்வீங்களே, அவருக்கு ஒரு கடிதம் தந்தீங்க என்றா வசதியா இருக்கும் ...''

சுந்தரத்தின் மனஉளைவுகள் சீழ் வெளியேறிவிட்ட புண்ணாகச் சற்று இதமடைந்தன.

''இருபது இருபத்திரண்டு வருஷத்துக்கு முன்னால் திருகோணமலைப் பட்டினத்தில அவனுக்குப் படிப்பிச்சன். ஆனாலும் இப்பவும் அவன் என்னை மறக்கமாட்டான்'' என்று சொல்லிக் கொண்டே கடிதத்தை எழுதிச் செல்லையாவிடம் கொடுத்தார். அவரது சிறுமைகள், அவரது வீழ்ச்சிகள், அவரது மன உளைவுகள், அவரது வேதனைகள் எல்லாமே அவரை விட்டு அகல. மலையாய் உயர்ந்து நின்ற ஸ்வானுபூதத் தெம்புடன் ஆசிரியர் படுக்கைக்குப் போனார்!

பாடசாலையில் சலசலப்பு அதிகமாயிற்று. ஊதற்காற்றோடு தூமித்துக் கொண்டிருந்த மழை நின்று விட்டதும். பாடசாலைக்குப் பிள்ளைகள் வரத் தொடங்கிவிட்டார்கள். நேரமும் எட்டரைக்கு மேலாகிவிட்டது.

உதவி ஆசிரியர் வருவாரோ வரமாட்டாரோ! லீவுக் கடிதம் வந்தாலும் வரலாம். அவர் மந்திரியின் ஆள்!

ஆசிரியர் மணியை அடித்துப் பாடசாலையைத் தொடங்குகிறார். பிள்ளைகள் நிரைத்து நிற்க மூன்றாம் வகுப்பு மாணவன் ஒருவன் தேவாரம் பாடுகிறான்.

''சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்''

மற்றவர்கள் அவனைத் தொடர்கிறார்கள்,

பிரார்த்தனை முடிந்து மாணவர்கள் வகுப்புக்குச் சென்றதும் ஆசிரியர் பம்பரமாகிறார்.

நான்காம் ஐந்தாம் வகுப்புகளுக்குக் கரும்பலகையில் கணக்குகளை எழுதிவிட்டு மூன்றாம் வகுப்புக்கு மொழிப் பயிற்சியாக எழுத்து வேலை கொடுத்து முதலாம் இரண்டாம் வகுப்புகளை ஒன்றாகச் சேர்த்துக் கதை சொல்ல முனைகையில் அவர் மனம் மீண்டும் எங்கோ தாவுகிறது.

அரசாங்கத்தின் சுற்று நிருபப்படி இந்தப் பாடசாலையில் ஐந்து ஆசிரியர்கள் இருக்க வேண்டும். ஆனால் இருப்பதோ இரண்டே இரண்டு ஆசிரியர்கள் தான். இந்தநிலை தான் இந்த வட்டாரத்தின் எல்லாப் பாடசாலைகளிலும். ஆனால் நாட்டிலே தேவைக்கு அதிகமாக ஆசிரியர்கள் இருப்பதாக அரசாங்கம் நாளாந்தம் சொல்லிக் கொள்கிறது என்ன கணக்கோ ? என்ன புள்ளி விபரமோ ?

இந்த லட்சணத்தில் தன்னைப் போன்றவர்களும் ஐம்பத்தைந்து வயதிலேயே பென்ஷனுக்குப் போய் விட்டால் இந்தக் குழந்தைகளின் கதி ?

அவரது கணநேரச் சிந்தனைக்குள் மாணவரிடையே சலசலப்பு.

''சேப்பிரம் அடிச்சிற்றான் ஐயா ...''

''சேப்பிரமா ? அப்படிச் சொல்லக் கூடாது : சிவப்பிரகாசம் ...'' என்று திருத்துகிறார் சுந்தரம்.

தந்திச் சேவகன் வேர்த்துக் களைத்துச் சைக்கிளில் வருகிறான்.

அவன் நீட்டிய அட்டையில் கையெழுத்திட்டு அந்த ''எக்ஸ்பிரஸ்'' கடிதத்தை வாங்கி உடைத்து......

அடியிலே எழுதியவரின் கையெழுத்தைப் பார்க்கிறார்.

பால — சுகுமார் !

அவர் மனம் மீண்டும் எங்கோ தாவுதிறது,

அவர் இங்கு வர முன்னர் படிப்பித்த மகா வித்தியாலயத்தில் அந்த ஆண்டுதான் சர்வகலாசாலைப் புதுமுக வகுப்புகளை தொடங்கினார். அவர் வகுப்புகளில் கற்பிக்கப் போது

மான பட்டதாரி ஆசிரியர்கள் இல்லை. ஆனாலும் மாத மாதம் பணத்தைக் கொட்டிப் பட்டினம் சென்று படிக்க முடியாதவர்களின் வசதி ஒன்றைமட்டும் கருத்திற் கொண்டு வகுப்புக்கள் தொடங்கப்பட்டுவிட்டன.

அவ்வகுப்புக்களில் ஒன்றிற்குத் தமிழ் கற்பிக்கவேண்டிய கடமை ''கண்டது கற்றுப் பண்டிதரான'' சுந்தரத்தின் தலையில் விடிந்தது !

இரவு இரவாக கம்பனையும், வீரமாமுனிவரையும், மாணிக்கவாசகரையும் கற்று, பவணந்தியையும் செல்வநாயகத்தையும் படித்துப் பகலிலே தம் மாணவர்களுக்குத் தமிழ் செய்தார் சுந்தரம்.

இரண்டு வருடங்களின் பின்னால் அந்தக் கிராமத்து மாணவர்கள், இந்த வட்டாரத்திற்கே பெருமை பெற்றுத் தந்தவர்களாகச் சர்வகலாசாலையில் காலடி எடுத்து வைத்தார்கள்.

அவர்களில் தமிழை விசேட பாடமாக வரித்துக் கொண்ட அவரது மாணவன்தான் கடிதம் எழுதியிருக்கிறான் ! தமிழ் ''ஒணர்ஸ்'' செய்து முதுமாணியாகி, கலாநிதியாகித் தன் பெயரைச் சர்வகலாசாலை மட்டும் நிலைநாட்டுவான் என்று தான் கனவுகாணும் அந்தக் கிராமத்து மாணவன் ...

சுந்தரம் அவன் கடிதத்தைப் படிக்கிறார்.

அன்புள்ள ஆசானுக்கு,

அந்த விளியை வாசித்ததுமே ஆசிரியர் தம் மனதுள் சிரித்துக்கொள்கிறார். வெளி வேலை ஒன்றும் இல்லாவிட்டால் தன் கிராமத்து மாரியம்மன் கும்பத்துக் குடிசைகளில் உடுக்கடிக்கவாவது சென்றுவிடும் அந்தத் துடிப்புள்ள மாணவன் தன்னை ஆசான் என்று விளிக்காமல் வேறு எப்படித்தான் விளிப்பான்...?

ஆசிரியர் கடிதத்தைத் தொடர்ந்து படிக்கிறார்.

''ஜப்பான் முதலான கிழக்கு நாடுகளுக்குச் செல்வதற்கு எனக்கு ஸ்கொலர்ஷிப் கிடைத்திருக்கிறது. நாளை மறுதினமே கொழும்பிலிருந்து புறப்பட வேண்டும். செய்தி எனக்கு இப்போதுதான் கிடைத்தது. ஆகவேதான் கடுகதித் தபால் எழுதித் தங்கள் ஆசியை விழைகிறேன்.''

மெய்சிலிர்த்து ஆனந்தக் கண்ணீர்விட்டார் சுந்தரம். தன் ஐம்பத்தைந்தாவது வயதிலேயே உபகாரச் சம்பளம் பெறும் எண்ணத்தைக் கைவிட்டுவிட்டாரோ என்னவோ!

ஆனால் அவரது சிறுமைகள், அவரது வீழ்ச்சிகள், அவரது மனஉளைவுகள். வேதனைகள், எல்லாமே அவரை விட்டு அந்தக் கணத்திலே அகன்றுவிட அவர் மனம் மட்டும் சேறும் சகதியும் நிறைந்த வயல்வெளிகள் என்ற பசுமைக் காட்சியிடையே கம்பீர்யமாக உயர்ந்து நிற்கும் தம்பலகாமத்துக் கோணேசர் கோயில் விமானம் போல உயர்ந்து புனிதமாய் மிளிர்ந்தது!

நெஞ்சை நிமிர்த்தியபடி காரியாலய அறைக்குள் சென்ற சுந்தரலிங்கம் ஆசிரியர், அலுமாரியைத் திறந்து இலவசப் புகையிரதச் சீட்டுப் புத்தகத்தை எடுத்து, தன் மாணவனுக்கு ஆசிகூறி வழி அனுப்புவதற்காகக் கொழும்புக்குச் செல்வதற்கு ''வாரன்ற்'' எழுதத் தொடங்கினார். □

வீரகேசரி, 1980.

# எஸ். முத்துகுணரத்தினம்

கல்லூரி மாணவனாகவிருந்த காலத்திலேயே வானொலிச் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற காம்பீர்யத்துடன் எழுத்துத் துறையிற் புகுந்தவர், குணரத்தினம் அவர்கள். 1976 இலிருந்து சிறுகதை படைத்தலில் தீவிரமாக ஈடுபட்டிருந்த இவரை நாடி, பரிசுகளும் வந்து கொண்டிருந்தன. 1977 க்கும் 82 க்கும் இடைப்பட்ட காலத்தில் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற சிறுகதைப் போட்டிகளில் ஆறு பரிசுகளை இவர் வென்றார்; இவற்றுள் முதற்பரிசுகள் மூன்று.

குணரத்தினம் எழுதிய 'நிழல்கள்' என்னும்சிறுகதை தமிழ்நாட்டில், குங்குமம் - அக்கரைச் சிறப்பிதழில் இடம்பெற்றது.

ஏறக்குறைய 30 சிறுகதைகளை இதுவரை இவர் எழுதியுள்ளார். சிறுகதையே இவர் விரும்பிப் படைக்கும் இலக்கிய வடிவம். எனினும், அண்மைக்காலத்தில் இரண்டு நாவல்களையும் குணரத்தினம் எழுதி முடித்துள்ளார்.

முத்து குணரத்தினம் யாழ் நகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இலங்கை வங்கியின் கிளை ஒன்றில் முகாமையாளராக இப்பொழுது பணிபுரிகின்றார்.

மனிதனது மனத்திலும், பேச்சிலும், செயலிலும் தோன்றும் சில வக்கிரங்களைக் குத்திக் காட்டும் சித்திரம், இந்தக் கதை, தாங்கள் செய்கின்ற ஒவ்வொரு தவற்றுக்கும் சுயநலச் செயலுக்கும், சமூகநெறி வரம்புமீறல்களுக்கும் உடனுக்குடன் நியாயம் கற்பித்து அதனால் அவற்றைப் போர்த்து மூடிவிடுவது மனிதருட் பலருக்குக் கைவந்த கலை ...... கதைஞர், பஸ் பயணம் ஒன்றைக் களமாக வைத்து, இப்படியான பல்வேறு நியாயப்படுத்தல்களைக் காட்டுகிறார் ...... கதை கூரிய அவதானிப்பின் — சிந்தனைச் சீற்றத்தின் வெளிப்பாடு.

# நியாயப்படுத்துகின்ற கெட்டிக்காரர்கள்

யாழ்ப்பாணம்' என்று போர்ட் போட்டவாறு அந்த பஸ் மெதுவாகத் திரும்பி, 'ஸ்ரான்டில்' அதற்குரிய இடத்தில் வந்து நின்றதைக் கியூவில் நின்று அவன் பார்த்துக்கொண்டுதானிருந்தான் தவம் கிடந்த கொக்குகளின் பரபரப்புடன் மீனைப் பிடிக்கச் செல்லும் வேகத்துடன், திடீர்ப் பாய்ச்சலோடுநாற்பது ஐம்பது பிரயாணிகள் பாய்ந்து ஓடுகிறார்கள்.

அவர்கள் எல்லோரும் முன் கூட்டியே ரிசேர்வ் செய்து ஆசனத்தைப் பதிவு செய்தவர்களாக்கும் என்று மனதில் நினைத்துக்கொண்டான், அவன்.

ஆனால், ஆசனத்தைப் பதிவுசெய்து ஒதுக்கியவர்கள் அப்படி முண்டியடித்து ஓடித்தான் கோணர்சீற்றைப் பிடிக்க வேண்டுமா? போட்டியிலும் அவசரத்திலும் சுயநலத்திலும் பழகிவிட்ட சமுதாயம்! அநேகமாக அதில் எல்லோரும் வெவ்வேறு அரசாங்கத் திணைக்களங்களில் தொழில் புரியும் படித்தவர்கள்தான்.

அவர்கள் அப்படி ஓடியதைப் பார்க்க அவனுக்குச் சிரிப்பாக இருந்தது.

யாழ்ப்பாணத்திற்குப் போவதற்கென்று தன்னோடு, ஆசனத்தை முன்கூட்டியே பதிவுசெய்து ஒதுக்காமல், வரிசையில் நிற்கும் மற்றவர்களைப் பார்த்துக்கொண்டான்,

ஒரு வித்தியாசம் பளிச் சென்று தெரிந்தது! கியூவில் நின்றவர்களில் அநேகரின் முகத்தில் அப்பாவித்தனமும் கையாலாகத்தனமும் எழுதி ஒட்டப்பட்டதுபோல் இருந்தன. மூட்டை முடிச்சுகளோடு தூரக்கிராமத்திலிருந்து வந்தவர்களும், வியாபாரிகளும் விவசாயிகளும்தான் பெரும்பாலும், எதிர்பார்ப்புகளுடன் நிற்பதைப் பார்க்கும் பொழுது அந்தப் புது விதமான வர்க்க பேதம் அவனுக்குத் தெட்டத் தெளிவாகப் புரிந்து விட்டது.

அது,

'இன்புளுவன்ஸ்' நிறைந்தவர்களும் தமது பதவியைக் கொண்டே பிறரிடம் தேவையான உதவிகளைப் பெறத் தெரிந்த சமார்த்தியசாலிகளும் அந்தச் சமார்த்தியம் இல்லாது தவிக்கும் இன்புளுவன்ஸ்' அற்ற அப்பாவிகளும்தான் என்பது. இரு சமாந்தரக் கோடுகள் போன்று அவனது மனதுக்குப் பார்த்த மாத்திரத்தில் தெரிந்துவிட்டது.

பஸ் 'சாமர்த்திய சாலிகளை' ஏற்றிக்கொண்டு நிறைந்து அந்த வரிசைக்கு வந்ததை அவன் மிகுந்த ஏமாற்றத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

''என்னப்பா இது! தூரப் பயணத்துக்கு என்று ஆசனம் ஒதுக்கப் போனால் அங்க சொல்றான் பதினைஞ்சு பேருக்குத்

தான் ஆசனம் ஒதுக்க ஏலும்; அதுக்கு மேல் முடியாது என்று, இங்கபார்த்தால், டிரைவர் முதற் கொண்டு செக்பண்ணுறவர்வரைக்கும் தெரிஞ்சவங்களுக்குச் சலுகைசெய்து, எல்லா சீற்றும் 'புக்' பண்ணின மாதிரி பஸ் நிறைஞ்சு வருகுதே. இந்தக் கியூவில் பகல் இரண்டு மணிக்கு வந்து வெயிலில் காத்திருந்தவங்கள் மடையங்களா? எப்படி இந்த இரவுப் பயணத்தில பஸ்சுக்குள்ள இரா முழுவதும் நின்று போகிறது?''

யாரோ ஒருவரின் அங்கலாய்ப்பைப் பார்த்து அவனுக்கு மனம் பரிதவிக்கின்றது.

இந்த நியதிகள் எல்லாம் அவசியம் வேண்டும்தானா?

ஆசனம் பதிவு செய்வதையே முற்றாக ஒழித்து விட்டால் என்ன?

அவன் மனம் துடித்துக் கேட்கின்றது.

அப்புறம், அந்த ஒழுங்குகள் இல்லாவிடில் என்ன நடக்கும்? வேறுவிதமான வல்லமை பொருந்தியவர்கள், பலத்தைக் காட்டி. அப்பாவிகளை நசித்து முண்டியடித்து முதல் ஏறுவார்கள். மற்றவர்கள்...? இந்த உலகம் பலவான் கையில் தானா?

அவன் தனது முறை வந்தபொழுது கண்டக்டரிடம் ஐம்பது ரூபா நோட்டைக் கொடுத்து 'யாழ்ப்பாணம் ஒன்று தாங்க.' என்றான்.

கண்டக்டர் சரசரவென்று ரிக்கற்றை எழுதி, மிகுதியைக் கொடுக்காது ரிக்கேற்றின் பின்புறம் 50/- என்று எழுதி அவனிடம் கொடுத்தான்.

''மிச்சம் தாங்க.''

''பிறகு எடுக்கலாம். இப்ப வரிசையில் ரிக்கற் போட்டு முடிச்சப்பிறகு தாறன்.''

அந்தச் சிறு காகிதத்துண்டை அவன் மிகுந்த கவனத்தோடு ஷேர்ட் கைமடிப்புக்குள் வைத்துச் சுருட்டி விடுகிறான்.

அவனைப் பொறுத்தவரையில் எவ்வளவு பெறுமதி வாய்ந்தது அது!

இழந்துவிட்டால் ஐம்பது ரூபா இழப்பு. பயணச் சீட்டுப் பெறுமதி... தண்டம்... வாக்கு வாதங்கள்... அவமரியாதை... பொலிஸ் ஸ்ரேஷன்... கோட்... ஓ!

வைத்த இடத்திலே பத்திரமாக உள்ளதா என்று மீண்டும் தடவிப் பார்த்துக்கொண்டான்.

சில நிமிடங்களில் அந்தக் கடுகதி பஸ் தனது நீண்ட இரவுப் பயணத்தை ஆரம்பித்தபொழுது, அந்தப் பஸ்ஸில் உட்கார்ந்திருந்த பிரயாணிகளைவிட நிற்பவர்கள் தொகை இருமடங்காவது இருக்கும் என நினைத்துக்கொண்டான்.

தலைக்குமேல் தொங்கிய 'தோல்வாரை' அவன் பிடித்தவாறு தொங்கியபொழுது, தன்னைப்போல் அநேக 'வௌவால்களை, அங்கே பார்த்துப் பரிதாபப்பட்டுக்கொண்டான்.

கீழே சீற்றுகளில் சமார்த்தியசாலிகளான 'அழுங்குகள்' விறைப்பாக அமர்ந்திருந்தார்கள்.

''இரவுப் பயணத்தில், அதுவும் 250 மைல் தூரம், பொம்பிளைகள் பஸ்ஸில் பயணம் செய்யக்கூடாது. நிற்கிற ஆக்களுக்குப் பொம்பிளை எண்டாப்போல இடம் கொடுக்க முடியுமா?....ஆச்சி... கொஞ்சம் முன்னுக்குத் தள்ளிப் போ... அதில ஒரு மாதிரிப் பார்த்து இரு.''

தனக்குப் பக்கத்தில் நிற்கும் கிழவியைப் பார்த்து ஒரு 'அழுங்கு' சொல்கிறது. கிட்ட நின்றால் பிறகு இடம் கொடுக்கவேண்டி நேருமோ என்ற பயமோ?

பஸ் காற்றைக் கிழித்துக்கொண்டு விரைகின்றது.

இந்த உலகில் சமத்துவமும், சரி நிகர் தகுதிகளும், எல்லாரும் பெறவேண்டும் என்று கூச்சலிடுவதில் அர்த்த மில்லைப்போல் அவனுக்குத் தெரிந்தது.

முரண்பாடுகளும் வித்தியாசங்களும், வாழ்வின் ஒவ் வொரு திருப்பங்களிலும் சந்திகளிலும் நின்று கூக்குரலிட்டு, கைகொட்டிக் கொக்கரிப்பதை அவன் நிதர் சனமாகக் கண்டான்.

பக்கத்திலிருந்தவரோடு புது நட்புகள்; அரசியல் பேச்சு கள்; அந்தரங்கங்களைக் கிண்டியெடுக்கத் துணைபோகும் கேள்விகள்; குசலங்கள்; கற்பனைகள்; கனவுகள்; பஸ் ஸின் வேகத்தைக் கடந்து ஊருக்குப் போய்விட்ட மன நினைவுகள்; ஒதுங்கிய தனிமைத் தவிப்புகள்! அந்தப் பஸ் சுக்குள் ஒரு கோடி நினைவுகள் சங்கமித்துக் கொண்டிருந் தன!

பஸ் ஒருதரிப்பில் நின்றுவிட்டு மணி அடித்துப் புறப் பட்டபொழுது, மீண்டும் படபட வென்று கோவிற் பூசை மணிபோல் அடிக்கவும், பஸ் ஒரு குலுக்குடன் நின்றது. சீற்றில் இருந்தவர்கள் முதலில் சலித்துக் கொண்டார்கள். "ஒரே தொல்லை, இந்தக் கண்டக்டர் தன்ரை ஊக்குவிப்புப் பணத்துக்காக மனுஷரை ஒவ்வொரு ஹோல்டிலும் ஏத்தி ஏத்திக் கொண்டிருக்கிறான், இது கடுகதி பஸ் எண்ட தையும் மறந்து."

நின்றுகொண்டிருந்த பஸ்சுக்கு வெளியே கூச்சல்.

"ஐயோ! என்ரை கை முறிஞ்சு போச்சுதே! நான் சாகப்போறன்! ஐயோ!"

எல்லோரும் பரபரப்புடன் எட்டிப் பார்க்கிறார்கள்.

நடுத்தர வயதைக் கடந்து கிழத்தை எட்டிப்பார்க்கும் ஒரு மனிதனை, பஸ்ஸின் முன் கதவால் பிடித்துக் கொண்டு

வந்து, டிரைவரின் பின்னுக்கிருந்த குருமாரின் சீற்றில் இருந்தவர்களை எழுப்பி அதில் கண்டக்டர் இருத்தினான்.

கிழவனின் வலதுகை, தோல் உரிந்து, சிராய்ப்புடன் இரத்தம் ஓடிக்கொண்டிருந்தது. மணிக்கட்டுடன் முறிந்து தொங்கியது போலிருந்தது!

''ஏற வேண்டாமென்று மணி அடித்தபின் உன்னை யார் ஏறச் சொன்னது? மிதி பலகையில் நின்று லைற் போஸ்ரோடு மோதிவிட்டு இப்ப எங்களுக்குக் கரைச்சல் கொடுக்கிறாய்...ம்...றைட் எடு அண்ணே பஸ்ஸை. இடையில் வாற பொலிஸ் ஸ்ரேஷனில் என்றி போட்டிட்டுப் போவம். இல்லாட்டி எங்களுக்குத்தான் பிறகு பிரச்சினை.''

பஸ் மெதுவாகக் கிளம்பியது.

டிரைவருக்கு ஏகப்பட்ட ஆத்திரம். அடிக்கடி முனகிக் கொண்டும் நோவினால் பிரலாபித்துக் கொண்டுமிருந்த கிழவனை ஆத்திரத்துடன் திரும்பிப் பார்த்தவாறே பஸ்ஸை ஓட்டிக்கொண்டிருந்தான். பொலிஸ் ஸ்ரேஷன், முறைப்பாடு, ஆஸ்பத்திரி, மருந்து கட்டல் என்று நினைத்தவுடன் டிரைவருக்குக் கொதித்துக்கொண்டு வந்தது.

''இந்தக் கிழவனை இனிப் பொலிஸ் ஸ்ரேஷனுக்குக் கூட்டிச் சென்று 'என்றி' எழுதிப் போற தெண்டால் நாங்கள் போனமாதிரித்தான். உவனை இதில இறக்கி விடுங்கோ.'' யாரோ சொல்வது கேட்கிறது. கூடவே பல குரல்கள் பீரிட்டுக் கிளம்புகின்றன.

''எடுத்ததே இரண்டு மூன்று நாள் லீவுதான், இந்தக் கிழவனுக்கு மருந்து கட்டி பொலிஸ் ஸ்ரேஷன் போய்ப் போற தெண்டால் நாளைக்குக் காலை பத்து மணிக்கும் வீட்ட போக ஏலாது.''

''நாளைக்குத் தீபாவளிக்கு விடிய வீட்ட போன மாதிரித்தான்! உவனோட இங்க மாரடிக்கிறதிலும் இங்கே எங்காவது சந்தியில் இறக்கி விட்டுப் போறதுதான் நல்லது அண்ணே.''

''குடித்து விட்டு ஏறினதே கிழவா?''

''நாளைக்குக் காலம்பற நான் ஒரு கொன்பறன்ஸிற்கு நிற்க வேணும். இப்பிடி யென்றால் போன மாதிரித்தான்.''

பஸ்ஸில் தொங்கிக்கொண்டு நின்ற அவன், காயம்பட்ட அந்தக் கிழவனுக்காக இப்பொழுது பரிதாபப்பட்டான்.

''இந்தப் பஸ்சுக்குள் யாராவது ஒரு உயிராவது காயம் பட்ட அந்த மனிதனுக்காகத் துடிக்கக் கூடாதா!......

இந்தப் பஸ்சுக்குள் யாராவது ஒரு டாக்டர் இருந்து-இருக்கிறார் என்று அவன் நம்பினான் - அவர் எழுந்து சென்று கிழவனின் வேதனையைக் குறைக்கக் கூடாதா!...

எல்லோரும் தங்கள் தங்கள் பிரயாணத்தின் நோக் கக் குறித்துக் கவலைப் படுகிறார்களேயன்றிக் கொஞ்சமாவது மனிதாபிமானத்தைக் காட்டி,காயம் பட்டவன்மேல் இரக்கப் படுவதாயில்லையே!என்ன மனுஷர் இவங்கள்! ஏதோ கோவிலுக்குக் காவடி எடுத்துப் போறமாதிரியும், தங்கள் தெய்வீக யாத்திரைக்கு இடையூறு ஏற்பட்ட மாதிரியும், தங்களின் சுயநலத்தைத்தானே நியாயப்படுத்துகிறார்கள்!'' என்று அவன் மனதில் விரக்தியோடு எண்ணிக் கொண்டான்.

கிழவன் நிறையப் பயந்துவிட்டான் போலிருந்தது. வேதனையில் அடிக்கடி ''ஐயோ, நான் சாகப்போறன்!'' என்று புலம்பிக் கொண்டே வந்தான். கிழவனது கரத்தில் இருந்து இன்னும் இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. அந்தப் பஸ்சுக்குள் இருந்த மங்கிய வெளிச்சத்தில், காயம் பட்ட கை வெட்டிப்போட்ட ஆட்டின் கழுத்துப் போன்று சிவந்து போயிருந்தது.

பஸ் திடீரென்று குலுக்கலுடன் நின்றது.

டிரைவர், சீற்றிலிருந்து ஆவேசத்துடன் கையை ஓங்கியவாறு எழுந்து வந்தான். ''டேய், வடுவா! றாஸ்கல்: நீ குடிச்சுப்போட்டு ஏறினதும் இல்லாமல் சும்மா சத்தம் போட்டுக்கொண்டு வாறாய், என்ன!

இதென்ன, கிட்டடிக்குப் போற பஸ் என்றா ஏறினநீ? அபசகுனம் மாதிரி ஏறினதும் இல்லாமல்... சத்தம் போடாமல் இரு. துலைச்சுப் போடுவன் துலைச்சு.''

கிழவனை வெருட்டியவாறே மீண்டும் பஸ்ஸை ஸ்ராட் செய்தான் டிரைவர், கிழவன், வேதனை உணர்வுகள் இப்பொழுது முகத்தில் தெரிய மெதுவாக அனுங்கிக் கொண்டிருந்தான். குரல்விட்டு அழவும் முடியாது. அந்தச் சுதந்திர புருஷர்களிடையே கிழவன் அடிமைப்பட்டிருந்தான். கிழவனைப் பார்த்துக்கொண்டு நின்ற அவன் மெதுவாகப் பிரயாணிகளை விலக்கியவாறு கிழவனுக்கு அருகில் சென்று, தனது தோளில் இருந்த துவாயை எடுத்துக் காயம் பட்ட கரத்தைச் சுற்றிக் கட்டுப் போட்டான்! கிழவன் நனறியுணர்வோடு அவனை நிமிர்ந்து பார்த்தான்.

''மகளுக்குச் சுகமில்லை என்று தந்தி வந்தது, ராசா. அதுதான் அவசரத்தில் நிற்கேலாமல் வாசற் படியில் நின்றன். லைற் போஸ்ற் அடிச்சிட்டுது போல் இருக்குது.

நான் இனி என்ன செய்யப்போறன் ஐயோ! கிழவனின் உயிர் அணுக்கள் பிரலாபித்தன.

''பிற உயிர் துடிக்கையிலே யார் ஒருவன் நெஞ்சில் அவனுக்காகக் கண்ணீர் வடிக்கிறானோ, அவன் தான் உண்மையான மனிதன்'' என எங்கோ படித்த வாசகங்கள் அவன் நினைவுக்கு வர,... ''அப்படியானால் இந்த பஸ்சுக்குள் யாருமே மனுஷர் இல்லையா?...'' என நொந்தான்.

அப்படி நினைக்கையில் அவனுக்குச் சிரிப்பாகவும் இருந்தது.

இந்தப் படித்த கனவான்கள் — புதிய சமுதாயத்தை உருவாக்குபவர்கள் — எதிர்காலச் சமூகத்திற்கு வித்துக்

கொடுப்பவர்கள் — எவரிடமும் அந்த 'மனிதத்துவம்' இல்லையா!

வித்தியாசமான நாளைய சமுதாயத்திற்கு இவர்களின் இப்பொழுதைய உணர்வுகள் உரைகற்களா!

பஸ் டிரைவர் தூரத்தில் தெரிந்த சிவப்பு விளக்கை முந்த வேண்டும் என்று எண்ணியவன்போல் விரைவாகச் செலுத்தினான்,

திடீரென்று, மிதிபலகையில் நின்றவாறே பிரயாணம் செய்த கண்டக்டரை அழைக்க எண்ணியவனபோல், மிதி பலகை விளக்கை டிரைவர் இரண்டு மூன்று தரம் அணைத்து ஒளிச்சைகை காட்டினான்.

கண்டக்டர் பிரயாணிகளுக்கூடாக டிரைவரிடம் நீந்திச் சென்றான்.

''ஏன் கோபால், இதிலவாற பொலிஸ் ஸ்ரேசனில் சனியனை இறக்கிவிட்டு, என்றி போட்டுவிட்டுப் போவம். முன்னுக்குத்தானே ஆஸ்பத்திரியும் இருக்குது. பொலிஸ் காரர்களே ஆளை அனுப்பி மருந்து கட்டுவாங்க, அவன் சண்முகம் இங்கதான் இருக்கிறான். எங்கட ஆள்தானே. எல்லாம் ஷேப் பண்ணலாம். பஸ் ஓடுற 'மூடே' இதனால் எடுபட்டுப் போச்சு. சே...''

''ஓமோம். அப்படியே செய்தால் சரி அண்ணே.''

பொலிஸ் என்று மும்மொழிகளிலும் எழுதப்பட்ட போர்ட் பஸ்ஸின் வெளிச்சத்தில் எதிரே பிரகாசித்தது.

டிரைவர் பஸ்ஸை நிறுத்தினான்.

''ஏய் கிழவா, இறங்கு.'' கண்டக்டர் துரிதப்படுத்தியவாறே கிழவனையும் இழுத்துக்கொண்டு பொலிஸ் ஸ்ரேஷனுக்குள் நுழைவது பஸ் கண்ணாடிக்குள்ளால் பனிப் புகார் ஊடாகப் பார்ப்பதுபோல் தெரிகின்றது.

''எல்லாரும் இறங்குங்கோவன். இருந்து என்ன செய்யப் போறியள்? உது முடிஞ்சு வர இனி இரண்டு மணித்தியாலமாவது எடுக்காதா?'' கால் கடுக்க நிற்பவர்களை தற்

காலிகமாகவாவது இளைப்பாற விடுவோமே என்ற எண்ணமின்றி, ஆயினும் இருந்து மரத்துப்போன உணர்வுகளின் தாக்கத்தினால் மெதுவாக இறங்குகிறார்கள்.

ஒவ்வொரு நிமிடமும் இந்நிலைக்குக் காரணமான கிழவனைச் சபித்துக்கொண்டு ... நேரம் கடந்து சென்று கொண்டிருந்தது.

இரண்டு மணிநேரம்.

அஜாக்கிரதையான ஒரு மனித உயிரினால், அவசரப் படுவோருக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை போன்று நேரம் கடந்து கொண்டிருந்தது. அதில் நின்றவர்களின் வாயிலிருந்து புறப்பட்ட சாபங்களுக்கும், சலிப்புகளுக்கும் மட்டும் கரங்கள் இருந்தால் அவை அந்தக் கிழவனிடம் சென்று அவனை இழுத்து, நிர்வாணமாக்கி, அடி அடி என்று அடித்து, குதறி, கழுத்தை நெரித்து, கையை முறித்து...... ஓ! இவர்களின் இந்த வார்த்தைகளுக்கு அவ்வளவு வேகமும் குரூரமும் இருக்குமா?

அவன் அவ்விடத்தில் நிற்க முடியாமல், கிழவனைப் பார்ப்பதற்காக பொலிஸ் ஸ்ரேஷனை நோக்கி நடந்தான்.

ஜன்னலுக் கூடாக எல்லாம் தெரிந்தது.

பொலிஸ் அதிகாரியின் முன், கண்டக்டர் முகத்தில் கோபம் கொந்தளிக்க நிற்கிறான். கிழவன் அந்த அதிகாரியிடம் ஏதோ சொல்வது தெளிவில்லாமல் கேட்கிறது. கிழவன் என்ன சொல்கிறான் என்று அறிவதற்கு அவன் ஜன்னலருகே போய் நின்றான்.

'நான் பஸ்ஸில் ஏறவே இல்லை ஐயா. ஏற விடாமல் கண்டக்டர்தான் பிடிச்சுத் தள்ளினவர். அப்பதான் கீழே விழுந்தனான். லைற் போஸ்ரோடு அப்பத்தான் கை அடி பட்டது''

கிழவனின் வார்த்தைகளைக்கேட்டு அவன் ஒரு கணம் திகைத்துப்போய்விட்டான். கண்டக்டரில் பழியைப் போடுகிறானே கிழவன். தன்னில் பழியைப் போட்டு மிதி பலகைப் பிரயாணத்துக்காகத் தண்டித்துப் போடுவார்களே என்ற

அச்சத்தில், தப்ப வழிதேடுகிறான் கிழவன் என்று அவன் துக்கத்தோடு எண்ணிக்கொண்டான்.

அவனுக்கு இப்போது ஒன்று முன்பைவிடத் தெளிவாகத் தெரிந்தது

பஸ்சுக்குள் மட்டும், தவறை நியாயப்படுத்துபவர்கள் இருந்தார்கள் என்று இல்லை. இந்தக் கிழவனும், மனித குலத்தின் பிரதிநிதிதான். சுயநலம் ஒவ்வொரு மனிதனிலும் அடிப்படைக்குணமாய் உறங்கிக்கொண்டிருக்கின்றது. எல்லோருமே, தங்கள் தப்பையும், தவறையும் மறைத்து அதை நியாயப்படுத்துவதில் கெட்டிக்காரர்தான்!

நீண்ட நேரத்துக்குப் பின்னர் விசாரணைகள் முடிந்து கிழவனை ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டு பஸ் புறப்பட்ட பொழுது பழையபடி அந்தப் பரபரப்புடன், சரளமான உரையாடல்களும் சேர பஸ்சுக்குள் களைகட்டத் தொடங்கி விட்டது.

இன்னும் சிறிது நேரத்தில், பிரயாணிகளே நிற்கவும் இடமில்லாதிருக்கும் இந்த பஸ்சுக்குள், தயிர் முட்டிகளையும், கூடைகளையும், பிரயாணிகளின் சௌகரியத்தையும் கருதாது விபாபார நோக்கோடு ஏற்றப்போகும் கண்டக்டரையும் அதை நியாயப்படுத்த ''விலைவாசி ஏற்றத்தில், இந்தக் குறைஞ்ச சம்பளத்தில் நாங்க என்ன செய்யேலும்? இப்படி 'சைற்பிஸ்னஸ்' செய்யாமல்'' என்று சொல்லப் போகும் கண்டக்டரின் சாட்டையும் நினைத்துக்கொண்டான். ''கிழவன் நியாயப்படுத்திய தவறு, இதை விட அவ்வளவு பாதிப்பானதல்ல'' என்று தான் அவன் மனதிற் பட்டது இது குறித்து நாளை இளைஞர் மன்றத்தில் விவாதிக்க வேண்டுமென மனதில் மிகுந்த சுமையுடன் அதனை ஒதுக்கிவைத்தான்.

தவறுகளையும் நியாயப்படுத்தும் கெட்டிக்காரர்களைச் சுமந்து கொண்டு, இரவின் தாக்கத்தையும் பொருட்படுத்தாது தனது நீண்டதூரப் பயணத்தை பஸ் தொடர்ந்து கொண்டிருந்தது. அவன் கால்கடுக்க நின்றான்! □

சிரித்திரன், 1981.

# செங்கை ஆழியான்

கால் நூற்றாண்டுக்கு மேலாக ஈழத்தின் நவீன தமிழிலக்கியத் துறையில் தமது ஆளுமையின் சுவடுகளை ஆழமாகப் பதித்து நிற்கும் முதல் வரிசைப் படைப்பாளி செங்கை ஆழியான். புவியியற் கல்வியாளராகவும், நிர்வாகசேவை அலுவலராகவும் திகழும் கந்தையா குணராசா, M.A., S.L.A.S. அவர்களே இலக்கிய ஆர்வலர்களுக்குச் செங்கை ஆழியானாகக் காட்சி தருபவர்

இவர் அறுபதுகளில் படைப்புலகிற்கு வந்தவர்.

தொடக்கத்திலே சிறுகதையில் அடியெடுத்து வைத்துப் பின்னர் நாவலிற் பிரவேசித்தவர், செங்கை ஆழியான். நாளடைவில் நாவலே இவரது வெளிப்பாடாயிற்று. இவரது முழுநாவல்களும் குறுநாவல்களுமாக இருபதுக்கு மேற்பட்ட ஆக்கங்கள இற்றைவரை நூலுருப் பெற்றுள்ளன. இவை ஒவ்வொன்றும் பெரும்பாலும் ஈழத்துத் தமிழரின் சமூக, பண்பாட்டுக் கூறுகளில் ஒவ்வொன்றையே முதன்மைப்படுத்திய கதையம்சத்துடன் அமைகின்றன.

செங்கை ஆழியான் தமக்கெனத் தனியானதொரு வாசகர் வட்டத்தை உருவாக்கிக் கொண்ட சாதனையாளருமாவர்.

—கலாநிதி நா. சுப்பிரமணியன்.
(மல்லிகை - 213)

வானம் வஞ்சித்த மக்களின் அவலம்; அந்த அவலத்தினிடையே தவித்த முயல் அடிக்கும் கழுகுகள்; அந்தக் கழுகுகளுக்குத் துணைபோகும் கோழைகள் ... இந்தக் களத்திலே தனது கோரப்பற்களைக் காட்டி நிற்கும் சமூக அநீதியொன்றின் கெக்கலிப்பு எழுகிறது. அரச நிருவாகத்தில் ஆங்காங்கே காணக்கூடிய, சட்டத்துள் நின்று சதிபுரியும் கும்பல் ஒன்றினை இங்கே கதாசிரியர் நமக்கு இனங்காட்டுகிறார். ...... வன்னிப் பிரதேச விவசாயக் குடிகளது வேதனைகளைச் சித்திரிக்கும், ஆசிரியரது மற்றொரு செழுமையான படைப்பு.

# உப்பங்கழி

சோளகக் காற்று அளவாக வீசியது. ஆலங்குளத்திற்கும் விளாத்தித் தீவிற்கும் இடை பரந்து கிடந்த உப்பாற்றைக் கடப்பதற்குள் மாரிமுத்தர் துடித்துப் போய்விட்டார். உப்பாறு வறண்டு வெடித்துப் புழுதியாகக் கொதித்தது.

விளாத்தித்தீவுக் கிராமத்திற்கு இம்முறை பருவ மழை பொய்த்துவிட்டது. வாடையின் பெயர்வுடன் சோனாவாரியாக மழை பொழிந்துதள்ளிவிடும். இம்முறை வான நீரின் ஒரு துளிகூட மண்ணில் இறங்கவில்லை. குளங்கள் வறண்டு விட்டன. கிணறுகள் வற்றிவிட்டன. வயல் விளையாததால் அக்கிராமத்தின் இருபத்தாறு குடும்பங்களின் வயிறுகளும் கொதிக்கத் தொடங்கியிருந்தன!

அதன் விளைவுதான் மாரிமுத்தரின் ஆலங்குளப் பயணம் ஆயிற்று. விதானையார் சிவப்பிரகாசரிடம் 'பெட்டிசம் கொடுத்தாகிவிட்டது. நிவாரணம்கோரி அவரிடம் கிராமத் தவர்கள் சமர்ப்பித்த விண்ணப்பத்தை விதானையார் உதவி அரசாங்க அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவந்து விரைவில் உதவி வழங்குவதாக உறுதியளித்துவிட்டார்.

இன்னமும் பதினைந்து நாட்களுக்குள் சிரமதான வேலைகள் தொடங்கப்படும். சிரமதானம் செய்வதற்கு அக்கிராமத்தில் என்ன இருக்கிறது? குளக்கட்டுகளில் வளர்ந்து கிடக்கும் முட்பற்றைகளைக் கொத்திப் புரட்ட லாம். அழிந்துகிடக்கும் வாய்க்கால்களை மண் வெட்டிக் கொட்டி நிரவலாம். மண்வெட்டியை நிலத்திலே பதித்தால் மண்வெட்டி தெறிக்கும் அளவிற்கு மண் வறண்டு கெட்டித் திருக்கிறது. ஏதோ பெயருக்குச் சிரமதானம் செய்தேயாக வேண்டும். அப்படிச் செய்தால்தான் அமெரிக்கன் கோதுமை மாவும், மைசூர்ப் பருப்பும், மாசிக்கருவாடும் கிடைக்கும்.

கொதித்த வயிறுகள் சிறிதளவாவது குளிரும்.

மாரிமுத்தர் கிராமத்தின் எல்லையில் ஏறினார். சடைத்து வளர்ந்திருந்த ஆலமர நிழல் அவருக்கு இதமாக விருந்தது, ஆடுமேய்க்கும் சுப்புறு ஆலமர நிழலில் அமர்ந்திருந்தான் அவன் வெட்டிப் போட்ட ஆலங்கொம் பர்களை ஆடுகள் ஒருபுறத்தில் மேய்ந்துகொண்டிருந்தன.

''அப்பு, உப்பங்கழி விளைஞ்சிட்டுது ......'' என்றான் சுப்புறு.

மாரிமுத்தர் மகிழ்வுடன் அவனைப் பார்த்தார். அவன் தொடர்ந்தான்: ''சரியா உப்பு விளைஞ்சிருக்குது. இரண்டு விரல் தண்ணி வற்றினால் சரி; முழுவதும் உப்பாகிவிடும் அப்பு ......''

சுப்புறு தன் மடியில் கட்டி வைத்திருந்த சரை ஒன்றை எடுத்துக் காட்டினான். மாப்போல உதிர்ந்த உப்பு அதிலிருந்தது. கிழவர் அதனை வாங்கிப் பார்த்தார்,

''இன்னும் ஒரு பதினைந்து நாள் போக வேணும், பளிங்காகவில்லை: ஐஞ்சு வரிபத்திற்குப் பிறகு இம்முறை தான் உப்பங்கழி விளைஞ்சிருக்குதடா ... சரியான வறட்சி இம்முறை கண்டியோ! அதுதான் வயல் விளையாவிட்டாலும் இம்முறை உப்புக்கழி விளைஞ்சிருக்குது, ஏதோ, கிராமத்துச் சனங்களுக்குக் கொஞ்சம் வருவாய் வரும்.''

விளாத்தித்தீவிற்குத் தெற்கே ஒரு மைல் தூரத்தில் கடல் நீர் உள்நுழைந்து கடல்நீரேரியாக நீர் தேங்கிக் கிடக்கிறது, வறட்சி நீடிக்கிற வேளைகளில் எப்போதாவது இந்த உப்பங்கழியில் உப்பு விளைந்துவிடும்.

''ஒரு ஐஞ்சு லொறிவரையில் அள்ளலாம், அப்பு''.

''அப்ப நல்லாத்தான் இருக்குது. ஒரு றாத்தல் உப்பு இருபத்தைந்து சதம், நாங்கள் கடைசி இருபது, சீச்சி பதினைந்து சதப்படி கரையூர் மீனவருக்கு விற்றாலும், பரவாயில்லை, நூறு இருநூறு தேறும்.''

மாரிமுத்தருக்கு வெய்யிலில் வந்த களைப்பு சுப்புறு கூறிய செய்தியால் நீங்கிவிட்டது. கிராமத்திற்கு இந்த நல்ல செய்தியை அறிவித்துவிடவேண்டும்.

தூரத்திலே குடங்களில் தண்ணீரைச் சுமந்தபடி கிராமத்துப் பெண்கள் வருவது தெரிந்தது. இந்தக் காங்கை வெய்யிலில் அவர்கள் ஒவ்வொரு நாளும் இரண்டு மைலிற்கு மேல் நல்ல தண்ணீருக்காக நடக்க வேண்டியிருக்கிறது.

மாரிமுத்தர் வீட்டை அடைந்தபோது அவருக்காகப் பலர் காத்திருந்தார்கள்.

''அம்மான், மழையில்லாமல் இன்னமும் எவ்வளவு காலம்தான் சீரழிபிறது, ஆடு மாடெல்லாம் தண்ணியில் லாமல் சாகத் தொடங்கிவிட்டுதுகள், உதுக்கு ஏதாவது வழி செய்யவேணும்'' என்றான் மாணிக்கம்.

''மழைக்கு வேண்டி இன்றைக்குக் கொடும்பாவி இழுக்கவேண்டியதுதான்'' என்றார் கணபதிப்பிள்ளை.

''வேண்டாம்'' என்று துடித்துப்போய் மாரிமுத்தர் தலையிட்டார். அவரை எல்லாரும் வியப்புடன் பார்த்த னர்; இன்னமும் பதினைந்து நாளைக்கு மழை பெய்யக் கூடாது. உப்பங்கழி விளைஞ்சிருக்குது ......''

எல்லார் முகத்திலும் மகிழ்ச்சிக்குரிய குறிகள் படர்ந் தன.

கிராம முன்னேற்றச் சங்கத்தின் சிரமதானக் கூட்டம் நடந்தது. மாணிக்கம் தலைமை வகித்தான். அக்கிராமத் தில் அவன் ஒருவனுக்குத்தான் எழுதப் படிக்கத் தெரிந்திருந் தது. கூட்டத்திற்கு விதானையார் சிவப்பிரகாசர், ரி. ஏ., காணி ஒவசியர் ஆகியோரும் வந்திருந்தனர். உதவி அர சாங்க அதிபர் வருவதாக இருந்தது. கடைசி நேரத்தில், அவர் வரவில்லை.

மாணிக்கம் சிரமதானம் செய்யக்கூடியவர்களின் பெயர்ப் பட்டியலைச் சமர்ப்பித்தான். விதானையார் பெயர்ப் பட்டியலைப் பார்த்தார். அவர் முகம் சுருங்கியது. அவர் முகச் சுருக்கம் மாரிமுத்தருக்குக் கவலையைக் கொடுத்தது.

''சின்னப்பிள்ளையளின் பெயர்களும் இருக்குது என்றே பார்க்கிறியள் விதானையார். எங்கட பிள்ளையள் பெரி யாக்களிலும் பார்க்க நல்லா வேலை செய்வினம்'' என்றார் மாரிமுத்தர்.

''அதுக்கில்லை ... மாரிமுத்து, சரி ... சரி ... செய் யுங்கோ, சின்னப்பிள்ளைகளுக்கு சிரமதானச் சாமான்கள் கொடுக்கேக்க அரைவாசிதான் தருவினம்''.

மாணிக்கத்திற்கு ஏனோ அவர் அப்படிக் கூறியது திருப்திதரவில்லை.

''புளியங்குளத்தின் அணையை மூன்றடி உயர்த்த வேண்டும். உயர்த்தினால் இன்னமும் முப்பது ஏக்கர் நிலத்தை நீர்ப்பாசனத்திற்குள் கொண்டுவரலாம் என ரீ. ஏ. அபிப்பிராயப்படுகிறார். அதனால் நாங்கள் இம்முறை சிரமதானத்திற்கு அந்தக் குளத்தின் அணைக்கட்டு வேலையைச் செய்வோம்'' என்றார் விதானையார்.

மாணிக்கம் வேகமாகக் குறுக்கிட்டான். தண்ணியேயில்லை ... குளத்தை உயர்த்தி என்ன பயன்? அதிலும் பார்க்க மான்நின்ற குளத்தின் அணை முறிப்பை நிரவுகிறது நல்லது விதானையார், இன்னொரு குளத்திலும் தண்ணி நின்றால் ஆடு மாடுகளுக்கு நல்லது. இப்ப வீணாக இந்தக் குளத்தின் முறிப்பு ஊடாக வெள்ளம் தேங்காமல் போகுது.''

''உனக்குக் கனக்கத் தெரியும் போலக் கதையாதை ... ரீ. ஏ. சொல்லேக்க பேந்து ஏன் பேச்சு!'' என்றார் விதானையார் எரிச்சலுடன்.

''புளியங்குளத்தின் அணையை உயர்த்துவதற்கு அரசாங்கம் காசு பாஸ்பண்ணியிருக்குது என்று போன முறைப் பயிர்ச் செய்கைக் கூட்டத்தில் சொன்னவை; பிறகேன் நாங்கள் அதைச் செய்வான்?'' என்றான் மாணிக்கம். மாரிமுத்தரும் தலையை ஆட்டி ஆமோதித்தார்.

''அரசாங்கம் எல்லாத்தையும் செய்ய வேண்டும் என்று நாங்கள் காத்திருக்கக் கூடாது. அப்படிப்பட்ட மனப்பான்மையில் இருப்பதால்தான் நாங்கள் இப்படிக் கீழ் நிலையில் இருக்கின்றோம்'' என்றார் ரீ. ஏ.

வார்த்தைகள் மிக இனிமையாக இருந்தன.

''ஐயா சொல்கிறது சரி ... புளியங்குளத்தையே செய்வம்'' என்றார் கணபதிப்பிள்ளை.

உத்தியோகத்தர்கள் கோழிக் கறியுடன் சாப்பிட்டு விட்டுப் போனதன்பின்னர் மாணிக்கம் மாரிமுத்தரிடம் எரிந்து விழுந்தான். ''நீங்கள் எல்லாரும் ஒப்புக்கொண் டிருக்கக் கூடாது''

''எதைச்செய்தால் என்னடா மாணிக்கம்? எங்களுக்கு மாவும், பருப்பும் சாப்பிடத்தேவை.''

'அப்படி எண்ணக்கூடாது. செய்யிற சிரமதானத்தைக் கிராமத்துக்கு நன்மை தரத்தக்கதாகச் செய்ய வேணும். இப்ப நாங்கள் அவன்களுக்கு வசதி செய்து கொடுத் திட்டம்.''

''எப்படி? ......''

''அரசாங்கம் செலவழிக்கச் செய்ய காசு பாஸ் பண் ணியிருக்கிற குளத்தை நாங்கள் சிரமதானத்தில் செய்து விட, ரீ. ஏ. ஆக்கள் கொன்றாக்கில் செய்ததாகச் சொல்லி வவுச்சர் போட்டுக் காசு எடுத்துக் கொள்வான்கள்'' என் றான் மாணிக்கம்.

''அப்படியிருக்காதடா ... பொடி'' என்றார் மாரி முத்தர்.

பத்து நாட்கள் கடும் வெய்யிலில் அக்கிராமத்தவர்கள் சிரமதானம் செய்தார்கள். புளியங் குளத்தின் அணைக்கட்டு இரண்டு அடிகள் உயர்ந்தது. இன்று அவர்களுக்கு சிரமதா னப் பொருட்கள் வரவிருக்கின்றன. விதானையாரும் ஓவி சியரும் பட்டினத்திலிருந்து லொறியில் நிவாரணப் பொருட் களைக் கொண்டுவருவார்கள்.

இன்றாவது வயிறார உண்ணலாம் என்று அவர்கள் காத்திருந்தார்கள்.

மாலை மயங்கிய வேளையில் மா மூடைகளுடனும், பருப்பு மூடைகளுடனும் லொறி வந்து சேர்ந்தது. கருவாட் டுச் சிப்பம் ஒன்றும் காணப்பட்டது.

விதானையார் ஒழுங்காகப் பெயர் வாசித்தார். பெயருக்குரியவர்கள் சென்று பெருவிரல் அடையாளத்தை வைத்து, விதானையார் கொண்டுவந்த பையன் நிறுத்துக் கொடுத்த பொருட்களை வாங்கிக் கொண்டார்கள்.

கொடுத்ததை வாங்கிக் கொண்டார்கள்.

மாணிக்கத்தின் முறை வந்தது. அவன் கையொப்பம் வைக்கும் போது தனக்குரிய அளவைக் கவனித்தான். மா 40 இறாத்தல், பருப்பு 2 இறாத்தல், கருவாடு 1 இறாத்தல்.

பையன் நிறுத்துக் கொடுத்தது: மா. 35 இறா. கருவாடு அரை இறாத்தல், பருப்பு 1 இறாத்தல்.

மாணிக்கம் கோபத்துடன் விதானையாரைப் பார்த்தான்.

'இதென்ன விதானையார் ... 40 இறாத்தல் மாவிற்கு 35 இறாத்தல் தாறியள் ......'

விதானையார் எரிச்சலுடன் அவனைப் பார்த்தார். ''அது அப்படித்தான், எல்லாரும் வாங்கிக் கொண்டு போறாங்கள், நீ மட்டும் பேச வந்திட்டாய்? இஞ்ச பார் மாரிமுத்தர், அவன்கள் எங்களுக்கு மூடையாக, நிறுக்காமல் ஏற்றிவிடுகிறான்கள். குறையத்தானே செய்யும்: உங்களுக்குக் கொஞ்சம் குறைச்சுத் தந்தால்தான் சோட்டேஜ்சைச் சரிக்கட்டலாம்.''

மாரி முத்தருக்கு விதானையார் தன்னிடம் முறைப்பட்டது பெருமையாக இருந்தது.

''டேய் ... மாணிக்கம் விதானையார் சொல்கிறது சரிதானே? வாங்கிக்கொண்டு போ ......''

மாணிக்கம் எரிச்சலுடனும் கோபத்துடனும் நகர்ந்தான்.

சுப்புறுவின் முறை வந்தது. பெருவிரல் அடையாளத்தைப் பதிக்குமுன் அவன் மாணிக்கத்தை அழைத்தான்: 'அண்ணை எனக்கு எவ்வளவு போட்டிருக்குது என்று சொல் அண்ணை.''

விதானையார் கோபத்துடன் குறுக்கிட்டார்.

''உங்களுக்கு இப்ப கொழுப்புக் கூடிப்போக்சுது. பாவங்களெண்டு நான் சிரமதானம் போட்டுத்தர, நீங்கள் றூல் பேசிறியள். உனக்கு லிஸ்ரில 40 இறாத்தல் மாத்தான் போட்டிருக்கும். ஆனால், நீ சின்னப் பிள்ளை; பதினெட்டு வயதாகவில்லை. அதனால் அரைவாசிதான் தருவம் முதலிலேயே சொன்னனான் எல்லோ? பேசாமல் வாங்கிக் கொண்டு போ ...''

சுப்புறு விதானையாரை ஆழமாகப் பார்த்தான்.

''அப்படியெண்டால் எனக்குத் தேவையில்லை, அதில் இருக்கிற அளவு தரவேணும்.''

''டேய் ... சுப்புறு. விதானையார் முன்னமே சொன்னவரெல்லே?'' என்று கூறியபடி மாரிமுத்தர் முன்னே வந்தார்.

''பாரும், மாரிமுத்தர், நீ கேட்கிறாய் என்று சிரமதானம் போட்டுத் தந்தன். எத்தனை பேரைப் பிடிச்சுப் போட்டுத் தந்தன். ஏதோ சனம் பசி பட்டினியில தவிக்குதுகள் என்று மாத் தந்தால் ... வேண்டாம் என்றால், நான் மாவும் ஒன்றும் தராமல் போயிடுவன், மணியம் லொறியை எடு'' என்று விதானையார் இரைந்தார்.

''வாங்கிக் கொள்ளடா சுப்புறு. சும்மா வாறதை வாங்கிக் கொள்ளு ...''

''எனக்கு வேண்டாம் அப்பு. நான் வேலை செய்திட்டுத்தான் கேக்கிறன். வெயிலுக்க நின்று மண் கொத்திச்

சுமந்து போட்டிட்டுத்தான் கேக்கிறன்'' என்று சுப்புறு மீண்டும் திடமாகச் சொன்னான்.

''அப்ப, உனக்கு வேண்டாம்'' என்று விதானையார் கோபத்துடன் கேட்டார்.

''வேண்டாம் ......''

''சரி ... மற்றாள் வா ......''

சுப்புறு கோபத்துடன் அவ்விடம் விட்டு நகர்ந்தான்.

''சுப்புறுவுக்கு வேண்டாம் என்றால் அவனுடைய மாவை அவன்ர தாயிடம் கொடுங்கோ விதானையார். இந்தக்காலத்துப் பிள்ளைகளுக்குப் பெரியாக்களிட்டம் எப்பிடிப் பழகிறதென்றே தெரியாது. மாணிக்கமே வாங்கிக் கொண்டு போறான்; நேற்று இரண்டிலைவிட்ட சுப்புறு வேண்டாமாம், அவனுக்குப் பெரியவை என்று ஒரு மட்டு மரியாதை இல்லாமல்போயிட்டுது. நீங்க இதையெல்லாம் மனதில வைச்சுக்கொள்ள வேண்டாம் விதானையார்.''

எல்லாருக்கும் நிவாரணப் பொருட்களை விநியோகித்து முடித்தார். விநியோகம் முடிந்த பின்னர், லொறிக்குள் ஏழு மூடை கோதுமை மா மிகுந்திருந்தது. பருப்பும் இருந்தது. கருவாடும் இருந்தது.

மாணிக்கம் யோசனையில் ஆழ்ந்தான்.

லொறியின் முன் சீற்றில் விதானையார் ஏறிக்கொண்டார்.

''அப்ப நீங்கள் நாளையிலிருந்து தொடர்ந்து வேலை செய்யுங்கோ. இன்னும் ஒரு ஐந்து நாள்ளைக்குச் செய்யுங்கோ ......'' என்றார் மாரிமுத்துவைப் பார்த்தபடி.

''ஒரு ஐந்து நாளைக்கு வேலை செய்ய வேண்டாம் விதானையார்'' என்றார் மாரிமுத்தர்.

விதானையார் திகைத்துப் போய் மாரிமுத்தரைப் பார்த்தார்.

''ஏன்? இன்றைக்கு வாங்கியதைச் சாப்பிட்டு முடிக்கு மட்டும் வேலைக்கு வரமாட்டியளோ?''

மாரிமுத்தர் அடக்கமாகச் சிரித்தார். ''அப்படியில்லை விதானையார், உப்பங்கழி விளைஞ்சிருக்குது. நாளையிலி ருந்து அள்ளப் போறம். நல்ல விளைச்சல், ஒவ்வொரு உப் பும் கற்கண்டு மாதிரி விளைச்சிருக்குது'.

லொறியிலிருந்து விதானையார் இறங்கினார். அவர் முகத்தில் பரவிய பாவத்தை மாலை இருளில் பார்க்கமுடி யவில்லை.

''உப்பங்கழி விளைச்சிருக்குதோ....?''

''ஓமோம்...''

''என்ன மாரிமுத்து, குழந்தைப்பிள்ளையாட்டம் சட்டம் தெரியாமல் கதைக்கிறீர்! இயற்கையாக பூமியில் விளைஞ் சதெல்லாம் அரசிற்குச் சொந்தம். உப்பங்கழியில விளைஞ்ச உப்பு அரசாங்கத்துக்கு உரியது கண்டியோ! அவ்வளவு உப்பையும் சேகரித்து விற்று பணத்தை ரெலின்யூவில நான் கட்டவேண்டும். சரி, சரி நாளைக்கு எல்லோரும் உப்பங் கழிக்கு வாருங்கோ, வவுச்சர் போட்டுக் கூலி தாறன். எல்லோரும் உப்புச் சேகரித்துக் குவியுங்கோ. லொறியுடன் வாறன்.''

மாரிமுத்தர் அப்படியே சிலையாக நின்றுவிட்டார்!

''அதெப்படி, ஐஞ்சாம் வரியம் நாங்கதான் அள்ளி எடுத்த னாங்க' என்றபடி மாணிக்கம் முன்னே வந்தான்.

''சட்டம், சட்டம்தான். விசர்க்கதை வேண்டாம். ஆராவது சட்டத்தை மீறி உப்பு அள்ளினியள் என்றால்

பொலிசில பிடிச்சுக் கொடுத்திடுவன், ஓ... சொல்லிப்போட்டன்.''

பொலிஸ் என்ற வார்த்தை அக்கிராமத்தவர்களுக்குப் பீதியைத் தந்தது.

உப்பங்கழி உப்பைக் கடகங்களிலே சேகரித்து அள்ளி லொறியில் கொட்டும்போது, அக்கிராமத்தவர்களுக்கு வயிறு பற்றி எரிந்தது! அவர்கள் கட்டிய கனவுகள் சிதைந்து கரைந்து விட்டன! இரண்டு தரம் லொறி நகரத்திற்குப் போய்விட்டு வந்துவிட்டது.

விதானையார் மிகவும் குஷியாகக் காணப்பட்டார். கையில் இருந்த பைக்குள் கிடந்த இரண்டு சாராயப் போத்தல்கள் உடைக்கப்பட்டு இடையிடையே சிலருக்கு வார்க்கப்பட்டது. மாரிமுத்தர், கணபதிப்பிள்ளை எல்லாரும் சாராயத்தில் மிதந்தனர்.

லொறியில் உப்புக் கொட்டப்படுவதை சுப்புறு ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டிருந்தான். மாணிக்கம் ஏமாற்றத்துடன் உப்பைக் கடகத்தில் சுமந்து வந்தான்.

சுப்புறுவின் அருகில் மணியம் வந்தான். அவன்தான் லொறி டிறைவர்.

''நீயும் போய் வேலை செய்யன். விதானையார் இண்டைக்கு நல்ல கூலி தருவார்.''

''எனக்கு வேலை செய்ய விருப்பமில்லை'' என்றான் சுப்புறு.

''நீ தானே அண்டைக்கு மா வேண்டாம் என்ற பெடியன்? விசர்ப் பொடி, இண்டைக்கு விதானையார் ஒவ்வொருவருக்கும் இருபத்தைஞ்சு ரூபா கூலி தரப்போறாராம், சொன்னவர்.''

''இருபத்தைஞ்சோ!...''

''ஓம்...அவருக்கென்ன...ஐயாயிரம் மட்டில் தேறும்; தந்தால் என்ன?''

''அவருக்கே உப்பு''

''பின்னர் யாருக்கு?!''

சுப்புறு ஆத்திரத்துடன் எழுந்து நின்றான். அடிவானத்தில் கருமேகத்திரள் ஒன்று மிதந்தது; சுப்புறு மாணிக்கத்திடம் ஓடிச் சென்றான்.

உப்பங்கழியில் உப்பு அள்ளிக்கொண்டிருந்தவர்களிடையே செய்தி பரவிவிட்டது. எல்லாரும் விதானையாரைப் பார்த்தார்கள். வஞ்சிக்கப்பட்ட பார்வை;

''மழை வரும் போல இருக்குது''என்றார் அடிவானத்தைப் பார்த்தபடி மாரிமுத்தர், வெறியில்.

''ஓமோம்...மாரிமுத்து ...இனி நீங்கள் உப்பை அள்ளுங்கோ... நான் இவ்வளவையும் கணக்குக் காட்டுறன். மிச்சத்தை எல்லோரும் சண்டை போடாமல் அள்ளுங்கோ.''

''மெய்யாகவே விதானையார்!''

விதானையார் லொறியில் ஏறிக்கொண்டார்.

மணியம் லொறியை எடுத்தான். அப்போது லொறியின் பின்பக்கத்தில் படார் என்று சத்தம் கேட்டது. லொறியை ஸ்ராட் பண்ணிய மணியம், சீற்றில் இருந்தபடி திரும்பிப் பார்த்தான்.

லொறியின் பின்பக்கத் தகர மட்காட்டில் சுப்புறு பெரியதொரு கல்லால் ஓங்கிக் குத்துவது தெரிந்தது.

''கல்லால குத்துறான்....''என்றபடி மணியம் இறங்க முயன்றான்.

''இறங்காதை...கவனியாததுபோல லொறியை எடு மணியம்...''என்றார் விதானையார்.

உப்பங்கழியில் கிராம மக்கள் உப்பு அள்ளுகிறார்கள். அடிவானத்தில் மழைக்குறி.

''மழையில எல்லாம் போகப் போகுது. கெதியா அள்ளுங்கோ'' என்று மாரிமுத்தர் இரைந்தார்.

அவர் சொல்லி வாய் மூடுவதற்கு இடையில் முதல் மழைத்துளி அவர்மீது விழுந்தது. □

மல்லிகை, 1981.

# வ. அ. இராசரத்தினம்

தமிழ்ப் புத்திலக்கியத் துறையில் சிறுகதைப் படைப்பாளியாகவும், நாவலாசிரியராகவும், நாடக எழுத்தாளராகவும், இலக்கிய மொழிபெயர்ப்பாளராகவும், பதிப்பாசிரியராகவும் பன்முகங்கொண்டு விளங்குபவர், இராசரத்தினம் அவர்கள். இதுவரை 200க்கு மேற்பட்ட சிறுகதைகளை இவர் புனைந்துள்ளார். ஏறக்குறைய 100 வானொலி நாடகங்கள் இவர் எழுதி, ஒலிபரப்பாகியுள்ளன.

பாலை, தேய்பிறை, ஓரோவியம் நிறைவு பெறுகிறது என்னும் மூன்றும் இவருடைய குறுநாவல்கள். இராசரத்தினத்தின் முதலாவது (1954) நெடுநாவல் கொழுகொம்பு. சரித்திரநாவல் கிரௌஞ் சவதம் வீரகேசரிப் பிரசுரமாக (1975) வெளியாயிற்று. தாம் மொழிபெயர்த்த கவிதைகளை 'பூவரசம்பூ' என்னும் பெயரில் வெளியிட்ட இவர், வேறு சில நூல்களின் பதிப்பாசிரியருமாவர்.

மாப்பசான், அன்ரன் செக்காவ், கார்க்கி முதலிய புகழ் வாய்ந்த எழுத்தாளர்களது சிறுகதைகள் சிலவற்றை இராசரத்தினம் தமிழிற் பெயர்த்திருக்கிறார்.

பழந்தமிழ் இலக்கியத்தில் இவருக்குள்ள ஆழமான பயிற்சி, இவருடைய புதிய இலக்கியப் படைப்புகளின் செழுமைக்கு வளஞ் செய்கிறது.

ஆண்டாண்டுகளாக இந்த நாட்டை அரித்துக் கொண்டிருக்கும் இனவாதம் என்னும் நோயின் குணங் குறிகளையும், அந்நோயினால் ஏற்படக் கூடிய விளை வினையும் வகைமாதிரியாகச் சுட்டிக் காட்டுகின்ற, ஒரு யதார்த்தப் படைப்பு. கதையின் கருத்து வளர்ச்சியின் நிதானமும், அது நிறைவுபெறும் பாங்கும் மனங்கவர் கின்றன. ஆசிரியரது அனுபவம்மிக்க கைவண்ணம் கதை முழுவதும் மிளிர்கிறது. ......“பந்தியிலிருந்து எழும்பு” என்பவர்களிடம் நாம் ஏன் ‘கல்லை பொத் தல்’ என்று சொல்லிக் கொண்டிருக்கவேண்டும்? சிந்தனையைத் தூண்டும் கேள்வி.

# 1+1=1; 1—1=2

பழக்கப்படாத புதிய இடம். மார்கழி மாதத்து வாடைக் குளிர். நுளம்புக்கடி. எல்லாமாகச் சேர்ந்து எனக்கு விழிப்பு வந்துவிட்டது.

ஆனாலும் எழுந்திருந்து படிக்கவோ எழுதவோ முடி யாத சூழ்நிலை, எனக்குப் பக்கத்து மேசைகளில் என் உதவியாளர்கள் துயில்கின்றனர். எதிர்த்த மேசையிலே பொலிஸ்காரரர் துயின்றுகொண்டிருக்கிறார். அகாலத்தில் எழுந்து விளக்கை ஏற்றி அவர்கள் துயிலைக் கலைக்க நான் விரும்பவில்லை, விழித்துக் கொண்டே படுத்தபடியிருக்கை யில் என் மனம் எங்கேயோ வெல்லாம் ஓடுகின்றது,

இப்படியான விடியற்காலை அறிதுயில் வேளைகளில் என் மனம் எழுதாக் கிழவியாய் எத்தனையோ கதைகளைச் சிருட்டித்திருக்கிறது. கவிதைகளை இசைத்திருக்கிறது. அவைகள் எல்லாமே உருவம் பெற்றிருப்பின், ஈழத்துப் பிர சுரக் களங்கள் அத்தனையுமே என் சிருட்டிகளைத் தாங்கிக் கொள்வதற்குப் போதுமானதாக இருக்கும் என்று நான் நம்பவில்லை.

இன்று இந்த அறிதுயில் நிலையில் என் மனம் கதை எழு திக்கொண்டிருக்கிறது. கதாபாத்திரங்களையும் கதைக் கரு வையும் தேடி எங்கும் அலையவேண்டிய அவசியம் எனக்கு ஏற்படவில்லை. கடந்த மூன்று நாட்களாகப் புதிய இடத் தில் நான் பெற்ற அனுபவங்களே கதையாக என்னுள் விரி கின்றன.

ஆமாம். க. பொ. த. பரீட்சை நிலையத்தின் இணைப் பதிகாரியாக மூன்று நாட்களின் முன்னர் வந்தேன். எனக்கு உதவியாக இரண்டு ஆசிரியர்கள்: எம் மூவரையும், நாம் காவல் பண்ணும் வினாப்பத்திரங்களையும் — ஏன் விடைப் பத்திரங்களையும் பாதுகாக்க ஒரு பொலிஸ்காரர். எங்கள் நால்வரைச் சுற்றியும் — அப்படியல்ல: நானொழிந்த மற்ற மூவரையும் சுற்றிச் சுருள்விரியும் அந்தக்கதை......

இந்த இணைப்பதிகாரி உத்தியோகமே சோம்பேறித்தன மான வேலை. காலையில் பரீட்சை தொடங்கமுன்னர், சுமார் எட்டு மணியளவில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் அன்றைக்கான வினாப்பத்திரங்களைக் கொடுக்கவேண்டும், சாயந்திரம் பரீட்சை முடிவடைந்ததும் மேற்பார்வையா ளர்களிடமிருந்து விடைப்பத்திரங்களை வாங்கிக்கொண்டு பற்றுச்சீட்டுக் கொடுக்கவேண்டும். பின்னர், குறிப்பிடப் படாத நேரத்தில் வரும் மேலதிகாரி ஒருவரிடம் விடைப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கவேண்டும். மொத்தமாக அரை மணித்தியால வேலைகூட இருக்காது ஒருநாளில். மற்றைய பொழுதையெல்லாம் தடுப்புக் காவற் கைதிபோலச் சோம் பேறித்தனமாகக் கழிக்கவேண்டும். அந்தச் சோம்பேறித் தனம் இன்றைக்கு அதிகாலையிலேயே தொடங்கிவிட்டது!

நான் பாதுகாப்பாகக் கொண்டு வந்திருந்த புத்தகங்களை எடுத்து வாசிக்கவும் முடியாதநிலை, மற்றவர்களின் துயிலைக்கலைத்து விளக்கை ஏற்ற என் மனம் ஒருப்படவில்லை. ஆகவே, தான் படுத்த படுக்கையிற் கிடக்கின்றேன். ஆனால் மனதிற்குத்தான் சும்மா இருக்கின்ற திறமில்லையே!

வாசகர்களுக்கு என் கதாபாத்திரங்கள் மூவரையும் பற்றி இவ்விடத்திற் சொல்லத்தான் வேண்டும்.

எனது உதவியாளர்களான ஆசிரியர்கள் இருவரும் 1956க்குப் பிந்திய பண்டாரநாயக்கா யுகத்தில் தங்கள் கல்வியை ஆரம்பித்து, எமது கிராமத்துப் பாடசாலைகளில் க. பொ. த. சித்தியடைந்து ஆசிரிய நியமனம் பெற்று— அவர்கள் ஆசிரிய நியமனம் பெற்றதே சுவாரஸ்யமான கதையாக அமையலாம் — எழுபதுகளுக்குப்பின்னால் ஆசிரியப் பயிற்சியை முடித்துக்கொண்டவர்கள். இந்தக் கால கட்டங்களைச் சரித்திர ஆசிரியன் போலக் குறிப்பிடுவதற்குக் காரணம் உண்டு. அந்த இருவருக்கும் ஆங்கிலமோ, சிங்களமோ தெரியாது. ஆமாம். ஐம்பத்தாறாம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் வந்தபின்னர் அவர்கள் படித்த பாடசாலைகளிலிருந்த சிங்கள ஆசிரியர்கள் போய்விட்டார்கள். ஆசிரியராக இல்லாமல், கிளாக்கராக ஆகியிருந்தால் அவ்விருவரும் உத்தியோகத்தைக் காப்பாற்றிக்கொள்ளச் சிங்களத்தைப் படித்திருக்கலாம்.

ஆமாம்; ஐம்பத்தாறாம் ஆண்டுச் சம்பவங்கள் ஆங்கிலந்தெரிந்த சிங்களவரையும் தமிழரையும் தத்தமது தாய் மொழியிலேயே எழுதவும் பேசவும் ஊக்கமளித்தன. அதுவரைகாலஃமும் சகோதரர்களது மொழியான சிங்களத்தைத் தாமாகவே விரும்பிக்கற்ற தமிழரிடையே அம்மொழியின் மேலே வெறுப்பையும் துவேஷத்தையும் வளர்த்தன.

சிங்கள மக்களிடையே ‘இது எம் நாடு: சிங்களமே இந் நாட்டின் மொழி’ என்ற பெருமிதமான எண்ணம் துளிர்

விட்டது. தம் சகோதரர்களது மொழியான தமிழைக் கற்பதைப்பற்றி அவர்கள் எண்ணிக்கூடப் பார்க்கவில்லை. இந்தக் கால கட்டத்தில் பிறந்து வளர்ந்தவர்தான் மற்றைய கதாபாத்திரமான பொலிஸ்காரர், இருபதைத் தாண்டிய இளைஞரான அவருக்குத் தமிழோ ஆங்கிலமோ கொஞ்சமும் தெரியாது;

ஐம்பத்தாறாம் ஆண்டில் ஏற்பட்ட விரிசலின் அகண்டமான பிளவை நான் இன்று சந்திக்கிறேன்.

ஐம்பத்தாறுக்கு முன்னர் நான் மலை நாட்டில் ஆசிரியராக இருக்க நேர்ந்ததால் எனக்குச் சிங்களம் சுமாராகப் பேசவரும். எனது ஆங்கில அறிவுக்கு இவ்விடத்தில் எவ்வேலையும் இருக்கவில்லை. தெரிந்த சிங்களத்தை வைத்துக் கொண்டு எனது உதவியாளர்களான ஆசிரியர்களுக்கும் பொலிஸ்காரருக்குமிடையில் 'தர்ஜுமா'த் தொழில் பண்ணும் ரசமான பொழுதுபோக்கு என் தலையில் விடிந்திருக்கிறது.

நேற்று...

வேறு எந்த வேலையும் இல்லாததினால் என் உதவியாளர்கள் சமையல் செய்யத் தீர்மானித்தனர். முதல் நாள் வரை கடையிலிருந்து வந்த எடுப்புச் சாப்பாட்டிற்குப் பிரியாவிடை சொல்லியாகிவிட்டது! ஆசிரியர்கள் இருவரும் சமையல் வேலையில் மிக உற்சாகமாக ஈடுபட்டார்கள்!

பொலிஸ் காரருக்கு அந்தக் கவலையில்லை. பக்கத்திலிருக்கும் பொலிஸ் நிலையத்திலிருந்து அவருக்குச் சாப்பாடு வந்துவிடுகின்றது!

தெருவாற் செல்லும் மீன்காரனை வரவழைப்பது மட்டும் உங்கள் பொறுப்பு என்று எனக்குச் சொல்லிவிட்டு மற்றைய அலுவல்களை ஆசிரியர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

நான் வெளியே நாற்காலியை எடுத்துப் போட்டுக் கொண்டு கையிற் கம்பராமாயணத்துடன் தெருவையும் கவனித்துக் கொண்டிருந்தேன். சைக்கிள்காரன் 'மீன்' என்று கத்தியபோது நான் அவனை வரவழைத்தேன்.

கடற்கரையோரத்திலிருந்து சற்று உள்ளே விலகி இருக்கும் கிராமமாகையினால் மீன்சற்று விலையாகத்தானிருக்கும் என்று தெரிந்து கொண்ட நான், மீன்காரனுடன் பேரம் பேசிக் கொண்டிருந்தேன். அவன் 'நெருப்பு' விலை சொல்லிக்கொண்டிருக்கிறான்.

அறைக்குளிருந்த பொலிஸ்காரர் வருகிறார். மீன்காரன் என்ன நினைத்தானோ தெரியாது; ஆறுரூபாய்க்கு ஒருசதம் குறைந்தாலும் இல்லை என்று அடம் பிடித்தவன், ஐந்து ரூபாய்க்கே மீனைத் தந்துவிட்டான்!

மீன்காரனின் வருமானத்தில் ஒரு ரூபாயைத் தட்டிப் பறித்த உணர்வு என் மனதில் மிஞ்சியது. ஆயினும் மீனை வாங்கிக்கொண்டேன்.

பொலிஸ்காரர் மீன்காரனோடு பேசிக்கொண்டிருந்தார்.

சக ஆசிரியர்களில் ஒருவர் சொன்னார்; ''பொலிஸ்காரனாலதான் இறாத்தல் ஐந்து ரூபாய்க்குக் கொடுத்தான்.''

இந்தச் சிங்களப் பொலிஸ்காரங்க நம்ம மக்களை இப்படித்தான் கொள்ளையடிக்கிறாங்க'' என்றார், அடுத்தவர்,

''கொள்ளையடிக்கிறதில தமிழன் சிங்களவன் என்ற வித்தியாசமில்லை, ஏன் நாமகூட அவன் கேட்டபடி ஆறு ரூபாயைக் கொடுக்கத் தயாரில்ல.''

ஆனாலும் இந்தப் பொலிஸ்காரங்க சுத்த மோசம், அதிலயும் சிங்களவன்கள் நம்ம மக்களை மிரட்டிப் பிடுங்கிறாங்க''

'ஓமோம், காக்கிச் சட்டைக்கும் மொறட்டுச் சிங்களத்திற்கும் பயந்து நம்ம சனங்களும் காசைக் கொடுக்குதுகள்.''

பொலிஸ்காரர் ஆசிரியர் இருவரையும் மாறி மாறிப் பார்த்தார். தன்னைப்பற்றி ஏதோ குறைவாக அவ்விருவரும் கதைப்பதாக அவர் மனதிற் பட்டிருக்க வேண்டும், என்னிடம் கேட்டார்.

''என்ன செல்லுறாங்க?''

''உங்களைக் கண்டுதான் ஐஞ்சு ரூபாவுக்கு ஒரு இறாத்தல் மீன் தந்ததாகச் சொல்கிறார்கள்.'' என் மொழி பெயர்ப்பிலே திருப்தியடைந்தவர் போலத் தோன்றியவர் தன்பாட்டிற் சொல்லிக்கொண்டார்: ''தராட்டா நான் விட்டிருக்கமாட்டன் பிறகு அவன் வியாபாரமே செய்யமுடியாது.''

அவர் பேச்சிலே ஒரு அகம்பாவம் தொனித்தது. புதிய தலைமுறையினரான சிங்களவரிடம் அதிலும் ஆயுதப்படையினரிடம் இந்த அகம்பாவம் இருப்பது அனுபவத்திற் கண்டதுதான்!

இதன் காரணம்தான் என்ன? என் மனம் எங்கோ தாவுகிறது.

சுதந்திரோதய காலம். மலை நாட்டின் தெற்கிலே தேயிலைத் தோட்டங்களில் சந்தையாக இருந்த பட்டினத்திலே ஆசிரியர்! என் மனம் நிறையத் தீவிர இடதுசாரித் தத்துவங்கள்.

சிங்களமக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட அந்நகரின் வைத்தியசாலை, தபாற்கந்தோர், பகிரங்கவேலைப் பகுதி, சுகாதாரத் திணைக்களம், புகையிரதநிலையம், ஆங்கிலப் பாடசாலை என்ற அத்தனை காரியாலயங்களிலும் தமிழ் உத்தியோகத்தர்கள். ஏன் கடைத்தெருவிலும் தோட்டங்களிலும்கூடத் தமிழ் மக்களின் ஆதிக்கம்தான்! இந்த நிலை

யில் இங்குள்ள சிங்கள மகன் ஏன் இந்த உத்தியோகங்களுக்கெல்லாம் எம்மவர் வரக்கூடாது என்று நினைப்பானாயின், அவன் எண்ணம் வகுப்புவாதமானதல்ல என்றுதான் என் இடதுசாரி மனம் சொல்லிக்கொண்டது! எப்போதாவது ஒரு காலத்தில் அந்த நிலைமை வரத்தான் போகிறது என்றும் நான் நம்பினேன். ஆனால், அந்த மாற்றம் வந்த முறை...

''நாங்கள் பார்க்க வேண்டிய உத்தியோகங்களை எல்லாம் சுப்பையயாவும் கந்தையாவும் பிடித்துக்கொண்டார்கள். தொழில் வாய்ப்புக்களை எல்லாம் 'அந்நியரான' தமிழர்கள் அபகரித்துக்கொண்டார்கள்'' என்று தேர்தல் மேடைகளில் இடதுசாரிகளின் தந்தை என்று வர்ணிக்கப்பட்டவர்களே முழங்கினார்கள். அந்த முழக்கம் என் காதிலே இன்னும் கேட்கிறது!

சிங்களம் மட்டும் என்ற சட்டத்திற்கு மூலகாரணமே உத்தியோக வேட்கைதானா?

சிங்களம் கற்ற எல்லோருக்கும் உத்தியோகம் இல்லை என்ற நிலை நாளாவட்டத்தில் ஏற்படுகையில் இந்தத் துவேஷம் மறைந்துவிடும் என்றுதான் அப்போது நான்நம்பினேன்!

ஆனால், நீரினடியிலே வலோத்காரமாக அமுக்கி வைக்கப்பட்டிருந்த கிடைச்சி கையை எடுத்ததும் திமிறிக் கொண்டு உத்வேகத்தோடு வெளிவந்ததைப்போல, ஒன்றரை நூற்றாண்டு காலமாக அடங்கிக்கிடந்த மக்கள்—சிங்களம் மட்டும் கற்றுக்கொண்டு நாட்டின் மற்றைய தேசிய மொழியை அறிந்து கொள்ள விரும்பாமல் உத்தியோகத்திற்கு வந்த சிங்கள மக்கள் ஒருவித அகம்பாவத்துடன்தான் கிளம்பியிருக்கிறார்கள்! தேசியம் என்ற வார்த்தைக்கே அவர்கள் சிங்களத் தேசியம் என்றுதான் அர்த்தப்படுத்துகிறார்கள். தாம் ஆளும் இனம் என்றஉணர்வு எப்படியோ அவர்கள். மனதில் பதிந்துவிட்டது.

நடுத்தர, மேல்தட்டு வர்க்கத்தினரிடையே ஊடுமொழி யாக இருந்த ஆங்கில அறிவும் குன்றி, ஒருவரையொருவர் புரிந்துகொள்ள முடியாத சூழ்நிலையில் இப்பிளவு மேலும் விரிவடைந்துகொண்டே போனது. சிங்களத்தின் புதிய தலைமுறையினர் மற்றையவர்களைச் சந்தேகக் கண்கொண்டே பார்க்கின்றார்கள். மற்றைய சமூகத்தை அடக்கி ஒடுக்குவது தம் புனிதமான கடமையென்றும், அப்படியாக அடக்கி வைத்திராவிட்டால் அவர்கள் எப்போதாவது ஒரு நாள் மீண்டும் தம்மீது குதிரை விடுவார்கள் என்றும் அவர்கள் எண்ணுகிறார்களா?

என் மனம் 1958 இலும், 1977 இலும் நடை பெற்ற வகுப்புக் கலவரங்களை எண்ணிப் பார்த்தது.

முன்னைய கலவரத்தில் ஆயுதப்படைகள் குண்டர்களை அடக்கின, காரியாலயங்களில் சிங்கள உத்தியோகத்தர்கள் தமிழ் உத்தியோகத்தர்களுக்குப் பாதுகாப்பு அளித்தார்கள்.

பிந்தியதிற் கலகத்தை நடத்தியவர்களே பொலிஸ்காரர் கள்தானே! துவேஷம் நடுத்தர வகுப்பாரிடமும் பரவிக் காரியாலயங்களிலேயே எத்தமிழனுக்கும் பாதுகாப்பு இல்லை!

மாரியம்மன் கோயில் ஒலிபெருக்கி அலறித் திருவெம் பாவைக் காலம் தொடங்கி விட்டதை அறிவிக்கிறது! பக்கத்து டெஸ்குகளில் படுத்திருந்த ஆசிரியர்கள் இருவரும் ஒருவர் பின் ஒருவராக எழுந்து கைவிளக்கை ஏற்றிவைத்து மார்கழி நீராடப் 'பங்கயப் பூம்புனலை' நோக்கிச் செல் கிறார்கள்.

கைவிளக்கு எரிந்துகொண்டிருக்கிறது!

விழித்துக்கொண்ட பொலிஸ்காரர் என்னிடம் கேட் கிறார்: ''ஏன் ஒலிபெருக்கி சப்திக்கிறது?''

நான் அவருக்குத் திருவெம்பாவைப் பூசை பற்றி விளக்கு கிறேன்.

பொறுமையற்றவராக என் விளக்கத்தைக் கேட்டவர் வெளியே சென்று சலம் விட்டு வந்த பின்னர், கதவைத் தாழ்ப்பாளிட்டுக் கைவிளக்கைப் படீர் என்று கையரு லணைத்துவிட்டுக் கட்டிலிற் சரிகிறார்.

'குளிக்கச் சென்றவர்கள் இங்கு வந்துதான் கோயி லுக்குச் செல்வார்கள்' என்று அவருக்கு விளக்கிய நான் எழுந்து சென்று கதவை வெறுமனே சாத்திவிட்டு வருகிறேன். மீண்டும் படுக்கையிற் சரிவதைத்தவிர வேறு வழியில்லை. விளக்கையும் ஏற்றவில்லை.

மீண்டும் என் நினைவுக் கொடிகள் எங்கெங்கோ படர் கின்றன. ......

சனத்தொகைக் கேற்பச் சிங்கள மக்களுக்கு அரசாங்க உத்தியோகங்கள் வழங்கப்படல் வேண்டுந்தான். ஆனால், அதற்காக மற்றைய சமூகங்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டியவைகளை மறுப்பதுதான் தார்மீகமா? பதவிஉயர் வுகள், புதிய நியமனங்கள் என்பன சம்பந்தமாக எதிர்க் கட்சித் தலைவர் நாடாளுமன்றத்தில் எடுத்துக்காட்டும் புள்ளிவிபரங்களை நினைத்துக் கொள்கிறேன். பொலிஸ், இராணுவம் ஆகிய ஆயுதப்படைகளில் சிறுபான்மையின ரான தமிழருக்கு இடமே கிடையாதா? ஏன்? நான் பிறந்து வளர்ந்த திருக்கோணமலைக்கு அரசாங்க அதிபராக ஒரு தமிழரோ, அல்லது ஒரு முஸ்லீமோ வரமுடியுமா? அரசாங்க அதிபர் ஏன்? எந்தத் திணைக்களத்தை எடுத்துப் பார்த் தாலும் இது தானே கதை! அரசு முன்னெச்சரிக்கையாகச் எமது மாவட்டத்தை ஒரு 'அல்ஸ்ரர்' ஆக்கிக் கொண்டு வருகிறதா? சிங்களச் சமூகம் ஆளப்பிறந்தது என்பதுதான் பொருளா?

வெளியே காலடியோசை கேட்கிறது. நான் தலைமாட்டி லிருந்து ரோச்லைற்றை எடுத்துக் கதவுப்பக்கமாக ஒளியைப் பாய்ச்சினேன். நீராடிவிட்டு வந்த இருவரும் உள்ளே வந்து மீண்டும் விளக்கை ஏற்றிக் கோயிலுக்குப் புறப்பட ஆயத்த மானார்கள்.

''யார் மாஸ்ரர் விளக்கை அணைத்தது?''

''நான்தான்; மற்றவருக்குத் தொந்தரவாக இருக்கக் கூடாதல்லவா.''

எதிரே படுத்திருந்த பொலிஸ்காரர் நிமிர்ந்து பார்த்து விட்டு மீண்டும் குப்புறப் படுத்துக் கொண்டார். கடிகாரம் மணி நான்கு என்று சொல்லிக் கொண்டிருந்தது.

உடையணிந்து கொண்ட ஆசிரியர்கள் இருவரும் கோயி லுக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். எனக்கும் கோவிலுக்குப் போக ஆசைதான்! ஆனால், நான் இணைப்பதிகாரி. விளாப்பத்திரங்களைக் காவல்காக்கும் தலையாய பொறுப்பு என்னுடையது! எனவே, மூக்குக் கண்ணாடியை எடுத்துப் போட்டுக் கொண்டு கம்பளைப் புரட்டினேன்.

வாடைக்காற்று சில்லென்று ஊதிக்கொண்டிருந்தது.

பொலிஸ்காரரும் சோம்பல் முறித்துக்கொண்டு எழுந் தார். வெருகலுக்குச் செல்லும் முதல் பஸ்ஸின் உறுமல், தேநீர்க்கடை அலுமீனியக் கரண்டி பித்தளைக் குவளையைத் தட்டும் ஓசை, திருப்பள்ளியெழுச்சிப் பாடலின் சுநாதம் என்ற மண்ணுலகத்து நல்லோசைகள் காதை வந்தடைகின் றன.

''மாஸ்ரர், நான் வெளியே போய் வருகிறேன்.''

''சரி, போய் வாருங்கள்.''

''துவக்கு இருக்கிறது மாஸ்ரர்; பார்த்துக் கொள்ளுங்கள்.''

''சரி. பார்த்துக் கொள்கிறேன்.''

''எனக்குப் பயமாக இருக்கிறது.''

''ஏன் பயம்?''

''துவக்கை விட்டுவிட்டுப் போவதற்கு.''

''அப்படியானால் கையோடு அதையும் எடுத்துக் கொண்டு போங்கள்.''

''உங்களிடம் எனக்குப் 'பயம்' இல்லை.''

''அப்படியானால் ......''

''மற்றவர்களிடம்''

''எவருமே அதைத் தொடமாட்டார்கள்.''

''இல்லை, அவர்கள் எந்நேரமும் என்னைப் பற்றித் தான் ஏதோ கதைக்கிறார்கள்.''

''அப்படியில்லை. மொழி விளங்காததில் நீங்கள் அப்படி நினைக்கிறீர்கள்.'' நான் பலமாகச் சிரித்தபடியே மேலும் சொன்னேன். ''பொதுமக்களோடு தொடர்பு கொண்டிருக்கவேண்டிய நீங்கள் தமிழையும் சற்றுத் தெரிந்திருக்க வேண்டும்.''

''நாங்கள் ஏன் தமிழ் படிக்கவேண்டும்? நீங்கள் சிங்களம் படியுங்கள்.''

''சிங்களப் பொதுமக்கள் தமிழையும், தமிழர்கள் சிங்களத்தையும் படிக்கத் தேவையில்லைத்தான். ஆனால்,

அவர்களோடு தொடர்பு கொள்ளவேண்டிய அரசாங்க உத்தியோகத்தர்கள் இருமொழியையும் தெரிந்துகொள் வதே நல்லது.''

''இல்லை. நாங்கள் பெரும்பான்மையினர். உத்தியோ கத்திற்கு வரும் தமிழர்கள்தான் சிங்களம் படிக்கவேண்டும். சரி மாஸ்ரர், நான் வருகிறேன். தேநீர் குடிக்கவேண்டும்'' என்று சொல்லிவிட்டு அவர் நடக்கிறார்.

என் மனம் மீண்டும் அலை பாய்கிறது. சிங்கள மகன் ஒருவனின் உண்மையான மனநிலையே இதுதானா?!

''பேராசிரியர் ஜெயதேவா ஹெட்டியாராய்ச்சி அவர் களின் ஆய்வு என் மனத்துறையில் நெளிகிறது. சாதாரண சிங்கள மகன் மட்டுமல்ல: நாட்டின் உயர்கல்விப் பீடமான சர்வகலாசாலைச் சிங்கள மாணவர்களிலும் மிக மிகக் குறைந்த விகிதத்தினரே தமிழ் மாணவர்களைப்பற்றி நல் லெண்ணம் கொண்டிருக்கின்றனர். இத்தோழமையுணர்வு சிங்கள மாணவர்களை விடத் தமிழ் மாணவர்களிடம் அதிகமாக வுள்ளது.''

நம்மிடம் தோழமை யுணர்வை வைத்துக்கொள்ள விரும்பாத ஒரு சமூகத்திடம் நாம் ஏன் ஒட்டிக்கொண்டி ருக்க வேண்டும்?

'பந்தியிலிருந்து எழும்பு', என்பவர்களிடம் நாம் ஏன் 'கல்லை பொத்தல்' என்று சொல்லிக் கொண்டிருக்க வேண்டும்?

பிரிந்துபோவது ஒன்றேதான் நாம் கௌரவமாக இருப்பதற்கு ஒரே வழியா?

1956இல் சிங்களம் மட்டும் சட்டமூலம் நாடாளுமன்றத் தில் விவாதிக்கப் பட்டபோது கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா பேசியது என் ஞாபகத்திற்கு வருகிறது. "Parity, Mr. speaker, we believe is the road to freedom of our

nation and the unity of its components. Otherwise two torn little bleeding states may yet arise of one little state which has compelled by a large section of itself to treason.''

ஆமாம். ஒரு மொழி: இரண்டு நாடு; என்று அன்று அவர் சொல்லியது நிறைவேறத்தான் போகிறதா?

கோயிலிலிருந்து திருவெம்பாவைப் பாடல் கேட்கிறது.

'எங்கொங்கை நின்னன்பர் அல்லார் தோள் சேரற்க' என்ற அடிகளுக்கு என்னுள்ளே புதிய அர்த்தம் தொனிக்கிறது. ஞாயிறு உதயமாகிக் கொண்டு வரும் அடிவானத்திற் செம்மை படர்வதை என் கண்கள் ஜன்னலூடே வெறிக்கின்றன. □

அலை, 1981.

# ரதி கந்தசாமி

கடந்த 15 ஆண்டுகளாக ஆக்க இலக்கியம் படைத்துவருபவர் திருமதி ரதி கந்தசாமி. 'தாமரைச் செல்வி' என்னும் புனை பெயரில் இவர் இலக்கிய உலகில் அறியப்பட்டவர். சிறுகதை, நாவல் ஆகிய இரு துறைகளிலும் படர்கிறது இவருடைய இலக்கியப் படைப்பு. ரதி கந்தசாமி எழுதிய 65 சிறுகதைகள் இதுவரை வெளிவந்துள்ளன. களம், சுடர், ஈழமுரசு, முரசொலி முதலிய பத்திரிகைகளும் வேறு பல இலக்கிய அமைப்புகளும் நடத்திய போட்டிகளில் தாமரைச் செல்வியின் 13 சிறுகதைகள் பரிசுகளை ஈட்டிக் கொண்டன. பரிசு பெற்ற குறு நாவல்கள் இரண்டு. இவர் எழுதிய 'சுமைகள்' என்னும் நெடுநாவல் வீரகேசரியின் பிரசுரமாக வெளியாயிற்று. ஆனந்த விகடன் முதலிய தமிழகத்துச் சஞ்சிகைகளும் இவரது படைப்புகளை ஏற்றுப் பிரசுரித்துள்ளன.

'சமுதாயத்தின் நிகழ்வுகள் என் மனத்தைப் பாதிப்பதனால், எழுதவேண்டும் என்ற ஆர்வம் என்னிடம் ஏற்படுகிறது' என்கிறார் ரதி. சித்திரம் வரைவதிலும் இவருக்குத் திறமை உண்டு.

நமது சமுதாயத்திலே மரண நிகழ்வுகளில் காணக்கூடிய காட்சி ஒன்று இங்கு அர்த்தபுஷ்டியுடன் சித்திரிக்கப்படுகிறது ... தறுக்கணித்த சில மனங்களின் ஆர்ப்பரிப்பு. அதன் நடுவே, அன்பினால் நெகிழும் ஓர் உள்ளத்தின் ஓலம்! ... பொருள்வளக் குறைவு, பொருளை ஈட்டுவதில் உண்டாகும் அங்கலாய்ப்பு, இவற்றால் ஏற்படும் மனிதாபிமான வறட்சி என்பன இக்கதையிலே உள்ளோடி நிற்கின்றன. அன்பின் மென்மையையும் வன்மையையும் ஒருங்கே காட்டும் கதை. நல்லதொரு உணர்ச்சிக்கோலம்.

# ஓர் உயிரின் விலை

ஒரு நிமிஷம் அழுகை எல்லாம் அடங்கிப்போய் உறைந்திருந்தவளை அந்த மேளச் சத்தம் திடுமென எழச்செய்தது. கதறிக் கதறி ஈனஸ்வரத்தில் அவள் அழ ஆரம்பித்தாள். ''கடவுளே! என்னை இப்பிடி அழவிட்டுப் போய்விட்டீங்களே!'' தலை தலையாய் அடித்துக் கொண்டு அழுதாள்.

பார்வை அந்த முகத்தை விட்டு விலகாமல் அடங்காத துயரத்தோடு பரிதவித்தது!

நேற்றுவரை அவனாக இருந்தவன் இப்போது 'அது' வாகிப் போய் நீட்டி நிமிர்ந்து படுத்திருந்தான். நேற்று மத்தியானம் ''சமைச்சு வை சத்தியா! சந்திக் கடைக்குப் போய் சைக்கிளுக்கு டயர் மாத்திக்கொண்டுவாறன்'' என்று

சொல்லிவிட்டுப் போனவன் காரினால் மோதப்பட்டு, ஒரு நிமிஷத்துள் உயிரை இழந்துவிட்டான்!

விபத்தின் அடையாளமே தெரியாதபடி முகம் தெளிவாய்க் காணப்பட்டது. வலது கையும் தோளும் காலும் தான் நசிந்துபோய் விட்டன. நேற்று மாலை செய்தி கேட்டபோது அவளால் நம்பவே முடியாமல் இருந்தது. பத்து நிமிஷம் பேச்சு வராமல், குரல் எழும்பாமல் அப்படியே உறைந்து விட்டாள்!

இந்த கணம் வரை — அவனைப் பிரேதமாய்ப் பார்க்கின்ற இந்தக் கணம்வரைகூட அவளால் நம்பவே முடியவில்லை. அழுது அழுது களைத்துப் போய், குரல் எழுப்பச் சக்தியற்றுப் போய், அவனைக் கிடத்தியிருந்த வாங்கில் தலையைக் கவிழ்ந்திருந்தவளின் காதுகளின் பின்னால் பெண்கள் கும்பலிலிருந்து வந்த பேச்சுக்கள் தெளிவில்லாமல் விழுந்தன.

''பாவம்! இந்தப் பெட்டை இனி என்ன செய்யப் போகுது! போதாததுக்கு கையில ஒரு வயதுப் பொம்பிளைப் பிள்ளை. இனி இவளை தேவராசன்ர ஆட்கள் அண்டமாட்டினம். பெட்டைக்கு ஆற்றை ஆறுதலோ தெரியாது!''
'அதுதானே! அவன் இவளைக் கூட்டி வந்த இந்த மூண்டு வருசத்திலயும் இவளைப் போட்டு வறுத்து எடுத்தவையல்லே. இனிமேல் கடைசி வரைக்கும் இவை பார்க்க மாட்டினம்; துரத்திப் போடுவினம். தன்ர வீட்டு ஆறுதலுமில்லை ...... கட்டினவன்ர வீட்டு ஆறுதலுமில்லை! பாவம், இனி என்னெண்டு சீவிக்கப் போகுதோ! இப்பிடி தேவராசனை அநியாயமாய்க் கடவுள் பறிச்சிருக்கக் கூடாது'' இந்தப் பேச்சுக்களைக் கேட்கக் கேட்க அவளுக்குப் பொங்கிக் கொண்டு வந்தது. துயரம்!

இருள் மயமான எதிர்காலம் வாயைப் பிளந்துகொண்டு பயங்கரமாகக் காட்சி அளித்தது! திசை தெரியாத காட்டில் நிற்பதைப் போல் திக்குமுக்காடினாள். ''கடவுளே! என்ர

கண்ணா!... ஏன் என்னை விட்டுப் போனீங்கள்! நான் இனி என்ன செய்வன்! ... எங்கை போவன்!...''

எல்லாவற்றுக்கும் மேலாக அவள் நெஞ்சை வறுத்தெடுத்தன, தேவராசனின் தாயின் ஒப்பாரியும் கூக்குரலும். ''இந்தப் பாழ்படுவாள் எந்த நேரத்தில என்ர பிள்ளையோட வந்தாளோ வாரிக் குடுத்தாச்சு! என்ர பிள்ளையை விழுங்கிப் போட்டாள்! என்ரை வயிறு பத்தி எரியுது! டேய், என்ர ராசா!... என்ர சொல்லுக் கேட்டிருந்தால் இப்ப உன்ர ஆயுசு அற்பத்தில போயிருக்குமோ?... எல்லாம் இவளால! இழுத்துக் கொண்டு வந்தாய்; இப்ப உன்ர உயிர் இழுபட்டுப் போயிட்டுது! ......''

வார்த்தைக்கு வார்த்தை சத்தியாவைத் திட்டிய, கையால் தலையில் அறைந்துகொண்டு அவள் அழுதபோது சத்தியாவின் நெஞ்சமே அதிர்ந்தது.

அவன் அவளை அழைத்துவந்து மூன்று வருடங்கள் ஆகின்றன. இந்த மூன்று வருஷங்களும் அவளை வேண்டாத ஒருத்தியாகத்தான் அவனது தாயும் தந்தையும் மற்றவர்களும் நடத்தினார்கள்.

இப்போது அந்த விறாந்தை ஓரம் கண்ணில் சோகத்தைக் காட்டிக் கொண்டு, யாரோ ஒருவருடன் மிளாகாய் விலைபற்றிப் பேசிக் கொண்டிருக்கும் தேவராசனின் அண்ணாவுக்கு அவளைக் கண்டாலே பிடிக்காது.

எப்போது பார்த்தாலும் அவளைப்பற்றி இளக்காரமாகப் பேசுவான். அவனின் மனைவி அவனைவிட ஒருபடி அதிகம்.

இப்போது தலையை விரித்துக்கொண்டு அடிக் குரலில் ''போயிட்டீங்களே ...... போயிட்டீங்களே...'' என்று கத்திக் கொண்டிருக்கும் அவள் தன் வார்த்தைகளால் சத்தியாவின் இதயத்தை எத்தனை தரம் கூறு போட்டிருப்பாள்.

அப்போதெல்லாம் மனம் நொந்து அழும்போது அவன் ஆதரவாகச் சொல்வான்: ''இவையள் சொல்லுகிறதைப் பெரிசாய் எடுக்காதை சத்தியா அது அவையளின்ர குணம். அதெல்லாம் உனக்குத் தெரியும்தானே. விட்டுத்தள்ளு. எது வெண்டாலும் சொல்லட்டும்.''

அவளின் தலைமயிரை ஒதுக்கி, முகத்தை நிமிர்த்தி கண்ணீரைத் துடைத்து அவன் அன்பாகச் சொல்லும்போது அவளின் அழுகை அந்த நிமிடமே அடங்கி விடும். இந்த நான்கு சுவர்களுக்குள்ளும் அவனது அருகில் இருக்கின்ற மகிழ்ச்சியே பெரிது என்பதுபோல மனம் தேறிக் கொள்ளும்.

அவனின் தாய்க்கும் அண்ணனுக்கும் அவளின் வரவு பெரிய ஏமாற்றத்தைத் தந்திருந்தது. ''என்ர பிள்ளைக்கு நாற்பதினாயிரத்தோட சீதனம் பேசி வந்தவை, எப்படி யெல்லாம் கலியாணம் சிறப்பாய்ச் செய்ய வேணுமெண்டு கனவு கண்டனான். எல்லாத்தையும் பாழாக்கிப் போட்டாள் என்ன மருந்து போட்டு என்ர பிள்ளையை மயக்கினாளோ!

மூக்கை உறிஞ்சி, குரலை நீட்டி முழக்கி அவனின் தாய் புலம்புவாள். ''காரும் வீடுமாய் நல்ல சீதனம் வாங்கிச் செய்திருக்கலாம். கழுதைக்குப் பலன் இல்லை. இப்பிடி மாட்டுப் பட்டிட்டான்.'' என்று அண்ணா சிடு சிடுப்பான்.

நெருப்புத் துண்டங்களை விழுங்கியது போல அவள் துடித்துப் போவாள். அவன்அவளை ஆதரவாய் அணைத்துச் சொல்வான்: ''சே...... நான் உன்னை இங்கை வைச்சிருக்கக் கூடாது. எங்கையாவது வேற வீடு பார்த்துக் கொண்டு போவம் எண்டாலும் முடியர்மக்கிடக்கு. நான் இப்பிடி உயிரோட இருக்கிறபோதே உன்னை இந்த மாதிரிநடத்து கினம். நான் இல்லாத காலத்திலயெண்டால் உன்னை நடுத் தெருவில்தான் விடுவினம்.''

''ஏன் இப்படியெல்லாம் பேசிறீங்கள்.''

''நெருப்பு எண்டதும் வாய் சுட்டிடுமே ...''

இன்றைக்கு நெருப்புச் சுட்டு விட்டதே! அன்றைற்கு அவர்கள் எத்தனை கொடுமையாக நடத்திய போதும்அவள் எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டாள். அவனுக்காக

அவள் கர்ப்பவதியானபோது அவளைப் பூ மாதிரி அவன் கவனித்துக் கொண்டான். அம்மா, அப்பா, அண்ணன். தம்பி அத்தனை பேரினதும் அன்பை அவன் ஒருவனே செலுத்தினான்.

பெண்குழந்தை பிறந்தபோது ஆவலோடு அவன் குனிந்து அவளைப் பார்த்து ''உன்னை மாதிரியே குழந்தை இருக்குது சத்தியா'' என்றான்.

''எனக்கு மாதிரி அதுக்கும் விதி வரக்கூடாது. ரெண்டு மில்லாதவளாய் வளர்ந்து, போற இடத்தில எல்லாரிட்டை யும் ஏச்சுக் கேட்கக் கூடாது.'' அவள் தழதழத்தாள்.

சீ... உனக்கென்ன விசரே... என்ர பிள்ளையெண்டால் சும்மாவே. அவள் ராசாத்தி மாதிரி இருப்பாள், பார்.

குழந்தை மீது அவன் தன் உயிரையே வைத்திருந்தான். ''என்ரை செல்லத்தை ஒரு குறையுமில்லாமல் வளர்க்க வேணும். அவளுக்கு எந்தக் கஷ்டமும் இருக்கக் கூடாது. சும்மா ராசாத்தி மாதிரி வளரவேணும் என்ன சத்தியா.''

''உங்கட ஆசை நிறைவேறுமப் போகப் போகுதே...!''

திடீரென்று அதிர்ந்த மேளச்சத்தத்தில் நினைவெல் லாம் கலைந்துபோக அவள் நிமிர்ந்தாள்.

அவனது சலனமற்ற முகத்தைப் பார்த்து தாங்கமுடியா மல் அழுதாள். மடியிலிருந்த குழந்தை அவளின் முகத்தை நிமிர்ந்து பார்த்து வீரிட்டது! எவ்வளவோ ஆசைகளை மனதில் வளர்த்தானே! இன்று எல்லாமே கனவாய்ப் போக அவன் சலனமற்றுக் கிடக்கிறானே!

கிரியைகள் நடைபெற ஆரம்பித்தபோது அவள் மௌன மாய் குழந்தையை இறுக அணைத்தபடி அவனின் காலடியில்

அமர்ந்திருந்தாள். பாடையில் உடலை வைத்துத் தூக்கிய போது அழவும் சக்தியற்று அப்படியே மயங்கிப்போனுள்!

அடுத்த நாள் முன் விறாந்தையில் அவள் அமர்ந்திருந் தாள். பார்வை ஒவ்வொரு இடமாய் அலைந்தது. இது அவன் படுத்திருந்த விறாந்தை... இது அவன் நின்ற முற் றம்...இது அவன் உறங்கிய அறை... இங்கிருந்த ஒவ்வொன் றும் அவனால் தொடப்பட்ட இடங்கள்!

இந்த இடத்தில்கூட வாழ்கின்ற பாக்கியும் அவளுக்குக் கிடைக்கப் போவதில்லை. அவன் நினைவுகளைத் தவிர வேறெதுவும் அவளுக்குச் சொந்தமாகப் போகப்போவ தில்லை.

எங்கே போவாள்... இந்தக் குழந்தையை எப்படி வளர்க்கப் போகிறாள்... படுபாவி காரில் வந்து ஒரே நிமி டத்தில் அவள் வாழ்க்கையைச் சிதைத்து விட்டானே!

''பிள்ளை சத்தியா!''

குரல் கேட்டு டக்கென்று நிமிர்ந்தாள். வெள்ளை நஷா னல் வேட்டியுடன் கதிர்வேலு மாஸ்டர். ஒரு வகையில் தேவ ராசனுக்கு மாமா முறை. அவள் பார்த்தவர்களுக்குள் நல்ல வரான ஒருவர், ''என்ன மாமா...'' எழுந்த சத்தம் நாவி லேயே நின்று விட்டது.

''அழாதை பிள்ளை. உன்ர கவலை தீரக்கூடியதில்லை. என்ன செய்வம். எல்லாம் தலைவிதி...''

விறாந்தையின் மறுபக்கத்திலிருந்து தேவராசனின் அம்மா வெடித்தாள். ''நான் நாதியில்லாமல் போயிட்டனே! என்ர கவலையளை ஆர் கேட்கினம், கட்டையிலை போறவன் அழ விட்டிட்டுப் போயிட்டானே!'' ''இஞ்சே பாக்கியம் கொஞ்சம் அழாமல் இரு. ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வந்த னான். தேவராசனை காரால அடிச்சவன் இப்ப பொலிசில இருக்கிறான்.அவன் என்னைஆள்விட்டுக் கூப்பிட்டிருந்தான்.

போய் என்னெண்டு கேட்டன். எதிர்பாராம இந்த விபத்து நடந்திட்டுதாம். இதை வழக்காக்க வேண்டாமெண்டும், சத்தியாக்கும் குழந்தைக்கும் இருவதினாயிரம் ரூபா காசு தாறன் எண்டும் சொன்னான். நீங்கள் என்ன சொல்லுறீங்கள்?''

இதைக் கேட்டதும் அண்ணா குதித்தான். ''என்ர தம்பியின்ர உயிருக்கு விலை இருவதினாயிரமாமே... அவ்வளவு அற்பத்தனமாய் நாங்கள் போகேல்லை!''

''அதுதானே! என்ர பிள்ளையை அவன் என்னெண்டு நினைச்சான். நாங்கள் என்ன நடுத்தெருவில நிக்கிறமே! என்ர பிள்ளையே போயிட்டானாம், இந்தக் காசெல்லாம் எந்த மூலைக்கு!''

தாய் மறுபடியும் ஒப்பாரி வைத்தாள். மீண்டும் அண்ணன் இரைந்தான்;

''மாமா, நான் வழக்குப் போடாமல் விடமாட்டன். என்ர தம்பியை மோதிப் போட்டு அவர் சொகுசாய் இருக்கப் போறாராமே. அவற்றை பிச்சைக் காசு இஞ்சை ஆருக்கு வேணும்? வழக்குப் போட்டு ஒரு கை பார்க்காமல் விடமாட்டன். போய் அவனிட்டச் சொல்லுங்கோ. கோட்டில சந்திப்பம் எண்டு.''

சத்தியா தலையை முழங்கால்களில் கவிழ்த்துக் கொண்டு மௌனமாக இருந்தாள். ''யோசிக்காமல் கதைக்காதை தம்பி வழக்காக்கி அது முடியிற வரைக்கும் சத்தியா என்ன செய்வாள். எவ்வளவு காலம் இழுக்குதோ! காசை வாங்கியிட்டால் பிரச்சினையும் தீர்ந்திடும்.''

மாஸ்டர் அமைதியாகச் சொன்னார்.

''அதெல்லாம் நடக்காது. எவ்வளவு காலமெண்டாலும் செல்லட்டும். நாங்கள் வழக்குத்தான் நடத்துவம். அவனிட்ட காசு வாங்கினால் எங்கட கௌரவம் நாளைக்குச் சந்தி சிரிக்கும். என்ர தம்பியின்ர உயிருக்கு நான் விலை பேச மாட்டன்.''

சத்தியாவின் காதுக்குள் ''நான் இல்லாத காலத்திலே உன்னை நடுத்தெருவிலதான் விடுவினம்'' என்று தேவராசன் முணுமுணுப்பது போல இருந்தது. தன் குழந்தையைக் கண் கலங்கக் கலங்கப் பார்த்தாள், சத்தியா. என்ர பிள்ளை ராசாத்தி மாதிரி இருப்பாள் பார் என்று அவன் அன்றைக்குச் சொன்னானே... இன்றைக்கு...?

எதுவித ஆதரவுமில்லாமல் ஒரே நிமிஷத்துள் எப்படி அனாதையாகப் போனார்கள்.

''கோடு வழக்கெண்டு போய் நீங்கள் நாளை இழுத்தடிப்பீங்கள். அது வரைக்கும் இந்தப் பிள்ளை என்ன செய்யிறது? இதுக்கு ஆர் ஆதரவு? தன் வீட்டுத்துணையுமில்லை. உங்கட ஆதரவுமில்லை.'' மாஸ்டர் விடாமல் நிதானமாகச் சொன்னார்.

''அதுக்கு நாங்கள் என்ன செய்யிறது. ஏன் ஓடிவருவான்? வந்தால் இந்த நிலை வந்தாலும் ஏற்றுக்கொள்ள வேண்டியது தானே!''

''அப்படிச் சொல்லாதை தம்பி. பாவம் அது. மனம் நொந்து போயிருக்குது.''

சத்தியா கொஞ்சம் நிமிர்ந்தாள். இவர்களினால் ஒதுக்கப்பட்டநிலை அவளுக்குள் ஒரு ஆவேசத்தை உருவாக்கியது! நாளைக்கு இவர்கள் ஒரு வாய் கஞ்சிகூட ஊற்றப்போவதில்லை என்றது நெஞ்சு.

தேவராசன் சொன்னது திரும்பத் திரும்ப வந்து காதில் எதிரொலித்தது: ''என்ர பிள்ளை ராசாத்தி மாதிரி இருப்பாள் பார்.''

உண்மையாகவே அவனின்ர பிள்ளை ராசாத்தி மாதிரி வளர வேண்டும். அது ஒன்றுதான் வேண்டும். அது ஒன்றுதான்! அதற்கு அடிப்படையாய்த் தேவையானது பணம்!

''என்ர தெய்வமே... உங்கடை உயிருக்கு நான் விலை பேசேல்லை, உங்கட ஆசையை நிறைவேற்ற வேணும் எண்ட என்ர லட்சியத்திற்காகத்தான் இந்தக்காசை வாங்கப் போறன். என்னை மன்னிச்சுக்கொள்ளுங்கோ!''

சத்தியா கண்களைத் துடைக்கவும் மறந்தவளாய் விருட் டென்று எழுந்தாள்.

''மாமா! ஆர் என்னவும் சொல்லட்டும். வழக்கும் வேண் டாம்; ஒரு மண்ணும் வேண்டாம். அந்த இருவதினாயி ரத்தையும் எனக்கு வாங்கித்தாருங்கோ. நான் எங்கயாவது போயிடுறன். எனக்கு எத்தனையோ உழைப்புத் தெரியும். என்ர பிள்ளையை நான் ராசாத்தி மாதிரி வளர்க்கவேணும். அவளுக்கு எந்தக் குறையும் தெரியக்கூடாது. அவரின்ர ஆசையை நிறைவேற்றவேணும். நீங்கள் காசை வாங்கித் தாருங்கோ, மாமா. தாருங்கோ...''

குரல் நெகிழ்ந்து போக அவள் குழந்தையை முகத்தோடு அணைத்துக்கொண்டு நெஞ்சம் வெடித்துச் சிதறும் வண் ணம் அழ ஆரம்பித்தாள்! □

சிந்தாமணி, 1981

தெணியான்

# காவலூர் எஸ். ஜெகந்நாதன்

இலக்கியங்களைப் படைப்பதோடு, இலக்கிய நூலகளைப் பிரசுரிப்பதிலும் சமமான ஆர்வம் கொண்டிருந்த எழுத்தாளர் ஜெகந்நாதன். '75 ஆம் ஆண்டில் எழுத்துத்துறைக்கு வந்த இவர், காலமாகும் வரையிலான 10 ஆண்டுகளுக்குள் தமது படைப்புகளைக்கொண்ட 7 சிறுகதைத் தொகுதிகளையும், 2 நாவல்களையும், ஒரு கவிதைத் தொகுப்பையும் நூலாக வெளியிட்டுள்ளார்.

மாருதம் என்னும் இலக்கியச்சஞ்சிகையை ஜெகந்நாதன் சிலகாலம் நடத்தினார். பின் சென்னையிலே 'வளர்மதி வெளியீட்டகம்' என்னும் பிரசுராலயத்தை நிறுவி நூல்களைப் பிரசுரித்துவந்தார்,

''கடந்த சில ஆண்டுகளாக ஜெகந்நாதனின் கதைகளில் அனுபவம், கொள்கை, பார்வை இவற்றின் பாதிப்பைக் காணும்படியாக உள்ளது. வெறுமனே, இலக்கிய ஆர்வ உணர்வோ உந்துதலோ மாத்திரமன்றி வாழ்கையைக் கூர்ந்து கவனிக்கும் தன்மையையும் அதன் நேரடி விளைவான கண்ணோட்டமும் இவரது அண்மைக்கால கதைகளில் இழையோடுவதைக் காணக் கூடியதாயிருக்கிறது......''

— பேராசிரியர் க. கைலாசபதி
(யுகப் பிரசவம் நூலின் முன்னுரையில்)

கிராம மக்களுடைய சிந்தனையில், செயற்பாடுகளில் வாழ்க்கை நெறியின் கட்டமைப்பில் ஏற்பட்டு வரும் மாற்றத்தைத் தொட்டுக் காட்டும் கதை. பத்து வருடம் என்னும் சட்டகத்தினுள் அடக்கப்பட்ட வகை மாதிரிச் சித்திரம்... மாற்றமடைந்து விட்ட கிராமம்; மாற்றத்தைச் சீரணிக்க முடியாத வியாபாரி வினாசித்தம்பியர். அவருக்குள்ள விரிவான வாழ்க்கை வசதிகள்; விரியாத மனது — இத்தகைய முரண்பாடுகள் ஒன்றுக்கொன்று முகங்கொடுக்கின்றன; இது இக்கதையின் பலம். செட்டான — அங்கதம் இழையோடும் மொழிநடை கதைக்கு வளமூட்டுகிறது.

# பாய்ச்சல்கள்

உலகத்தைப் பார்த்து எவ்வளவு காலமாச்சு!

பொடுக்கென்று பல்லி விழுந்து திகைத்துக்கிடந்து ஒரு உதறலோடு ஊர்வது போல வினாசித்தம்பியரிடம் அந்தக் கேள்வி விழுந்தது, திகைத்து மனதில் ஊர்ந்தது. முதுகை நெடிதுயர்த்தி, சாய்மனைக்கதிரையில் நிறைந்து அமர்ந்து கொண்டார். கனத்துக்கிடந்த கண்களைக் கசக்கிவிட்ட போதும் ஒன்றும் புலப்படவில்லை. இருள் மூடுதிரை போட்டிருந்தது.

பழகிப்போன கை ‘டேபிள் லைட்’டைப் போட அறை முழுவதும் பால் பொழிந்தது.

மனதில்...?

வினாசித்தம்பியர் மேசையில் இருந்த மணிக்கூட்டைப் பார்த்தார். 'பதினொன்று' என்றது.

அந்தக் கேள்வி?

தப்பிப் புரளும் மறதிகளை ஒன்றுகூட்டிப் பார்த்தார். கனவுதான். பச்சைப் போர்வை விரித்ததுபோல் நெல் வயல்கள் நடுவே வயிரவர் கோயில்; பக்கத்தில் குளம், தூரத்தூர வீடுகள். அவைகளுக்கெல்லாம் தலைவன்போல் அந்தப் பெரிய வீடு; அவரது வீடு...

சுருக்கு முடிச்சாக விழும் கேள்வி

உலகத்தைப் பார்த்து எவ்வளவு காலமாச்சு!

இனித் தூங்கின மாதிரித்தான். அதனாலென்ன! இவ்வளவு நேரம் தூங்கியதே அவரது வயதுக்கும் வழக்கத்துக்கும் போதுமானது. மேசையிலுள்ள பிளாஸ்கில் தேநீர். மகளுடைய ஏற்பாடு. அவர் சிரமப்படக் கூடாது என்பதற்காக அல்லாமல், அவரால் தாங்கள் சிரமப்படாமல் தப்புவதற்கும்! பென்னம் பெரிய பங்களாவின் ஒரு அறைதானென்றாலும் வினாசித்தம்பியருக்கு அதனுள்ளேயே சகல சீவிய வசதிகளும் செய்யப்பட்டிருந்தன.

நேரத்துக்கு நேரம் சாப்பாடு வரும். இரவும் அதை முடித்து விட்டு, 'சிவசிவா' என்று சாய்மனைக் கதிரையில் சாய்ந்தாரென்றால் அப்படியே உறங்கிவிடுவார். எழுந்து கட்டிலுக்கு மாற நினைவுபடுத்த யார் இருக்கிறார்கள். இவர் துடியாட்டமாக இருந்த காலத்தில் ஒருத்தி இருந்தவள் தான். பத்து வருடங்களுக்கு முன் அவள் போயே போய் விட்டாள்.

வினாசித்தம்பியார் அறையே 'எல்லாமாக' ஒதுங்கியிருப்பார். புறத்தில் மகளின் குடும்பப்படம் கோலாகலமா ஓடும்! இதே பட்டணத்தில் பிறிதொரு கேந்திரத்தில் மகனுடைய

பங்களா. மகளுடன் இருப்பதே பரவாயில்லை என்பது அவருக்கு அனுபவம் கொடுத்த பாடம்; முடங்கி விட்டார். ஒரு சுழியோடு எழும்பி பெரிய பிஸ்னஸ் விண்ணனாகிவிட்ட வினாசித்தம்பியர், அவற்றில் மகனுக்குப் பாதி மகளுக்குப் பாதியாக்கி, முன் எச்சரிக்கையாக நடுவில் சிறிது பிய்த்து மடியில் கட்டிக் கொண்டு, இனி என்ன என்று ஒதுங்கியவர் தான். இதே அறையில்......

எத்தனை வருடங்களாகி விட்டன!...

மடிக்கிறார்! மடிக்கிறார்! முடிவாக நினைவில் இல்லை. குத்து மதிப்பாக ஒரு பத்து வருடம் இருக்குமோ?

ம்... உலகத்தைப் பார்த்து எத்தனை வருடமாச்சு!...

O O O

வினாசித்தம்பியர் 'உலகம்' என்று இப்போது நினைப்பது தனது ஊரை - சொந்த ஊரை.

அந்த நாட்களில் அவர் கோயில் திருவிழாக்கள், நெருங்கிய உறவினர்களின் செத்த வீடுகள், மிக நெருங்கிய உறவினர்களின் கல்யாணங்கள் என்று போய்வந்திருக்கிறார். அப்போதெல்லாம் ஊரிலுள்ள சனம் முழுவதும் பல்லிளிக்கும். வளைந்து நிமிரும். அவரது மனம் புளகமடையும்.

அவருக்குப் பிறந்தவர்கள் தமது இன சனத்தை மறந்து 'புதிய உலகத்தில்' ஐக்கியமாகிவிட்ட போதும் அவர் மறக்காமல் சில வருடங்கள் ஊர்க்கோயில் திருவிழாவுக்குப் போய் வந்தவர்தான். காலத்தேரின் சில்லுகள் இவரை நசித்து, கொலுக்கழற்றி இங்கேயே ஒடுக்கிவிட்டன.

இப்போதென்று மனம் குழம்புவதற்குக் கனவு காரணம். கனவுக்குச் சிவன் கோயில் தேர்க்கொடி ஏறினது காரணமாக இருக்குமோ?

''அங்கை போய் ஆருதான் இருக்கினம். நம்மட்ட இருக்கிறதிலை வறுகுகிறதுக்கு ஆரும் ஒட்டினால் தான் உண்டு'' என்று மகள் தடுத்து விடுவாள். அவரோடு கூடப் பிறந்தவர்கள் என்று ஒருவருமில்லைத்தான். அதற் காக உறவினர்களே இல்லை என்று ஆகிவிடுமா? ஆகிவிட் டதுதான்; மக்களுக்கு; அவருக்கு?......

அவர் நினைத்தால்,போய் வருவதை எவராலும் தடுத்து விட முடியாது தான். அவ்வரும் நினைக்காது எதற்கென்று பேசாமல் இருந்து விட்டார். ஓடியாடி ஒத்துழைக்காத உடல் நிலையும் அதையே வரவேற்றது.

இப்போதென்று ஏனோ மனம் போயே வருவது என்று முடிவு செய்தது! ஊருக்குப் போவதை நினைக்கும்போதே மனம் அங்கு ஓடிக் குதூகலித்தது. பஞ்சுப்பொதி போல உடல் லேசாகி விட, எழுந்து வந்து கட்டிலில் சரிந்தார்.

நிம்மதியான உறக்கம் நீண்டு கலையும் போது காலை நெடுநேரமாகி விட்டது. கார் பேரப்பிள்ளைகளைக் கல்லூரியில் விட்டு வருகிறது. மருமகன் தனது காரில் கடைக்குப் புறப்படுகிறார்.

ரயிலில்தான் போய் வர வேண்டும். மகளிடம் தன் முடிவை வெளியிடுகிறார். அவள்கூட வழக்கம் போன்றில் லாமல் 'ம்...ம்' என்பது சிவன் கருணை தான் என்று மன துள் துதிக்கிறார்.

''காலம் பொருந்தி வரும்போது எல்லாம் இப்படித் தான்.''

சின்ன வயதில் படிப்பில் கட்டையாக இருந்தபோது தாய் பிடித்துப் புகையிலைக் கடைக்கு அனுப்பிவிட்டாள். நாற்றம் பிடிக்காமல், அதையும் குழப்பிக்கொண்டு தானா கவே பலசரக்குக் கடையில் எடுபிடியாகச் சேர்ந்த பின், ஊருக்குப் பயணம் போவதென்றால் இப்படித்தான். முருகன்

படம் ஒட்டிய சூட்கேசில் வெளுத்த உடுப்புகளை அடுக்கி வைத்து நாளுக்கொன்றாக அங்கு உடுத்தினால்தான் மதிப்பு என்பதே நினைப்பாகப் பயணம் போவார்.

பிறகு... பிறகு...

சீட்டுக்காசு, அப்படி இப்படியென்று தாய் வறுகிக் கொடுக்க, 'முதலாளி'யாகி, பிஸ்னஸ் கெட்டித்தனத்தால் பெரிய ஆளாகி இன்று இந்த நிலை சித்தித்திருக்கிறது. கடந்து வந்த பாதையில்தான் எவ்வளவு ஏற்றம்!... எத்தனை பேரை விழுத்தி, தோளில் ஏறி உறிஞ்சிக் கொழுத்த ஏற்றம்!

இப்போது வினாசித்தம்பியர் பென்னம் பெரிய சூட்கேசில் பயணச்சாமான் எல்லாம் அடுக்கி வைத்து விட்டு மாலை நேரம் வரும்வரை காத்திருக்கிறார். பேரப்பிள்ளைகள் பள்ளிக்கூடம் முடிந்து வந்து உடற்பயிற்சிக்கும் போய் வந்தாயிற்று. கார் இனி இவருக்காக......

விடைபெற்றுக்கொண்டு காரில் ஏறுகிறார்.

வினாசித்தம்பியர் கோட்டை ரயில் நிலையத்துக்கு வந்து சேர்ந்தபோது நேரம் ஆறரை சனக்கூட்டம் அலைமோதுகிறது நினைப்பாக ட்றைவரை ஏவி றம்புட்டான், மங்குஸ்தான் என்று நிரப்பிக் கொண்டார். யாருக்கென்று குறியில்லாத நிரப்பல் ட்றைவர், படிக்கும் காலத்தில் நீள, உயரப் பாய்ச்சலில் சாம்பியன். கோணர் சீற் கிடைத்தது. நிம்மதிப் பெருமூச்சு விட்டார். அதற்கு மாறான பெருமூச்சுடன் ரயில் நகர்ந்தது.

O O O

வினாசித்தம்பியர் அதிகாலைப் பொழுதில் 'சிவசிவா' என்றபடி பஸ்ஸைவிட்டு இறங்கி சொந்த ஊரில் கால் பதித்தார். சந்தியில், இறங்கியது இறங்கியபடியே நின்று

பார்வையால் துளாவுகிறார். காரைதீவுச் சுப்பிரமணியம் கடையில் இப்போது நாலைந்து பழைய சைக்கிள்களும் உதி ரிப்பாகங்களும்... கடையைப் போலவே கடையில் நிற்கின்ற 'பெடியனுக்கும்' பல்லுத் தொடக்கம் எல்லாமே காவி படிந்து......

''எனக்குத் தெரியும். இவன் சுப்பிரமணியம் கண்டது நிண்டதுகளோட தொடுசல் பட்டபோதே நினைச்சனான். கடையை இழுத்து மூடுவானெண்டு...'' மனதுள் புறுபுறுத் துக் கொள்கிறார் வினாசித்தம்பியர்.

சந்தியடியில் சைக்கிள் கடையோடு சேர்ந்து நாலைந்து கடைகள்... இவள் பொட்டைச்சி கடை குளோஸ். செல்லப் பனின் காய்ஞ்ச கடை இன்னும் அதே நிலையில்... 'இவங் களுக்கு முன்னேறத் தெரியாது.'' தன்னுள் முடிவுசெய்யும் போதே தன்னை எண்ணிப் பெருமிதம். அவிழத் துடிக்கும் வேட்டியை இழுத்துப் பிடித்தபடியே, சந்தியின் நடுவில் திருஷ்டி கழிப்பது போல் இருக்கும் பாழ்ங் கிணற்றைப் பார்க்கிறார். முன்பென்றால், இந்தக் காலை நேரத்திலேயே குறைந்தது ஏழெட்டுப் பெடியள் குந்தியிருந்து வம்பு பறைந்து கொண்டிருப்பார்கள். இப்போது ஒருவருமில்லாதது வினாசித்தம்பியருக்கு ஆச்சரியமாக இருந்தது.

'தத்துப்பிக்கு தத்துப்பிக்கு' என்று அவர் நடக்கிறார். ஒரு இளந்தாரியளும் எதிர்ப்படுவதாக இல்லை. குஞ்சு குரு மான்களைத்தான் கண்டது. தூரத்தில் வரும் மணியத் தைக் கண்டதும் ஒரு குளிர்ச்சி.

மணியம் ஊரின் சலவைத் தொழிலாளி, வயது நாற் பது இருக்குமோ? அது அப்ப... இப்ப ஐம்பது தாண்டியி ருக்கும். முன்பெல்லாம் அவர் பயணத்தால் வந்து இறங்கும் போது பெரும்பாலும் மணியம்தான் சந்தியடியில் விண் ணாணம் பார்த்துக்கொண்டு நிற்பான். வளர்ந்த பிள்ளை கள் தொழிலைப் பார்க்கின்றன. மணியத்துக்கு ஏதும் கல்யாணவீடு, சடங்குகளில்தான் வேலை. வெள்ளைகட்டு.

''டேய் மணியம்... இந்தா இதைத் தூக்கு'' என்று அவர் ஆணையிடவே தேவையில்லை. ஓடி வந்து தூக்கி விடுவான் மணியம். இப்போது அப்படித் தூக்க வராததைக் கண்டு இவர் வியப்புற்று ஆணையிடுகிறார்.

''ங்ம்'' ஒரு விறைப்பான பார்வையுடன் அவரைப் பொருட்படுத்தாமலே நடக்கிறான், மணியம்.

''என்ன மணியம் கண்டும் காணாதமாதிரி''. இவரிடம் தவிர்க்கமுடியாத குழைவு. ''பாவம் எண்டு மனிசத் தன்மையைப் பார்த்து தூக்கி உதவுவன்... ஆனால், உங்கட திமிருக்கு அடங்கி துக்கி உதவமாட்டான். ஓ...''

''என்ன புதுசா!...''

''ஓ... புதுசுதான். நான் பழைய மணியனில்லை.'' விறுக்கென்று நடக்கிறான் மணியம்.

வினாசித்தம்பியரிடம் அதிர்ச்சி. ''புதுநாணயமாக இருக்குது'' என்று புறுபுறுத்தபடி காலை எட்டி வைக்கிறார். இப்போதென்று சூட்கேஸ் அதிகமான பாரமாகத் தோன்றி அவரை வருத்துகிறது.

நடக்கிறார்.

மணியத்தின் குடிசை இருந்த இடத்தில் இப்போது பெரிய வீடு எழும்பி இருக்கிறது.

''என்னத்தைக் கட்டி என்ன. எளியன்சாதி''. முகம் கோணுகிறார். மணியம் குடும்பத்தின் முன்னேற்றத்தைச் சகிக்க முடியாமல் சாதியில் பழிபோடுகிறார். மணியத்துக்கு இந்த எழுப்பம் எப்படி சித்தித்தது, என்று எண்ணி எண்ணி பிடிபடாமற் போக எரிச்சலோடு நடக்கிறார்.

எதிராக விழுந்தடித்து வருவது அருளம்மா சுற்றி வளைத்து அவருக்குச் சொந்தம்தான். அதை வினாசித்தம்பி எப்போதும் பொருட்படுத்தியவரல்ல. உண்மையில் சொந்தம் செத்தது மாதிரித்தான்.

அருளம்மாவின் கையிலே ஓர் அலுமினியப் பாத்திரம், வாழை இலையால் மூடி மறைத்து...

அறியும் ஆசை பிடரிபிடித்து உந்துகிறது.

''என்ன அருளம்மா அவதி பறதியோட...''

''மணியத்தாற்ற மருமகள் பிள்ளைப் பெத்துக்கிடக்கு. அது தான் கூடமா...''

''என்ன!...'' இவரிடம் பாம்பை மிதித்த அதிர்ச்சி.

''என்ர மகனும் மணியத்தின்ர மகனும் ஒண்டாகத்தான் வேலை செய்கிறாங்கள் ஜெர்மனியிலை... மகன் பார்த்து உதவச் சொல்லி எழுதினவன். அதுதான்...''

''அதுதானே'' ஒரு இழுப்பு இவரிடம்.

''அதிலை என்னண்ணை ஒண்டுக்குள்ள ஒண்டு...'' அருளம்மாவுக்கு நின்று கதைக்க நேரமில்லை. விடுவிடென்று நடந்தாள்.

''அது சரி எளியதுகளுக்கு எளிய புத்தி ... தூ!''

வினாசித்தம்பியர் நாலு எட்டுத்தான் வைத்திருப்பார் திருப்பத்தில் அருளம்மா வீடு... பளபளவென்று.

''சுத்துமதில்...கல்வீடு...இவளவைக்கு வந்த எழுப்பம்.''

மனம் குமுற நடக்கிறார். ஊரில் ஒரு பெடியளும் இன்னும் எதிர்ப்படவில்லை. யார் எதிர்ப்படா விட்டாலும், தான் தவறிவிடாத செல்வரத்தினத்தைக்கூட இன்னமும் காணாததால் எரிச்சல் சிக்காராக அவரை உலுப்பியது. கழித்து விடப்பட்ட பழைய தேர்போல் நடக்கிறார்.

சபாபதி வீட்டுக் கோடியில் காகங்கள் மொய்த்துப் பறக்கின்றன. மீன் நோண்டுகிறான் போல என்று நினைத்தபடி வேலி நீக்கலால் கண்பதிக்கிறார்.

''எட முழுக்கோழி!...''

''தின்னிமாடன்; எப்பவும் இப்படித்தான்'' என்று கறுவும்போது பழைய நினைவுகள் தடம் போடுகின்றன.

வினாசித்தம்பியர் கொழும்புக் கடையிலே வேலைசெய்த போது ஊருக்குப் பயணம் வந்தால் தாய் தவறமாட்டாள். ஒரு தடவை என்றாலும் கோழி இறைச்சி போட்டுத்தான் அனுப்புவாள். முதலாளியாகிய பிறகு நாலைந்தாகி... அவர் கொழும்பே சுதியாகிய பிறகு நினைத்த நேரமெல்லாம் கோழியாகிவிட்டது. அவரது ஆரம்பக்காலத்துப் பயணம் போல் சபாபதியின் மகனும் வந்திருப்பானோ? ''கொழும்புப் பக்கம்தான் கடைசியில் நிண்டதாகக் கேள்வி.

''ம்...'' ஒரு செருமல்.

நிமிர்ந்த சபாபதி கண்டுவிட்டார்

''ஓ... நீங்களா?'' கையில் படிந்திருந்த இரத்தக் கறையைத் துடைக்காமலே வீதிக்கு வருகிறார். வந்தவர் சூட்கேஸை தான் கொண்டுவந்து தருவதாகக் கூறாததும், வீட்டுக்கு அழைக்காததும் இவருக்கு மனவருத்தமளித்தன. வெடுக்கு மனத்துடன்தான் சாபாபதியும் முகம் காட்டினார்.

''மகன் கொழும்பாலை வந்து நிற்கிறான் போல ''

''கொழும்பிலை இல்லை. அவர் இப்ப ஜேர்மனியிலை''

''ஜேர்மனியோ!'' ஓ என்று புதுமா திரிஇழுப்பு வினாசித்தம்பியரிடம்.

''ஓம்... மாசம் பத்தாயிரம் பதினையாயிரம் எண்டு அள்ளிக் குடுக்கிறாங்கள்... கொழும்பிலை பிச்சைக்காசுக்கு மினக்கெட ஏலுமே'' என்று திரும்புகிறார் சபாபதி,

நெருப்புக் கோலால் சூடு விழுந்தது போலாகிவிட்டது, 'கொழும்பிலை பிச்சைக்காசு' என்றது.

''ஈரச்சாக்கும் கையுமாத் திரிஞ்சு கள்ளக்கோழி பிடிச்சு ஒழிச்சு மறைச்சுத் திண்ட சபாபதியன்ர நடப்பை... ம் காலம் கெட்டுப் போச்சு!''

முணுமுணுத்தபடியே சில நிமிடம் நடக்க, வயற்பகுதி. ஏழெட்டு வயல்களை வரம்பால் கடந்துமிதப்பது அவரது வீட்டுக்குக் குறுக்கு வழி... அதுதான் அவருக்குப் பிடிக்கும்.

சூட்கேசைக் கீழே வைத்து விட்டு பதனமாக வேட்டியை மடித்துக்கட்டி மீண்டும் குறி பலவாகிய நாலு திட்டல் களோடு சூட்கேசைத் தூக்கிக் காவுகிறார்.

வயல் நடுவே சிவன்கோவில். முன்னைவிட இன்னும் தூர்ந்து போயிருக்கிறது. அதைப்பற்றி யாருமே அக்கறைப் படாதது வெளிப்படையாகப் புலப்பட, அருகிலிருந்த கிணற்றுக்கட்டில் அமர்கிறார். பக்கத்துத் தரவையில் நாலைந்து மெலிந்த மாடுகள் மேய்ந்துகொண்டிருக்கின்றன. சிவகாமிக்கிழவி தலையில் கடகம் சுமந்து எரு அள்ளிக் கொண்டு வருகிறாள். காலம் எவ்வளவு கடத்தாலும் அவ ளிடம் முதுமையைத் தவிர வேறு மாற்றமில்லை. தான் மட்டும் தவித்துப்போய் நிற்பது வினாசித்தம்பியருக்கு என்னவோபோல் இருந்தது.

''சிவ சிவா'' என்றபடி இவர் புறப்பட எழுந்தபோது கோயிலடியில் அவதாரமெடுப்பது?... வல்லிபுரம்.

''என்ன வல்லி... திருவிழாவும் கிட்டுது.''

கண்டதும் காணாததுமாக ''ஐயா வாங்க'' என்று பரபரப்பவன் எதுவுமில்லாது ''ஓமோம். இந்தா... இப்பிடிக் கிடக்கிறதுக்கென்ன. இருந்தாப்போல திருவிழா தொடங்கக் கலகலப்பாகிப் போகும் ... ம் ... நீங்களும் ஊரை மறந்து போனாப்போல...'' என்கிறான்.

''ம்...வல்லி... இந்தமுறை பத்துத் திருவிழாவுக்கும் நிண்டுதான் போவன்... முந்தினமாதிரி ஒரு திருவிழாவை நானே...,'

''எல்லாத் திருவிழாவையும் ஊரிலை ஒரொருத்தர் பிடிச்சிட்டினம்...'' ''பிடிச்சிட்டினமோ! பிச்சைப்பெட்டியள். நான், அவன் துரைச்சாமி செற் மேளத்தையும் பிடிச்சு...''

வல்லிபுரம் விழுந்து விழுந்து சிரிக்கிறார். என்னடா இது என்பதுபோல் பார்த்து வியக்கிறார் வினாசித்தம்பியர்.

''துரைச்சாமி எந்த மூலைக்கு? இப்ப தட்சணாமூர்த்தி மாதிரி பெரிய பெரிய செற்றெல்லாம் பிடிக்க ஊரிலை ஆட்களட்ட காசிருக்குது.''

''மெய்யே...'' இவரிடம் பதறல். ''என்ர ஆறாந் திருவிழாவை ஆர் செய்யிறது?''

''இவள் மனோன்மணி... ஆறன்ர பேத்தி''.

''என்ன!!''

அதிர்ச்சியிலும் அதிர்ச்சி வினாசித்தம்பியரிடம்! ''சாப்பிட வழியத்துப் பனங்காய் சூப்பிக்கொண்டு திரிச்சவளவையா''

ஒரு கணமும் நிற்க மனமில்லாமல் வெடுக்கென்று நடக்கிறார், சிவன் கோயில் திருவிழாவுக்கு நின்றுவிட்டுப் போகத் தான் வந்தவர். இப்போது அதற்கு நிற்காமலே போக வேண்டும் என்ற உறுதியான முடிவுடன்...

வீட்டுக்கு வந்தார்.

வீடு வீடாக இல்லை. உடைத்து உருவழிந்து பேய் குடியிருப்பதுபோல்... அடி வயிற்றைக் கலக்கும் கோபம், இவ்வளவு காலமும் 'என்ரை வீட்டிலை ஆரையும் குடி இருத்திறதோ' என்று உறவினர்களையோ வாடகைக்கு யாரையுமோ இருத்தாததன் பலனாக கண்முன்னே வீடு காடாகிக் கிடந்தது.

அந்தக் காலம்......

''ஐயா, ஐயா'' என்று தலைசாய்க்கும் ஊர், அவருக்குச் சேவகம் செய்யும் ஊர். அதைக் காணாமல் அவர் தவித்தார்.

ஊரைவிடப் பத்து வருடங்கள் பின்தங்கி நின்றார் வினாசித்தம்பியர்! ஒரே பாய்ச்சலில் அவரால் பாய்ந்துவிட முடியவில்லை. அவர் பாய விரும்பவும் இல்லை.

மத்தியான ரயிலைப் பிடித்துக் கொழும்பு திரும்பிவிடுவதற்காக அவர் அவசர அவசரமாக...

''என்ர பிணம் கூட ஊருக்கு வரப்படாது. ஓமோம்''

வாய் முணுமுணுக்கிறது. □

*சிரித்திரன், 1982*

# வடகோவை வரதராஜன்

விவசாயத்தில் டிப்ளோமாப் பட்டம் பெற்றவரான வடகோவை வரதராஜன் எழுபதுகளின் நடுப்பகுதியிலிருந்து எழுதிவருபவர். இவரது சிறுகதைகள் ஈழத்து முன்னணிப் பத்திரிகைகளிலும் தீபம், கணையாழி முதலிய இந்தியச் சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன,

வரதராஜன் சிறுகதைகளுக்காகப் பல பரிசுகளைப் பெற்றுக்கொண்டவர். வீரகேசரி 50ஆம் ஆண்டு நிறைவுச் சிறுகதைப் போட்டியில் இவருடைய 'வெளிறிகள்' மூன்றாம் பரிசைப் பெற்றது. சிரித்திரன் நடத்திய சிறுகதைப் போட்டியில் 'நாளை வரும் திருநாள்' என்னும் சிறுகதைக்கு முதற்பரிசு கிடைத்தது. இங்கு பிரசுரமாகியுள்ள கதை சிரித்திரனின் பாரதி நூற்றாண்டு சிறுகதைப்போட்டியில் முதலாம் பரிசு பெற்றதாகும்.

சிறுகதைத் துறையில் மாத்திரமன்றி கவிதை, விஞ்ஞானக் கட்டுரைகள் ஆகிய துறைகளிலும் வரதராஜன் தமது முத்திரையைப் பதித்துள்ளார்,

இவருடைய விஞ்ஞானக்கட்டுரைகள் பல வீரகேசரியில் பிரசுரமாகியுள்ளன.

வாழ்க்கை பற்றி நாம் வரித்துள்ள சில வறட்டுக் கோட்பாடுகளும் செப்பமுறாத சில சிந்தனைகளும் எங்கள் மண்ணிலே மனித வாழ்வை ஒரு சுமையாக மாற்றியிருக்கின்றன. இந்தச் சுமையின் பெரிய பங்காளிகள் நமது பெண்கள். சுமையைத் தாங்க முடியாமையினால் அவர்களது உள்ளத்திலே எழுகின்ற குமுறலும் ஊமை அழுகையும்...... அவை நம்முள்ளே பலர் காண மறுக்கின்ற நிதர்சனங்கள்! ஆனால் அவற்றைக் காணுகின்றவர்களுக்கோ நெஞ்சிலே மிஞ்சுவது வெறுப்பு! விரக்தி! சீற்றம்! நிலவுதான் எப்படிக் குளிர்மை தரும்!

# நிலவு குளிர்ச்சியாக இல்லை

இலண்டன் மாநகரத்தில் அமைதியான 'தேம்ஸ்' நதியில் பௌர்ணமி காலத்தில் படகுச் சவாரி விட்டிருக்கிறேன். வாஷிங்ரனில் 'பொடோமோ' நதிக்கரையில் பூத்துக்குலுங்கும் 'செர்ரி' மரங்களுக்கிடையில் சில்வர் நைற் கவிதை படித்துக்கொண்டு நடந்திருக்கிறேன்.

ஆனாலும், அங்கெல்லாம் என்மனம் வெறுமையுற்று ஏங்கிக் கொண்டேயிருக்கும். 'தேம்ஸ்' நதியில் படகுச்சவாரி விடும் போதெல்லாம் இங்கே கோப்பாய்க் கடற்கரை கைதடிப் பாலத்தில் நான், பாலன், குவி, ஜோக்கர் எல்லோரும் வரிசையாய் இருந்து கொண்டு, மினுக்கிவிட்ட தங்கத் தாம்பாளம் போல் கடல்நீரில் பிரதிபலிக்கும் சந்திர பிம்பத்தைப் பார்த்து,

சிந்து நதியின்மிசை நிலவினிலே
சேரநன் னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து
தோணிகள் ஓட்டிவிளை யாடி வருவோம்.

என்ற பாடலைப் பாடி மகிழ்ந்து மெய்ம்மறந்திருந்த நினைவுகள் என் நெஞ்சத்தில் இனிய உணர்வுகளை உதிர்த்து விடும்.

இங்கே வெறும் பாலக்கட்டில் - குறுணிக் கல்லுகள் குண்டிச் சதையை உறுத்துகிற பாலக்கட்டில் இருந்து கொண்டு நிஜமான கடலைப் பார்த்து அதை நதி எனப் பாவனைபணணி, அந்த நதியிலே ஓடம் விடுவதாக அதீத கற்பனை பண்ணி மகிழ்ந்த சுகம், அந்த அனுபவத்தை நிஜ மான அனுபவமாக - நிலவொளியில் குளித்து உருக்கிவிட்ட வெள்ளி ஆறுக ஓடுகிற தேம்ஸ் நதியில் சேர நன்னாட்டிளம் பெண்கள் இல்லாவிட்டாலும் அழகான ரோஜாப்பூவைப் போல மலர்ந்து சிரிக்கின்ற எனது இங்கிலாந்துத் தோழி ஜேனுடன் படகுச்சவாரிசெய்த போது உண்டாகவில்லையே!

ஏனோ இப்படியான இயற்கைக் காட்சிகளைக் காணுகிற வேளைகளில்தான் எனது மனதில் கோப்பாய்க் கடற்கரை யும், தாமரைக் குளமும், பனஞ்சோலைகளும், சம்பைப்புல் வெளியும் தோன்றி என் ஏக்கத்தைக் கிளறிவிடும். ஏக்கங் கள் கிளறுப்படுகையில், என் அடிமனத்தில் கனன்றுகொண் டிருக்கும் நாட்டுப்பற்றின்மேல் படிந்திருக்கும் சாம்பல் விலக விலக, அந்த அடிமனதின் கனல் மிகச் செம்மை யாகவே கனன்று என்னை ஏங்கவைக்கும்.

அந்த ஏக்கக் கனலின் தகிப்பில் எங்கே நான் உருகிப் போய்விடுவேனோ என்ற அச்சத்தில் இருபது நாட்கள் 'விடுப்பு' எடுத்துக்கொண்டு தாயகம் திரும்பினேன்.

விமானம் இலங்கையை நெருங்க நெருங்க, என் மனதில் பொங்கிப் பிரவாகித்த உணர்வுகளையும்; என்னில் ஏற்பட்ட

கிளர்வுகளையும் விபரிப்பதற்கு எனக்கு மொழியறிவு போதாமல் இருப்பதையிட்டு நான் மிகவும் வருந்துகிறேன்.

ஆனால், ஒன்றை மட்டும் குறிப்பிடுவேன்; இவ்வுணர்வு களை எவ்வளவுதான் முயன்றாலும் வார்த்தைகளால் உணர்த்த முடியாது; உணர்ந்தாலேயே புரிந்து கொள்ள முடியும்.

யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தில் இறங்கியதும் சப்பாத்துக்களை உதறி எறிந்துவிட்டு, எனது மண்ணிலே— நான் பிறந்து, புழுதி அளைந்து மணல்வீடுகட்டி விளையாடி வளர்ந்த மண்ணிலே — வெறும் பாதம் பதித்து இந்த ஏழு வருடப் பிரிவில் இந்த மண்ணிற்கும் எனக்கும் விட்டுப் போன உறவுகளைப் புதுப்பிக்க வேண்டுமென்ற ஓர் குறு குறுப்பு! ஓர்வெறி!

சீ... சீ... கௌரவம் என்ற போர்வையில் எமது உள் ளத்து உணர்ச்சிகளுக்கு நாம் எவ்வளவு கட்டாயத் தடை போட வேண்டியுள்ளது!

ராக்சியால் இறங்கியதும் சப்பாத்தையும் சொக்சையும் கழற்றி எறிந்துவிட்டு வெறும் காலுடன் குறுகுறுக்கும் அந்த மண்ணில் வெறும் பாதம் பதித்து நடந்தேன்.

ஓ! ... எவ்வளவு தாபத்துடன் அந்த மண் என் கால் களை அளைந்து முத்தமிடுகிறது! இந்த மண்ணிற்கும் எனக் கும் எத்தனை வருடப் பிரிவு!...

ஐந்து வருடங்கள் !

வீட்டில் அம்மாவின் ''நிறத்திருக்கிறாயே ஒழிய நல் லாய் மெலிஞ்சு போனாய். ஏன் உந்தத் தலைமயிரை உப் பிடி வளர்த்திருக்கிறாய்...'' என்ற மதிப்பீடு. தங்கையின் ''எங்கடை மார்கழிக் குளிரைவிட அங்கை கனக்கக் குளிரோ'' என்ற அப்பாவித்தனமான கேள்விகள்!

ஆச்சி இந்த ஐந்து வருட காலத்தில் இறந்தவர்கள் பெயர்களைப் பட்டியல் போட்டா. இடையிடையே அப்பனே முருகா 'என்னை எப்பதான் நீ கூப்பிடப் போறியோ' என்று பிதற்றிக் கொண்டா.

என்னைச் சுற்றி நிறையக் குழந்தைகள்; எனது ஐந்து வருடப்பிரிவில் உருப்பெற்ற அவதாரங்கள்.

தங்கை, ''இது கமலா அக்காவின் கடைசி வினோதினி; இது கார்த்திக் அண்ணற்ற மகன் சுகந்தன்'' என்று அறிமுகஞ்செய்துவைத்தாள்.

இவற்றில் எல்லாம் என் மனம் பதியவே இல்லை. நான் நட்ட தென்னங் கன்றுகள்; முற்றத்தில் ஏழு விதமான நிறங்களில் நான் ஒட்டிய செவ்வரத்தை; நான் வளர்த்த பசுக்கன்று. நந்தினி... இவற்றைப் பார்க்கவே என் மனம் அவாவியது.

மெதுவாக அவ்விடத்தால் கழன்று வளவைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டேன்.

வளவில் அதிக மாற்றம் ஒன்றும் தெரியவில்லை கோடியில் நின்ற புளிமா மரம் தறிக்கப்பட்டு அவ்விடத்தில் ஓர் கறுத்தக் கொழும்பான் மாமரம் நடப்பட்டுள்ளது. புதிதாக ஒரு குறுக்குவேலி எழுந்துள்ளது. ஓ... ! தங்கச்சி பெரியவளாகி விட்டாள் அல்லவா! என்ன இருந்தாலும் அப்பா இதில் எல்லாம் வலுசமர்த்தர்.

பனையோலைக் குடிலில் நின்று குரக்கன் ஒட்டுத் தின்று கொண்டிருந்த நந்தினி என்னை இந்த ஐந்து வருடகாலப் பிரிவின் பின்னரும் அடையாளம் கண்டு செல்லமாகக் கத்தியது.

ஓ! என்ன மாதிரி வளர்ந்து விட்டது இந்த நந்தினி. விம்மிப்புடைத்த மடியின் முலைக்காம்புகளை ஒரு சிவப்பு நிறக் கன்றுக்குட்டி, ஒலி எழும்பச் சப்பிக் கொண்டிருந்தது.

அதன் வாயெல்லாம் நுரைக் கொப்புளங்கள்; மகிழ்ச்சியின் அடையாளமாக அதன் கூழையான வால் இடப்புறமும் வலப்புறமுமாக அசைந்துகொண்டிருந்தது.

அம்மா சொன்னாள்: இது மூன்றாவது கன்றாம். நான் இலண்டனுக்குப் போகும்போது இந்த நந்தினி ஊட்டு மாறாத பச்சிளம் கன்று. காலம் எவ்வளவு விரை வாய்க் கடந்துவிட்டது!

அம்மா எனக்கு வைத்த கப்பல் வாழைப் பழங்கள் இரண்டை எடுத்து நந்தினியிடம் நீட்டினேன். ஆவலோடு சுவைத்து மகிழ்ந்தாள்.

நான் நட்ட தென்னம்பிள்ளைகள் எல்லாம் பருவப் பெண்களாகி, இளமை திமிறி முறுக, சுமக்க முடியாத குலைகளுடன் காற்றில் தம் ஓலைகளை அசைத்து என்னை வரவேற்றன. முற்றத்தில் ஒரு செவ்வரத்தை மரத்தில் நான் ஒட்டிய ஏழு இனச் செவ்வரத்தையும் ஒவ்வொரு கொப்பும் ஒவ்வொரு வர்ணமாகப் பூத்து, ஓர் மலர்க் கதம்பமாகக் காட்சி அளித்தது.

''இதிலைதான் தம்பி மாமி ஒவ்வொரு நாளும் கோயிலுக்குப் பூ ஆயிறவ.'' அம்மா பெருமையுடன் சொன்னா.

இந்த இருபது நாள் விடுப்பில் 8 நாட்கள் எவ்வளவு வேகமாகப் போய்விட்டன என்று எனக்கே ஆச்சரியமாக இருந்தது.

இந்த எட்டு நாட்களிலும்; இந்த ஐந்து வருடங்களும் நான் விட்டுப் பிரிந்திருந்த ஒவ்வோர் சதுர அடி மண்ணை யும் ஆவலோடு தரிசித்து, என் உறவுகளைப் புதுப்பித்துக் கொள்ள முயன்றேன்.

இன்னமும் 12 நாட்களில் நான் இலண்டனில் நிற்க வேண்டும் என்ற நினைப்பு கசப்பைச் சுமந்து என் முகத் தைச் சுண்டச் செய்தது.

இந்த அழகான — அமைதியான கிராமத்தை விட்டு விட்டு எந்நேரமும் சத்தமும் இரைச்சலும் பெற்றோல் புகையும் நிறைந்த இலண்டன் மாநகரில் போயிருப்பதென்றால்...!

ஏதோ தவறவிட்டதை எடுக்கப் போவதைப் போல் விரையும் இலண்டன் வாசிகளையும் அவர்களின் சம்பிரதாய பூர்வமான 'குட் மோனிங்' 'குட் ஈவினிங்'குகளையும், அந்த நகரின் இயந்திரமயமான வாழ்வையும் நினைத்து நான் வெப்பியாரப்பட்டேன்.

ஓ...! இறைவன் எவ்வளவு இனியவன்! இந்த அமைதியான, ஆர்ப்பாட்டமில்லாத, போலிகளற்ற கிராமத்தில் என்னைப் பிறக்கச் செய்தானே!

இருபது நாள் விடுப்பை 50 நாட்களாகத் தள்ளிப் போட்டால் என்ன என்ற எண்ணம் தோன்றியது.

இருபது நாட்களில் திரும்புவது என்று முன்கூட்டியே மீள் பயண ரிக்கற் எடுத்துவிட்டேன். அது கொஞ்சம் இலாபகரமானது. அதை இரத்துச் செய்தால் சில பவுண்கள் நஷ்டம் போகும்! போனால் போகட்டும்; இந்த மண் தரும் மனநிறைவை, பரிமளிப்பை, சுகந்தத்தை கேவலம் இந்தப் பவுணுடனும், டொலருடனும் ஒப்பிடுவதா?

நாளை மறு நாள் கொழும்பு சென்று பயணச் சீட்டை இரத்துச்செய்து இல்ண்டனுக்கு ஒரு கேபிள் கொடுத்தால் போகிறது.

அன்று மத்தியானம் பிள்ளையார் கோவில் கேணியில் முழுகிக் கொண்டிருந்தேன். தண்ணீரில் மூழ்கி மூழ்கி எழுகிறபோது உண்டாகிய சுகம் இருக்கிறதே, அதற்கு ஈடாக அதையேதான் என்னால் சிபார்சிக்க முடியும்.

இந்தக் கேணியில் ஒல்லித் தேங்காய் கட்டி நீந்தப் பழகியது முதல் பரமேஸ், பாலன், கோபால் ஒவ்வொருவரும்

ஒவ்வொருவரை அமுக்கி விளையாடியது வரை சகல நிகழ்வுகளும் என் நெஞ்சில் முகிழ்ந்தவண்ணம் இருந்தன.

இந்த நண்பர் குழாத்தில் இப்போது பரமேஸ் இல்லை. வாலிபத்தின் வாசற்படியில், அவன் உயிர் துப்பாக்கியால் அநியாயமாகப் பறிக்கப்பட்டுவிட்டது.

சேவை மனப்பாங்கும் சுறுசுறுப்பும் உள்ள எவ்வளவு இனிய நண்பன் அவன்! யாழ். பொதுசன நூலகம் எரிக்கப் பட்டு அடுத்த நாள் நிகழ்ந்த அவனின் அநியாயச் சாவு ஓர் ஆவேசமான மனக்கிளர்ச்சியை என்னுள் உண்டுபண் ணியது.

காலனே நானுன்னைக் கட்டப் போறேன்!
ஓலமிடும் பெருங்காற்றே உன்னை ஒடுக்கப் போறேன்!
சாலமிடும் தீயே உன்னை அணைக்கப் போறேன்!
மேலுலகின் நண்பா, உன்னை எங்கே காண்பேன்?

யாரோ ஒரு பெண் கையில் தேங்காயுடன் கால்கழுவ வந்தாள்; அவள் என்னைக் கண்டு கூச்சப்படக் கூடாது என்ற நினைப்பில் கேணியின் அக்கரைக்கு நீந்திச் சென்றேன். கேணியில் இறங்கிய பெண் ஒரு கணம் என்னை நிமிர்ந்து பார்த்தாள். ''வ... ரதன்!'' ஆச்சரியத்தில் கண்கள் அகல விரிய, இது நிஜமா என்ற பிரமையில் ஆழ்ந்து, சுட்டுவிரலை உதட்டில் பதித்து முணு முணுத்தாள்.

கௌரி அக்கா!!!

''அக்...கா!'' — நானும் திகைத்து வார்த்தைகளைக் குழற்றினேன்.

''எப்ப வந்தனீர்'' — கௌரி அக்கா.
''வந்து எட்டு நாளாய்ப் போச்சு.''
''இவ்வளவு நாளும் எனக்குத் தெரியாமல் போச்சே''.
''எப்பிடி அக்கா; சுகமாய் இருக்கிறியளே?''

திடீர் என அக்காவின் முகத்தில் மழை மேகங்கள் குவிந்தன! ''ம்...சுகத்திற்கு என்ன குறைச்சல்'' சொற்கள் கைப்புடன் தெறித்து விழ, நீண்ட பெருமூச்சொன்று அனலாய்க் கிழம்பி வளிமண்டலத்தைச் சூடாக்கியது.

நான் கௌரி அக்காவை ஆழமாக ஊடுருவினேன். முன்பு என்ன மாதிரி நீர்ப்பிடிப்பான பிஞ்சுக் கத்தரிக்காய் போன்று தளதள என்றிருந்த அக்கா, இப்ப மிளகாய்ப் பழம் சுருங்குமாப் போல் சுருங்கி விட்டாவே!

தலையின் முன்னுச்சியில் சில நரைமயிர்கள் இரகசியம் பேசின. கண்களின் கீழ் அடர்ந்த கருவளையம்!

முன்பு தக்காளிப் பழம் போல் தளதள என்று அழகு காட்டிய கன்னச் சதைகள் இப்போது சற்று ஒட்டிப்போயிருந்தன.

''இனி எப்ப போறீர்?'' கௌரி அக்கா விழிப்பு வந்தவராகக் கேட்டா.

''இருவது நாள் லீவிலை வந்தனான்; இனி ஐம்பது நாள் ஆக்குவம் எண்டு யோசிக்கிறன்.''

''சும்மா வந்தனீரோ, இல்லை ஏதேனும் அலுவலோ?''

''இல்லைச் சும்மாதான்.''

''நான் ஏதேனும் கலியாணமோ எண்டு நினைச்சன்'' குறும்பாகக் கண்ணை வெட்டிச் சிரித்தா அக்கா, அப்போதுதான் விழிப்புற்றவனாக அக்காவின் கழுத்தைப் பார்த்தேன்.

வெறுமை!!

கௌரிஅக்கா இன்னமும் கலியாணம் செய்யவில்லையா? அல்லது கலியாணம் செய்து வாழ்விழந்து விட்டாவா?

மனத்தில் எழுந்த சிந்தனை என் முகத்தில் தேங்கியது.

''எப்பிடியக்கா; மார்க்கண்டம்மான் சுகமாய் இருக்கிறாரே?''

''ம்... அவருக்கென்ன... குத்துக் கல்லுப் போலே இருக்கிறார்.''

ஏன் இந்தக் கைத்த கதைகள்! கௌரியக்கா ஏன் இப்படி மாறிப் போய்விட்டாள்?

''ஏனக்கா ஒரு மாதிரியாய் இருக்கிறியள்? ஏதேனும் சுகமில்லாமல் இருந்தனீங்களே? முகமெல்லாம் காய்ஞ்சு போய்க்கிடக்கு.''

''சுகமில்லையோ? எப்ப சுகமாய் இருந்தனான்? எந்த நாளும் வருத்தம் தான்!''

''அப்பிடி என்ன வருத்தமக்கா?''

கௌரி அக்கா சிரித்தாள்: கைப்பு துண்டு துண்டாகத் தெறித்து விழுந்தது.

''நான் சும்மா பகிடிக்குச் சொன்னனான்; நீர் கனநேரம் தண்ணீக்கை நிக்காதையும். பழக்கமில்லாதது. சூட்டைக் கிளப்பி விட்டிடும் லண்டனுக்குப் போறத்துக்கிடேலை நேரமுள்ள நேரம் வீட்டை வாருமன். நாங்கள் ஆறு வரியமாய் ஒண்டாய் பள்ளிக்கூடத்திற்குப் போய் வந்தனாங்களெல்லே! ஐஞ்சு வரியத்துக்குப் பிறகு வந்திருக்கிறீர்; எங்கட வீட்டை ஒரு கோப்பித் தண்ணியாவது குடிக்க வேண்டாமே!''

''கட்டாயம் வாறனக்கா.''

கௌரி அக்காவின் தோற்றமும் கதைகளும் என்னை மிகவும் பாதித்தன. பள்ளி நாட்களில் அக்கா மிகவும் அழகானவ. சிறு வயது தொடங்கி அக்கா பள்ளிப் பருவத்தை முடித்துச் சர்வகலாசாலைக்குப் போகும் வரையிலும் நானும் அக்காவும் சோடியாகவே பாடசாலைக்குச் செல்வோம்.

அந்த நாட்களில் அழகின் சொரூபமான அக்காவின் பக்கத்தில் நடந்து செல்வதில் எனக்கு மிகவும் பெருமை. பல கண்கள் பொறாமையுடன் என்னைப் பார்க்கும்; அக்கா போகும் வழியெல்லாம் கேலியும் கிண்டலுமாக மலர்ச்சி பொங்கிச் சிரிக்கும்.

அந்த அக்கா எப்படி மாறிப் போனா!

அன்று பின்னேரமே அக்காவின் வீட்டிற்குச் சென்றேன். வீடு நிசப்தமாக இருந்தது. கௌரி அக்கா, விறாந்தையில் கதிரை ஒன்றில் அமர்ந்தபடி சூனியத்தை வெறித்துக்கொண்டிருந்தா.

என்னைக் கண்டதும் ''ஓ, வரதனே! வாரும் வாரும்... அண் எக்ஸ்பெக்ரற் விசிற். இன்றைக்கே வருவீர் என்று நான் எதிர்பாக்கேல்லை'' என்று உற்சாகமாக வரவேற்றா.

''எங்கை வீட்டிலை ஒருத்தரையும் காணேல்லை.''

''அம்மா ஆடவுக்க வளவுக்குப் போட்டா. வசந்தனும் ரஞ்சியும் ரியூசனுக்குப் போட்டினம்.

''எங்கை மார்க்கண்டம்மானைக் காணேல்லை.''

''எங்கை போறது; உங்கினை மணியத்தின்ரை வீட்டை போய்,வாத்துக் கட்டிப்போட்டு, மடத்திலை ஊர்வம்பளந்து கொண்டிருப்பார்.

தந்தை என்றதும் இவவின் முகத்தில் ஏன் இவ்வளவு அஷ்ட கோணமாகிறது! அக்காவின் அடி மனதைத் துருவி ஆராயும் குறியாகவே நான் இருந்தேன். எனது விஜயத்தின் காரணமும் அதுதானே!

''இப்ப எங்கை படிப்பிக்கிறியள்'' என்பதிலே தொடங்கி மெதுமெதுவாக விடயத்திற்கு வந்தேன். ''அக்கா நான் ஒண்டு கேப்பன்; கோவிக்கப்படாது.''

''கோவிக்காததைக் கேட்டால் நான் ஏன் கோவிக்கிறன்.''

அக்கா எச்சரிக்கை அடைந்து விட்டாவோ? நான் தயங்கி நின்றேன்.

''வரதன் உமக்கும் எனக்கும் என்ன ஒழிப்பு மறைப்பு; உமக்கும் எனக்கும் ஆக மூண்டு வயதுதானே வித்தியாசம். வயது வந்த பிறகும் நாங்கள் ஒரே குடையுக்கை தானே பள்ளிக்கூடம் போய் வந்தனாங்கள்... அப்படி நீர் கேட்க நான் ஏன் கோவிக்கப்போறன், பயப்படாமல் கேளும்.''

''பெரிசாய் ஒண்டும் கேக்கேலை; நீங்கள் ஏன்...''

''பேந்தேன் நிப்பாட்டிப் போட்டீர்? கேளுமன்.''

நான் தொடர்ந்தும் தயங்கி நின்றேன்.

''ஃபீல் ஃபிறீ அன்ட் ஆஸ்க் வரதன்.''

கேட்கத் துணிந்துவிட்ட கேள்விக்கு எப்படி வார்த்தை வடிவம் கொடுத்து வெளிக் கொணர்வது என்று தெரியாமல் தயங்கி விழித்தேன்.

''என்ன யோசிக்கிறீர் வரதன்; நான் ஏன் இன்னும் கலியாணம் செய்யேல்லை எண்டுதானே கேக்கப் போறீர்; உப்பிடி எத்தினை பேர் என்னைக் கேட்டிட்டினம். அத்தனை பேரோடையும் நான் கோவிச்சிருந்தால் இப்ப கதைக்கிற துக்குக் கூட எனக்கொரு ஆள் கிடையாது போயிருக்கும்.''

ஓ!... அக்கா பிலோசபியும் ஒரு பாடமாய்ப் படித்தவ அல்லவா?

''ஏன், மரி பண்ணிறேலை எண்டு ஏதாவது லட்சியமே?''

''லட்சியமோ... நான் ஒண்டு கேக்கிறன். நீர் மறுமொழி சொல்லும் வரதன். கலியாணம் செய்யிறதே லட்சியம் எண்டிருந்த எத்தினை பெம்பிளையள் இப்ப கலியாணம் செய் திட்டினம்?''

அக்காவுடன் பிலோசபி கதைக்க என்னால் முடியாது. அக்கா சூனியத்தை வெறித்தபடி இருந்தா. அவவின் கண்

கள் சாதுவாகக் கலங்கி இருந்தன. நான் மிகவும் குழம்பிப் போய் இருந்தேன்.

''அக்கா; நான் சீரியசாய் கதைக்கிறன். நீங்கள் பிலோசபி கதைச்சுக் கொண்டு...''

''பிலோசபி...? யூ மீன் தத்துவம்? யேஸ்! வயது போகப் போகத்தானே தத்துவம் பிறக்கும். எனக்கும் இப்ப வயது போகுதெல்லே. ஒரு பெம்பிளைக்குச் சராசரி வயது அறுபது எண்டு பாத்தாலும் அதிலை பாதிக்கு மேலை எனக்குப் போயிட்டுது. தத்துவம் பிறக்கிற பருவம்தானே இது!''

''ஏன் அக்கா, மார்க்கண்டம்மான் நல்ல சம்மந்தமாய் ஒண்டும் பார்க்கேல்லையே?''

அக்காவின் முகம் திடீர் எனச் சிவந்து உதடுகள் துடித்தன.

''வரதன். இதுவரை எள்ரை மனம் திறந்து நான் என்ரை கலியாண விஷயத்தைப்பற்றி ஒருத்தரோடையும் கதைக்கேல்லை. ஏனண்டால் போலி அனுதாபத்தோடை என்ரை கதையைக் கேட்டுக்கொண்டு அங்காலைபோய் உவளுக்குக் கலியாண விசர் என்கிறவையும், தங்கடை மன அரிப்பை என்னைக்கொண்டு சொறிய வாறவையும்தான் இஞ்சை இருக்கினம், என்ரை மனம் திறந்து கதைக்க நீர் தான் சந்திச்சிருக்கிறீர்.

''நீர் மார்க்கண்டம்மான், மார்க்கண்டம்மான் எண்டு அடிச்சுக் கொள்ளுறீரே, அது மார்க்கண்டில்லை வரதன். மாங்கண்டு! மற்றவையின்ரை உணர்வுகளைப் புரிந்து கொள்ளாத மாங்கண்டு வரதன் அவர்.

''அவருக்கு நான் எடுக்கிற சம்பளத்தில்தான் குறி. அதை மட்டும் தவறாமல் அச்சொட்டாய் வேண்டிப் போடுவார். அம்பது சதம் குறைஞ்சாலும் எத்தினை கேள்விகள்...!

''ஆனால் என்ரை ஏக்கங்கள், எதிர்பார்ப்புகள், ஆசா பாசங்கள் எல்லாம் காத்திலை கரைய வேண்டியதுதான். ஹீ டசின்ற் வொறி எபௌற் இற்... ஊர் உலகத்திற்காக நானும் மகளுக்குக் கலியாணம் பேசிறன் எண்டு, நாலு சாதகக் கட்டோடை திரிவார். வாறதை எல்லாம் 'இவன் சாதி குறைவு, இவன்ரை பாட்டன்ரை பாட்டன்ரை பாட்டன் எங்கடை பாட்டன்ரை பாட்டன்ரை பாட்டனுக்குச் சேவகம் செய்தவன்' எண்டு ஏதாவது விசர் ஞாயம் கற்பித்து குழப்பிப்போடுவார். ஆனால் வெளியிலை கேட்டுப் பாரும்; தன்ரை மோளின்ரை பெருமையை பீத்தேக்கை பாக்கவேணும். தண்ணியைப் போட்டிட்டு தன்ரை மோளின்ரை அடக்கத்தைப்பற்றி பேசேக்கை பாக்க வேணும்!

''அடக்கம்!... கண்டறியாத அடக்கம்! ... இப்பிடி எங்கடை ஆசையளை அடக்கி வைச்சுக்கொண்டு — விறகு காஞ்ச மாதிரிக் காஞ்சு கொண்டு — நாங்கள் சலனமே இல்லாத கற்பின் பெருந்தகைகள் எண்டும், கண்ணகியின் வாரிசுகள் எண்டும் காட்டிக் கொண்டிருக்கிறதுதான் அடக்கமெண்டால், எனக்கு அந்த அடக்கமே வேண்டாம் வரதன்.

''ஐ ஹேற் இற் வரதன். ஐ ஹேற் இற். உண்மையிலை நாங்கள் அடக்கமாயா இருக்கிறம்? எங்கடை ஆசையளை மூடிமூடிப் பொத்திக் கொண்டு, எங்கடை உணர்ச்சிக் கொந்தளிப்புகளை கோயில் குளங்களிலை அணைச்சுக் கொண்டு சமூகத்திற்காக நாங்கள் ஒரு ஷோ போடிறம்... வீ ஆர் புட்டிங் ஏ ஷோ வரதன்.

''இப்ப முப்பத்திரண்டு வருசமாய் நான் எடுத்தது அடக்கமானவள் எண்ட பேர்தான். ஆனால் என்னுக்குள்ளை நானே வெந்து புளுங்கி; குமைஞ்சு அவிஞ்ச தெல்லாம் ஆருக்குத் தெரியும்? சமூகத்திற்கென்ன; 'முதலியார் மார்க் கண்டற்ரை மூத்த பெட்டையோ தங்கப் பவுன். எண்டு சொல்லும். ஆனால் என்ரை குமுறல்கள், கொந்தளிப்புகள் ஆருக்குத்' தெரியும்?''

கண்களில் நீர் முத்துக்கள் உருண்டோட, உணர்ச்சிக் கொந்தளிப்பில் உதடுகள் துடித்து விம்ம, ஆங்கிலத்திலும் தமிழிலுமாக மாறி மாறி அக்கா குமுறிக் கொட்டிக் கொண்டிருந்தா.

''ஏன் அக்கா, நீங்கள் ஒருத்தரையும் காதலிக்கேல் லையே? அப்படிக் காதலிச்சிருந்தால் அவரோடை உங் கடை வாழ்வைத் தொடங்கலாமே!''

''காதல்...? இந்த வேலியளைப் பாரும் வரதன். இந்த உயரமான கிடுகுவேலியளைத் தாண்டி ஒரு ஆம்பிளேன்ரை பார்வை என்மேலை பட முடியுமே! காதலிச்சால் மட்டும் காரியம் ஒப்பேறிவிடுமே!

''உமக்குத் தெரியுமா வரதன்; என்னோடை படிப்பிச்ச மாஸ்ரர் ஒருதர் என்னைக் கலியாணம் செய்ய விரும்பினார் முறையாய் வீட்டிலை வந்து கேட்டார். ஆனால் உம்மடை. மாக்கண்டம்மான் மாட்டெண்டு போட்டார். ஏன்தெரியுமே; பெரியவை கதைக்கிற விசயத்தை— இப்பிடி வெக்கம் மானம் இல்லாமல் கலியாண விசரிலைதானாம் வந்து கேட்டிட்டார எப்படி அவற்றை ஞாயம்?

''எங்கடை ஆசாபாசங்கள் அவருக்கு ஆடாசமாய்ப் படுகுது ஆனால் இந்த வயதிலையும் அவருக்கு ஒரு 'வைப்பு' வேறை. தன்ரை பாட்டன் நாலு பெஞ்சாதிக்காரன் எண்ட திலை அவருக்கு ரொம்பப் பெருமை. பாவம் அந்த மாஸ் ரருக்கு தாய் தேப்பன் இல்லை எண்டது என்ரை தேப்பனுக் குத் தெரியாமல் போச்சு. தெரிஞ்சிருந்தா மட்டும் செய்து வைச்சிடுவரே; அவன்ரை பூட்டன்ரை பூட்டன் மாடு மேச்சவன்; அவன் குடும்பத்திலை முதலியார் மார்க்கண்டு வின்ரை மோளுக்குச் சம்மந்தமோ எண்டு கேப்பர். நான் பொன் முட்டை இடுகிற வாத்து வரதன். உம்மடை மார்க் கண்டம்மான் லேசிலை அதை விட்டுவிடுவரே!''

''ஏன் உங்கடை அம்மா இதிலை அக்கறை காட்டி றேல்லையே அக்கா?''

''பாவம். அவவாலை என்ன செய்ய முடியும்? தன்ரை தாலியையே இன்னொருத்திக்குப் பங்கு போட்டுக் குடுத்திட்டிருக்கிறவ எனக்கொரு தாலி அமைச்சுத்தர முடியுமா? அவவின் ஆதரவும் இல்லாட்டிக்கு நான் எப்பவோ தற்கொலை செய்திருப்பன் வரதன்.''

''என்ரை தங்கச்சி ரஞ்சி யாரையாவது காதலிச்சு என்னட்டை உதவிக்கு வந்தா, அவளை வீட்டை விட்டு அவனோடை போகும்படி நானே தூண்டிவிடுவன். அவ்வளவு தூரத்துக்கு நான் என்னுக்குள்ளை வெந்து போய், அந்த வெக்கேலை மரத்துப் போய்,அந்த மரப்பிலை துணிஞ்சிட்டன். இன்னொரு பொம்பிளைக்கு இந்தக் கதியே வர வேண்டாம்.

''நீர் சொல்லும் வரதன். என்ரை தேப்பனைப்போய் எனக்கு எப்ப கலியாணம் எண்டு கேட்க முடியுமா? கேட்டால் அவர்தான் சும்மா இருப்பாரா? அவளுக்கு 'அமர்' முத்திப்போச்சு எண்டு அடி அடி எண்டு அடிச்சு அறையுக்கை பூட்டி வைச்சிடுவர்.

''இப்ப தெரியுதா நான் ஏன் கலியாணம் செய்யேல்லை எண்டு? நான் கலியாணம் செய்யேல்லை எண்டு இல்லை — எனக்குக் கலியாணம் செய்து வைக்கேல்லை. அது தான் சரியான, பொருத்தமான வசனம். இது பிலோசபி இல்லை வரதன். என்னைப்போல கலியாணமாகாமல் யாழ்ப்பாணத்து நீரை எல்லாம் உவர் நீர் ஆக்குகின்ற பெண்களின் கதை. ஐ லைக் வெஸ்ரேன் பீப்பிள் இவ் தே வில் மரி, தெய பேரன்ஸ் டூ நொற் இன்ரரொாப் தெய பேசனல் லைஃப்.''

உணர்ச்சித் துடிப்பில் ைககள் பதற உதடுகள் வெம்பி வெடிக்க அக்காவின் மனவெக்கை சொற்காற்றாய்க் கழித்து வேகரத்துடனும் உஷ்ணத்துடனும் வீசியது! அந்த உஷ்ணக் காற்றின் பெரும்பகுதி ஆங்கிலமாகவே குமுறியது.

அக்காவின் இவ்வளவு நேரப் பேச்சிலும் நான் ஒன்றை அவதானித்தேன்; அக்கா தனது தந்தையை அப்பா என்று ஒரு போதும் குறிப்பிடவில்லை. 'உம்மடை மார்க்கண்டு

அம்மான்'. மை ஃபாதர் - என்ற வேறு மொழிகளாலேயே அறிப்பிட்டு வந்ததில் இருந்து மார்க்கண்டம்மான்மேல் அவ எவ்வளவு வெறுப்புற்றிருக்கிறா என்பதைப் புரிந்து கொண்டேன்.

''அக்கா; நீங்கள் வெஸ்ரேன் பீப்பிள்சின் தடையில்லாக் காதலை விரும்பிறன் என்னுறியள். ரஞ்சி ஆரோடேனும் ஓடிப் போனால் அதுக்குத் துணை செய்வன் என்னுறியள். அப்ப உங்களுக்குப் பிடிச்சவரோடை நீங்கள் ஏன் போகக் கூடாது?''

அக்கா சிலகணங்கள் மௌனமாய் என்னை ஊடுருவினா. அப்பார்வையில் சலிப்புக் கொட்டிக்கிடந்ததை உணர்ந்தேன். 'இவ்வளவு நேரத்திலும் என்னை நீர் புரிஞ்சு கொள்ள வில்லையா' என்கிற மாதிரி ஒரு சிரிப்புச் சிரித்தா. அந்தச் சிரிப்பில் நான் மிகவும் குறுகிப் போய் விட்டேன். அக்கா தொடர்ந்தா.

'எனக்குப் பிடிச்சவை ஆர் வரதன்? பள்ளிக்கூடத்தை யும் வீட்டையும், லைபிறரியையும் தவிர வேறு எனக்கு என்ன தெரியும். இனி ஒருதரைக் காதலிக்கிற எண்டாலும் இந்த வயதிலை லேசா முடிகிற காரியமா? வசந்தகால மலர்கள் தங்கள் கூரிய முட்பகுதியை மட்டும் விட்டுட்டு தங் கள் அழகிய இதழ்களை உதிர்த்துக் கொண்டதைப் பாரும்' என்று முன்னுச்சியில் உள்ள நரை மயிர்களைத் தொட்டுக் காட்டினா.

''வரதன் ஓடிப் போறது எண்டாலும் இந்தச் சமூகத் தைத் தூக்கி எறிஞ்சு போட்டுப் போக முடியுமா? எனக்குப் பின் இருக்கிற ரஞ்சி, எனக்காக நோன்பிருக்கிற அம்மா இவர்கள் எல்லாரையும் தூக்கி எறிஞ்சுபோட்டு ஓட முடி யுமா?

''இது லண்டன் இல்லை வரதன். வேலியை உயர்த்தி உயர்த்தி அடைச்சு வைக்கிற, கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மூத்த யாழ்ப்பாணத்துச் சமூகம். இந்தச் சமூகத்தையா தூக்கி எறிஞ்சுட்டுப் போகச் சொல்லுறீர்...?

''...பியூடல் சொசைற்றி... இந்திராவோ மாலதியோ ஓடிப்போனால் அதைப்பற்றி இந்தச் சமூகம் அதிகம்

அலட்டிக் கொள்ளாது. ஒரு நாளிலை பழங்கஞ்சியாய்ப் போகும். ஆனால் நான்...?

''முதலியார் மார்க்கண்டுவின் மூத்த குமாரி நான்!... அடக்கத்திற் கெண்டே பெயர் பெற்ற நான்!... 33 வருச மாய் அன்னிய ஆம்பிளையளைத் திரும்பிக்கூடப் பார்க்கா தவள் எண்டு பெயர் எடுத்த நான்!... கண்ணகியின் மறு வார்ப்பு எனப் பேசப்பட்ட நான்...?

''உம்மாலை என்னைப்பற்றிக் கொஞ்சமேனும் புரிய முடியுதா வரதன்? நான் ஓடிப்போனால் இத்தினை கால மும் முத்தின அமரை அடக்கி வைச்சுக்கொண்டு பத்தினி வேஷம் போட்டிருக்கிறாள் எண்டு ஊர் சிரிக்கும்.

''என்ன இருந்தாலும் இந்தச் சமூகத்தின் தளைகளை எங்களாலை மீறமுடியாமல் எங்களைச் சின்னனிலை இருந்து வளத்துப் போட்டினம்''

கெளரி அக்கா குமுறி அழுதாள்!

அன்று இரவு முழுக்க என்னால் நித்திரை செய்ய முடிய வில்லை. நிலவு, ஆறு சோலை, மலர் என்று புற அழகுகளைக் கண்டு எவ்வளவு ஏமாந்து விட்டேன் நான்! யாழ்ப்பாணத்து நீர் எல்லாம் உவர் நீராக மாறுகிறதாமே இதற்குக் காரணம் என்ன என்ற கேள்விக்கு 'கலியாணமாகாத யாழ்ப்பாணத் துக் கன்னியர் விடும் கண்ணீரெல்லாம் நிலத்தில் சுவறுவதே அதன் காரணம் என்ற சிரித்திரன் மகுடியின் கருத்தாழம் மிக்க பதில் என் நினைவில் திரும்பத் திரும்ப வந்து என் நெஞ்சைத் துளைத்தது.

எத்தனை கெளரி அக்காக்கள்!

எத்தனை பிரச்சினைகள்!

இப்படியும் மனிதர்களா? இப்படியும் பிரச்சினைகளா? இதோ கெளரி அக்காவும் மார்க்கண்டம்மானும் நிதர்சன மாக இருக்கிறார்களே!

எவ்வளவு பரிதாபமான பெண் இந்தக் கௌரி அக்கா! இந்த யாழ்ப்பாணத்துக் காற்று இவ்வளவு சூடாய் இருப்ப தன் காரணம் கலியாணமாகாத இந்தக் கன்னியர்கள் விடும் ஏக்கப் பெருமூச்சுக் கலப்பதுதானோ!

ஓ!... தமிழ்ச் சமுதாயமே! நீ எப்போது உருப்படப் போகிறாய்!

கைதடிப் பாலத்தில் இருந்து கொண்டிருந்தேன். மேலே முழுநிலவின் தேன் ஒளி கசிந்து ஒழுகியது. எந்தக் காட்சியைக் கண்டு இரசிக்க ஐந்தாண்டுகள் ஏங்கியிருந்து ஓடோடி வந் தேனோ அந்த நிலவின் ஒளியை என்னால் இரசிக்க முடிய வில்லை.

இந்த நிலவின் ஒளி என்னைத் தகிக்கிறது!

இந்த ஈரமான கடற்காற்று என்னைப் புழுக்கி அவிக் கிறது!

'ஓ... இந்த நிலவு குளிர்ச்சியாகவே இல்லை!''

நான் எனது மீள் பயணச் சீட்டை இரத்துச் செய்யப் போவதில்லை. திட்டமிட்டபடி இருபதாம் நாள் முடிவில் எனது பயணம் தொடரும். என்னால் இந்தத் தகிப்பைத் தாங்கிக் கொள்ள முடியாது!

இந்த யாழ்ப்பாணத்துக் காற்று அனலாக வீசுகிறது! இந்த மணல் துணிக்கைகள் என்காலை உறுத்தி வருத்து கின்றன.

ஓ! ஜேன் அங்கே காத்திரு. விரைவில் நான் உன்னிடம் வருகிறேன். அமைதியான தேம்ஸ் நதியின் பின்னணியில் செர்ரி மரங்கள் பூத்துக் குலுங்க, முழு நிலவின் அமுத தாரையில் நனைந்தபடி 'சில்வர் நைற்' கவிதை படித்துக் கொண்டே நடப்போம் ஜேன்!

இங்கே சிந்து நதி கொதிக்கிறது! நிலவு குளிர்ச்சியாகவே இல்லை ஜேன்! □

*சிரித்திரன், 1982*

தகவம் பரிசுக் கதைகள் — தொகுதி - 2

# ஒரு மதிப்பீடு

கலாநிதி க. அருணாசலம் எம்.ஏ., பிஎச். டி.

இத்தொகுதியிலமைந்துள்ள கதைகளை ஒட்டுமொத்த மாக நோக்கும்போது சில உண்மைகள் புலப்படும். 'கலை - இலக்கியங்கள் சமகால நிலைமைகளைப் பிரதிபலிப்பது டன் அமையாது அவற்றை அலசுவதாகவும் இருக்கும் நிலை மைகளிலும் பார்க்க, உயர்ந்த நிலைக்கு முன்னெடுத்துச் செல்ல முயல்பவையாகவும் பிரச்சினைகளுக்கான அடிப் படைக் காரணங்களையும் அவற்றுக்கான தீர்வு மார்க்கங் களையும் கலைத்துவம் குன்றாவகையில் விண்டுகாட்ட முயல்பவையாகவும் அமையும் - அமைதல் வேண்டும்' என் னும் கருத்து மேலோங்கிவரும் இற்றைநாளில் அதற்கேற்ற வகையில் இத்தொகுயில் இடம் பெற்றுள்ள கதைகள் பல வும் அமைந்துள்ளமை விதந்து கூறத்தக்கதாகும்.

ஏறத்தாழ இருபதாம்நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து உலகின் பல பாகங்களிலும், குறிப்பாக மூன்றாம் உலக மண்டல நாடுகள் பலவற்றிலும் வேகமான மாற்றங்கள் பல ஏற்படத் தொடங்கின. அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகளும் இனங்களும் சமூகங்களும் பிரதேசங்களும் விழிப்புணர்ச்சி கொண்டு தமது விடுதலைக்காவும் உரிமைகளின் பொருட்டும் அநீதிகளுக்கும் கொடுமைகளுக்கும் ஈவிரக்கமற்ற சுரண்டற் கொடூரங்களுக்கும் எதிராகக் கிளர்த்தெழுந்து தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்து போராடிச் சுதந்திரம் பெற்றுக் கொண்டிருக்கின்றன; சுதந்திரத்தின் பொருட்டுத் தொடர்ந்து போராடுகின்றன.

இப்போராட்டங்கள் சாத்வீக அடிப்படையில் ஆரம் பித்துக் காலகதியில் ஆயுதப் போராட்டங்களாகவும் பரிண

மிப்பது கண்கூடு. இந்நிலையில் மக்களது நிலைப்பாடுகளை மென்மேலும் முன்னெடுத்துச் செல்வது கலை - இலக்கியங் களின் தவிர்க்க முடியாத பணியாகின்றது. உலகம் முழுவ திலும் - குறிப்பாக மூன்றாம் உலக மண்டலங்களில் (பாலஸ் தீனம், வியட்னாம், நிக்கரகுவா, எல்சல்வடோர், சிலி முதலிய நாடுகளின் அண்மைக்கால இலக்கியங்கள் இவ்வகை யிற் கூர்ந்து நோக்கத்தக்கவை) நாம் இன்று நிதர்சனமாகக் காணும் உண்மை இதுவாகும்.

இத்தகைய ஒரு போக்குக்கு விதிவிலக்காக அமையா மல் இத்தொகுதிக் கதைகளில் இடம்பெறும் பாத்திரங்கள் பலவற்றின் செயற்பாடுகள் அமைகின்றன. எடுத்துக்காட் டாக, 'சீதேவிகள்' கதையில் வரும் செல்லம்மாக் கிழவி யின் பேரன், 'காலம் ஒரு தூரிகையில்' வரும் கணேசன், 'சமுதாயச் சுருக்கங்களி'ல் வரும் வாணிசிறீ, 'இனி ஒரு துன்பமில்லை' கதையில் வரும் சிறுவன் முத்து, 'உப்பங்கழி' கதையில் வரும் சுப்புறு, மாணிக்கம், 'ஓர் உயிரின் விலை' கதையில் வரும் தேவராசன், சத்தியா, கதிர்வேலு மாஸ்டர், 'பாய்ச்சல்கள்' கதையில் வரும் மணியம், மனோன்மணி, கனகசபாபதி, 'முக்காடுகள் மீட்டும் முகாரி ராகங்கள்' கதையில் வரும் யசவதி முதலிய பாத்திரங்களின் எண்ணங் களும், சிந்தனைகளும், செயற்பாடுகளும் வெவ்வேறு வகை யில் எம்மைச் சிந்திக்கத் தூண்டுகின்றன.

ஆயின், சில கதைகளில் இடம்பெறும் பாத்திரங்கள் காலப்போக்குகளை உணர்ந்து செயற்படும் திறன் அற்றவை யாகவும், பயனற்ற பழைய சம்பிரதாயங்களையும் மரபு களையும் உடைத்தெறிய முயலும் திராணியற்றவையாகவும், போராட்ட உணர்வின்றியும், தமது வேதனைகளையும் உள்ளத் தவிப்புகளையும் மனப் போராட்டங்களையும் அடக்க முயன்றும் இயலாத நிலையிற் குமைந்து குமைந்து வெந்து வெதும்பித் தமது ஆசாபாசங்களையும் உணர் வுகளையும் கருக்கிக் கொண்டு நாள் தோறும் மரணித் துக் கொண்டிருப்பனவாகவும் காணப்படுகின்றன.

கொடுமைகளையும் அநீதிகளையும் சரிவர உணர்ந்தும் அவற்றுக்கெதிராகக் கொதித்தெழாது கற்றறிந்த சில பாத்திரங்கள்கூட மௌனம் சாதிக்கின்றன; சில பாத்திரங்கள் கண்டும் காணாதது போல் நடைப்பிணங்களாக இருக்கின்றன. எடுத்துக்காட்டாக: 'முக்காடுகள் மீட்டும் முகாரி ராகங்கள்' கதையில் வரும் ராகிலா, அனீஸா, 'நிலவு குளிர்ச்சியாக இல்லை' கதையில் வரும் பட்டதாரி ஆசிரியையான கௌரி அக்கா, 'நான்' முதலியவை இவ்வகையில் பரிதாபத்துக்குரியனவாகக் காணப்படுகின்றன.

அதே சமயம் தவித்த முயலை அடிப்பது போல ஏழ்மையிலும் அறியாமையிலும் மூழ்கித் தத்தளிக்கும் அப்பாவி மக்களின் உழைப்பின் பயனைத் தமது உத்தியோகம், குலப் பெருமை, செல்வாக்கு பணத்திமிர் முதலியவற்றைக் காட்டி ஈவிரக்கமற்ற முறையிற் சுரண்டிக் கொழுக்கும் சமுதாய விரோதிகள், குலப் பெருமைகளிலும் சாதித் திமிரிலும், பணச் செருக்கிலும் ஆணவம் பிடித்தலையும் சநாதனிகள், சமூகத்தின் அடிமட்டங்களில் மிக வேகமாக ஏற்பட்டுவரும் மாற்றங்களையும் எழுச்சியையும் ஜீரணிக்க முடியாது தவிக்கும் சமூக மேலாதிக்கத்தினர் முதலியோர் இத்தொகுதியிலமைந்துள்ள கதைகள் பலவற்றிற் பயங்கரப் பிரகிருதிகளாகவும் அருவருப்புக்கும் வெறுப்புக்கும் பரிதாபத்துக்கும் உரியவர்களாகவும் உள்ளனர். எடுத்துக்காட்டாக: 'பாய்ச்சல்கள்' கதையில் வரும் விநாசித்தம்பியார், 'நிலவு குளிர்ச்சியாக இல்லை' கதையில் வரும் மார்க்கண்டம்மான், 'உப்பங்கழி' கதையில் வரும் விதானையார் சிவப்பிரகாசர், ரி. ஏ., காணி ஓவசியர், 'சீதேவிகள்' கதையில் வரும் வல்லிபுரப் பரியாரியார், செல்லம்மாக் கிழவியின் மகன், 'காலம் ஒரு தூரிகை' கதையில் வரும் முதலாளி மகேசன், 'நியாயப் படுத்துகின்ற கெட்டிக்காரர்கள்' கதையில் வரும் கொண்டக்டர் முதலிய சில பாத்திரங்கள், 'ஓர் உயிரின் விலை' கதையில் வரும் தேவராசனின் தாய், தமையன் முதலிய பாத்திரங்கள் இவ்வகையிற் குறிப்பிடத்தக்கன.

கடந்த பதினைந்து ஆண்டுகளுள் வடக்கு, கிழக்குப் பகுதிகள் உட்பட இலங்கை முழுவதிலும் மாற்றங்கள் பல வெகுவேகமாக இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. பல வழிகளிலும், பல துறைகளிலும் அடக்கி ஒடுக்கப்பட்ட சிறுபான்மை இன மக்கள் தமது உரிமைகளின் பொருட்டும் விடுதலைக்காகவும் பல தசாப்தங்களாக நடாத்தி வந்த சாத்வீகப் போராட்டம் 1970களின் பிற்பகுதியிலிருந்து இளைஞர்களின் ஆயுதப் போராட்டமாகப் பரிணமிக்கலாயிற்று; 1980களில் மிக உக்கிரம் பெற்றதுடன் அனைத்துலகின் கவனத்தையும் ஈர்க்கலாயிற்று. போராட்டச் சூழ்நிலைகளினாலும் நாட்டில் நிலவிவரும் பொருளாதார மந்த நிலையினாலும், பிற காரணங்களினாலும் ஆரம்பக் கல்வி அறிவைப் பெற்றவர்களும் உயர் கல்வி அறிவைப் பெற்றவர்களுமான இளந் தலைமுறையினர் பல்லாயிரக் கணக்கில் அகதிகளாகவும் தொழில் தேடுவோராகவும் கடல்கடந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கும் மேற்கத்தைய நாடுகள் பலவற்றுக்கும் செல்லலாயினர். இவை காரணமாக நாட்டின் சகல சமூகங்களிலும் சமூக அமைப்புக்களிலும் சமுதாய மதிப்பீடுகள், நியதிகள், நம்பிக்கைகள், ஆசாரங்கள் முதலியவற்றிலும் மாற்றங்கள் பல வேகமாக ஏற்படலாயின.

இத்தொகுதியிலமைந்துள்ள கதைகள் சிலவற்றிலே மேற்கண்ட நிலைமைகள் கணிசமான அளவிற்கு அலசப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம். பழமையின் குறைகள் மட்டுமன்றி நிறைகளும், புதுமையின் நிறைகள் மட்டுமன்றிக் குறைகளும் போலித்தனங்களும் சில கதைகளிற் கதைப் போக்கினூடே சுட்டிக்காட்டப் பட்டுள்ளமை விதந்துரைக்கத் தக்கது. நவநாகரீகத்தினதும் நகர கலாசாரத்தினதும் நல்லம்சங்கள் மட்டுமன்றித் தீய அம்சங்களும் மிக வேகமாகக் கிராமப் புறங்களையும் ஆக்கிரமித்து வருவதைப் பல கதைஞர்கள் உன்னிப்பாகக் கவனித்துக் கதைகளில் வெளிப்படுத்தியுள்ளனர்.

தமிழர் சமூகத்திற் காலம் காலமாகச் சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் அடக்கி ஒடுக்கப்பட்டிருந்த

மக்கள் பலர் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் காரண மாகத் 'திடீர்ப்பணக்காரர்கள்' ஆயினர். இந்நிலைமை சமு தாய மாற்றங்களிலும் முன்னேற்றத்திலும் திடீர் பாய்ச்சல் களாகவே அமையலாயின. காலம் காலமாகச் சமூக பொரு ளாதார ரீதியாக மேலகதிக்கம் செலுத்தி வந்த முதிய தலைமுறையினர் பலரால் இத்தகைய மாற்றங்களை ஏற் கவோ ஜீரணிக்கவோ முடியவில்லை. அதேசமயம் திடீர்ப் பணக்காரர்களாக மாறியவர்களும் தாம் இது காலவரை சமூக, பொருளாதார ரீதியாக மேலாதிக்கம் பெற்றிருந்த வர்களுக்குச் செய்துவந்த சேவகங்களையும் அளித்துவந்த மதிப்புக்களையும் கீழ்ப்படிவுகளையும் கைவிட்டதோடு அவர் களை அலட்சியம் செய்யவும் தொடங்கினர்.

மேற்கண்ட நிலைமைகளையும் மாற்றங்களையும் மிக அற்புதமான முறையிலே மிகச் சிறந்த உத்திகளைக் கை யாண்டு காவலூர் எஸ். ஜெகந்நாதன் 'பாய்ச்சல்கள்' என் னும் கச்சிதமான சிறுகதையாக வடித்துள்ளார். மிகப் பொருத்தமான முறையிற் கதையின் தலைப்பும் அமைந் துள்ளது.

இக்கதையில் பரிதாபத்திற்குரிய முதிய தலைமுறைப் பாத்திரமாக விளங்கும் வினாசித்தம்பியர் தமது பிறந்தக மான வடபகுதியின் காரைநகரைவிட்டு நீங்கிக் கொழும் பிற்குச் சென்று வியாபார முயற்சிகளிலீடுபட்டுக் காலப் போக்கிற் பெரும் வர்த்தகராகித் தனக்கும் தனது மக்களுக் கும் மாளிகைகள் கட்டி ஆடம்பரமாக வாழ்ந்து வந்தவர்; அடிக்கடி தமது ஊருக்குச் சென்று தமது பணபலம், செல் வாக்கு, ஆடம்பரம், மேலாண்மை முதலியவற்றைக் காட்டி வந்தவர்; மனைவி இறந்ததைத் தொடர்ந்து தொடர்ச்சி யாகப் பத்து வருட காலம் ஊருக்குச் செல்லாதிருந்த அவர் திடீரென ஏற்படும் நப்பாசையினால் உந்தப்பட்டுப் பத்து வருட இடைவெளியின் பின்னர் ஒருநாள் இரவுப் புகை வண்டியிற் கொழும்பிலிருந்து புறப்பட்டு மறுநாட்காலை ஊரை அடைகிறார். ஊரிற் கால் பதித்தது முதல் தமது

வீட்டை அடைவது வரையிலான குறுகிய நேரத்தில் அவர் கண்டவைகள், கேட்டவைகள், உணர்ந்து கொண்டவைகள் முதலியவற்றின் மூலம் தாம் பிறந்து வளர்ந்த ஊர் பத்து வருட இடைவெளியில் அடைந்துள்ள மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் கண்டு திகைக்கின்றார்; முன்னர் அவருக்கு ஊரிலிருந்த பெருமதிப்பும் கீழ்ப்படிவுகளும் சேவகமும் தலைகீழாக மாறி, அவரை எவரும் மதியாதது மட்டுமன்றிப் பலர் அவமதித்ததையும் நேருக்குநேர் எதிர்த்து வீம்பு பேசியதையும் அவரால் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை. இறுதியில், பத்து நாட்களுக்காவது ஊரில் தங்கி நிற்க வேண்டுமென்ற ஆதங்கத்தோடு ஊருக்கு வந்த வினாசித்தம்பியார் ஊருக்கு வந்த அன்று மத்தியானமே கொழும்புக்குத் திரும்புகின்றார். அவரது உணர்வோட்டங்கள், மனப்போராட்டங்கள், சிந்தனைகள், புறுபுறுப்புக்கள் முதலியவற்றின் மூலம் கதைஞர் மிகவும் கச்சிதமான முறையில், சமூக, பொருளாதார ரீதியாக மேலாதிக்கம் செலுத்தி வந்த முதிய தலைமுறையினரின் மனோபாவங்கள், சமூகத்தின் அடிமட்டத்து மக்களைப் பற்றிய அவர்களது அலட்சியமான போக்குகள், கணிப்பீடுகள் முதலியவற்றைத் துல்லியமாகக் கதையிலே வெளிப்படுத்தியுள்ளார், முதிய தலைமுறையினரின் 'அசல்' பிரதிநிதியாக இக்கதையிலே வினாசித்தம்பியர் விஸ்வரூபத்துடன் திகழ்கின்றார்!

''ஐயா! ஐயா!'' என்று தலைசாய்க்கும் ஊர், அவருக்குச் சேவகம் செய்யும் ஊர், - அதைக் காணாமல் அவர் தவித்தார். ஊரைவிடப் பத்து வடருங்கள் பின்தங்கி நின்றார் வினாசித்தம்பியார்! ஒரே பாய்ச்சலில் அவரால் பாய்ந்துவிட முடியவில்லை; அவர் பாய விரும்பவுமில்லை...'' எனக் கதையின் முடிவிற் கதைஞர் வெளிப்படுத்துவது சிந்திக்க வைப்பதாக அமைந்துள்ளது.

தமிழில் இதுவரை வெளிவந்துள்ள தரமான சிறுகதைகளுள் ஒன்றாக இக்கதை விளங்குகின்றது. ஒரு புறம், பத்துவருட இடைவெளியிற் கிராமமொன்றில் ஏற்பட்டி

ருந்த பலதுறை மாற்றங்களையும் மிகக் கச்சிதமான முறையிலே தொட்டுக்காட்டும் இக்கதை, மறுபுறம் சிறுகதைக்குரிய இலட்சணங்கள் பலவும் பொருந்தப்பெற்றுச் சிறப்புடன் விளங்குகின்றது. கதைஞர் கையாண்டுள்ள உத்தி வகைகள், பொருத்தமான உவமைகள், தங்குதடையற்ற வேகமும் சொற்சிக்கனமும் உயிர்த்துடிப்பும் செறிவும் திட்பமும் மிக்க சரளமான நடை, செட்டான சொல்லாட்சிகள், உயிர்த்துடிப்பு மிக்க சிந்தனையைத் தூண்டும் கச்சிதமான பாத்திர உரையாடல்கள், கதைக்குச் சூட்டிய பொருத்தமான தலைப்பு, சிந்திக்க வைக்கும் முடிவு, இறுக்கமும் கட்டுக்கோப்பும் முழுமையும் ஒருமைப்பாடும் கொண்ட கதையமைப்பு, மனதைவிட்டகலாத செம்மையான பாத்திர வார்ப்பு என்பன இக்கதையின் தனிச் சிறப்பம்சங்கள் எனலாம். கதையின் பிரதான பாத்திரமான வினாசித்தம்பியார் மட்டுமன்றித் திடீரெனத் தோன்றி மறையும் பாத்திரங்களான மணியம், அருளம்மா, தின்னிமாடன் சபாபதி, வல்லிபுரம் ஆகியோரும் மனதை விட்டகலாதவர்களாக விளங்குகின்றனர்.

கு. ப. ரா., புதுமைப்பித்தன், ராஜமையர், பாரதி முதலியோர் வரிசையில் மிக இளம் வயதிலேயே மறைந்துவிட்ட, துடிப்புமிக்க கதைஞரான ஜெகந்நாதன் குறுகிய காலத்தில் நிறைய ஆக்கங்களைப் படைத்துள்ளார். கிராமியச் சூழலிற் பிறந்து வளர்ந்த ஜெகந்நாதன் தமது பெரும்பாலான கதைகளின் களமாகக் கிராமியச் சூழலையே கொண்டுள்ளார். அவரது சிறுகதைகள் பலவற்றின் விரிவாகவே அவரது குறுநாவல்கள் பலவும் விளங்குகின்றன. கலட்டுத்தரை, இனிவரும் நாட்கள், நாளை முதலியன இவ்வகையில் நோக்கத்தக்கன.

ஜெகந்நாதனது 'சீதேவிகள்' என்னும் கதை, மரணப் படுக்கையிற் கிடக்கும் செல்லம்மாக் கிழவியையும் அவளது பிள்ளைகளையும் உறவினர்களையும் மையமாகக் கொண்டு விரிகின்றது.

மரணப் படுக்கையிற் கிடக்கும் செல்லம்மாக் கிழவியின் தவிப்புகள், மனப் போராட்டங்கள், தங்களுக்குச் சிரமத்தைத் தராமல் விரைவிலேயே தாய் மரணித்துவிடவேண்டும் என அவாவும் அவளது பிள்ளைகளின் செயற்பாடுகள் உரையாடல்கள், கிழவியிடம் அடிக்கடி வந்துபோவோர், கிழவியைச் சுற்றியிருப்போர், பரியாரியார் ஆகியோரது செயற்பாடுகள், உரையாடல்கள், எண்ணங்கள் முதலியவற்றின் மூலமாகக் கதைஞர் வியக்கத்தக்க வகையிற் சமகால அவலங்களையும், ஏற்பட்டுவரும் புதிய போக்குகளையும், முதிய தலைமுறையினருக்கும் இளைய தலைமுறையினருக்குமிடையிலான வேறுபாடுகளையும், மாற்றங்களையும், இன்றைய போலித்தனம் நிறைந்த பகட்டு வாழ்க்கை முறைகளையும் அன்றைய நிஜங்களையும், இன்றைய மனிதனின் பொருளாதாரத் தேவைகள் அளவுகடந்து பெருகி அதன் காரணமாகப் பொருளாதாரப் பிரச்சினைகள் மிகுந்து மனிதன் பொருளாதார வேட்கை கொண்ட மிருகமாக வெறிபிடித்தலையும்போது மனிதாபிமானம் தாய் - பிள்ளை பாசம் முதலியன நலிந்து அரட்டையும் மாய்மாலமும் போலித்தனங்களும் வக்கிரங்களும் மிகுந்து வருவதையும், தேவார திருவாசகப் பாடல்களுக்கும் திருமுறை நூல்களுக்கும் பதிலாகச் சினிமாப் பாடல்களும் சினிமாப் புத்தகங்களும் இன்றைய இளந் தலைமுறையினரை ஆக்கிரமித்து வருகின்றமையையும் கதைஞர் உள்ளத்தை உலுக்கும் வகையில் வெளிப்படுத்தியிருக்குந்திறன் பாராட்டத்தக்கது. கிராமிய வாழ்க்கை முறைகளும் அண்மைக் காலங்களில் அவற்றில் ஏற்பட்டுவரும் வேகமான மாற்றங்களும் பண்பாட்டுச் சீரழிவுகளும் கதைப்போக்கினூடே வெளிப்படுத்தப்படும் பாங்கு தனித்துவத்துடன் மிளிர்கின்றது.

பாத்திரங்களின் இயல்புக்கும் தகுதிக்கும் ஏற்ற உரையாடல்களும் விறுவிறுப்பான கதையோட்டமும் தங்குதடையற்ற சரளமான கச்சிதம் மிக்க நடையும் கேலியும் கிண்டலும் நகைச்சுவையும் நிறைந்த கூற்றுக்களும் கதைக்குத் தனிச்சோபை அளிப்பனவாக அமைந்துள்ளன. கதைஞரது

உயிர்த்துடிப்பு மிக்க சொற்பிரயோகங்கள் சில, சமூகப் புன்மைகளையும் வக்கிரங்களையும் குத்திக்காட்டும் குத் தீட்டிகளாக அமைந்துள்ளன.

கதையில் வரும் செல்லம்மாக் கிழவி, வல்லிபுரப் பரி யாரியார், கமலம் ஆகியோர் முதல் கதைப்போக்கில் இடை யிடையே தலையை நீட்டும் நாகமுத்து, வண்ணாரத் தங்கம் முதலியோர் வரை; தானம் பெறுவதற்குப் பஞ்ச கல்யா ணிக் குதிரையில் வந்திறங்கும் ஐயர், கிழவியின் பேரன் ஆகியோர் முதல் செல்லம்மாக் கிழவியின் மரணப் படுக் கையையிட்டுச் சோகம் கப்பிய முகத்துடன் அமர்ந்திருக்கும் ஒரேயொரு ஜீவனான அவளது பேத்தி வரை பலரும் மனதை விட்டகலாத உயிர்த்துடிப்பு மிக்க பாத்திரங்களாக விளங் குகின்றனர். அநாமதேயப் பேர்வழிகளாகக் கதையின் இடையே வந்துபோகும் 'பழைய ஊர்மேளம்' 'கழுதை' ஆகியனவும் மனதைவிட்டகலாதவையாக விளங்குகின்றன. அவர்களுக்குப் பெயர் அவசியமில்லையெனக் கதைஞர் கரு தியிருக்கலாம். முரணியல்புகள் கொண்ட பல பாத்திரங் களை இக்கதை கொண்டிருந்தபோதும் கச்சிதமாகவும் ஒரு மைப்பாட்டுடனும் அமைந்துள்ளமை பாராட்டத்தக்கது.

ஈழத்தின் புகழ்பூத்த எழுத்தாளர்களுள் ஒருவராகத் திகழும் செங்கை ஆழியானின் சிறுகதைகள் பலவற்றின் விரிவினை அவரது நாவல்கள் பலவற்றிலே தரிசிக்கலாம். அத்தகைய கதைகளுள் 'உப்பங்கழி' யும் ஒன்றாகும். வன் னிப்பிரதேச விவசாயிகளது தவிப்புக்கள், ஏக்கங்கள், வேத னைகள், மேலாதிக்கத்தினரால் அவர்களுக்கு இழைக்கப் படும் அக்கிரமங்கள், இளைய தலைமுறையினரிடையே ஏற் பட்டுவரும் விழிப்புணர்ச்சி முதலியவற்றையும் சமுதாய விரோதிகளின் ஈனச்செயல்களையும் கலைத்துவம் மிளிரும் வகையில் அற்புதமாக வடித்துக்காட்டும் சிறந்த கதையாக 'உப்பங்கழி' திகழ்கின்றது.

வானத்தினாலும் பூமித்தாயினாலும் வஞ்சிக்கப்பட்ட மக்களின் சொல்லொணாத் துயரங்களும் அவலங்களும் ஒரு புறம்; தவித்த முயலை அடிப்பதுபோன்று செயற்படும் சுரண்டல் கழுகுகள் - வியாபாரிகள், நிர்வாக சேவையினர் என்ற கோதாவில் ஈவிரக்கமின்றி அப்பாவி மக்களது உழைப்பின் பயனையும் அவர்களைச் சென்றடைய வேண்டிய அரச சன்மானங்களையும் தமதாக்கிக்கொள்ளும் வஞ்சகர்கள் ஆகியோரின் அக்கிரமங்கள் மறுபுறம். கிராமப் புறங்களில் குறிப்பாகக் குடியேற்றப் பகுதிகளில் இவை அன்றாடம் காணக்கூடியனவே. எனினும், ஆசிரியர் இவற்றைக் குத்திக் காட்டும் முறைமையினால் அவை வாசகர் மனதைப் பெரிதும் சுண்டியிழுத்து விழிப்புறச் செய்யும் வகையில் அமைந்துள்ளன.

விதானையார், காணி ஒவசியர் முதலியோர் தமது அக்கிரமங்களுக்குத் துணைபோகும் விதத்தில் அப்பாவி மக்களின் ஒற்றுமையைப் பலவீனப்படுத்தப் பணம், சாராயம் முதலியவற்றைக் காட்டி மயக்கும் செயலும், கொடுமைகளையும் அக்கிரமங்களையும் எதிர்க்கத் துணியும் விழிப்புணர்ச்சி கொண்ட இளைய தலைமுறையின் பிரதி நிதிகளாகச் சுப்புறு, மாணிக்கம் ஆகியோரும், அறியாமையும் ஏமாளித்தனமும் நிறைந்த பழைய தலைமுறையினராக மாரிமுத்தர், கணபதிப்பிள்ளை முதலியோரும் தத்ரூபமாகக் காட்டப்பட்டுள்ளமை விதந்து கூறத்தக்கதாகும்.

கே. ஆர். டேவிட்டின் 'காலம் ஒரு தூரிகை' என்னும் கதையும் ஏறந்தாழ மேற்கண்ட கதையை ஒத்ததாகவே அமைந்துள்ளது. வடபிரதேசத்தின் குடியேற்றப் பகுதிகளிலும் பிற இடங்களிலும் இன்று இடம் பெறும் சுரண்டற் கொடுமைகள், கூலி உழைப்பாளிகளாக வாழ்க்கை நடத்துபவர்களின் பரிதாப நிலை, உடைமையாளர்களின் வக்கிர சுபாவம், கூலிகள் பற்றிய அவர்களது அலட்சிய மனோபாவம் முதலியவற்றை அற்புதமான முறையிலே வடித்துக் காட்டும் ஆசிரியர், அத்துடனமையாது கொடுமைகளையும்

அநீதிகளையும் பொறுக்க முடியாத நிலையிற் கூலிகளாக வாழ்ந்தோர் தர்மாவேசம் கொண்டு துணிகரமாக எதிர்க்கத் துணிவதையும் விழிப்புணர்வு கொண்டு எழுச்சியுறத் துடிப்பதையும் செயற்கைப் பாங்காக அல்லாமல் இயல்பான முறையிலே காட்டியுள்ள திறன் குறிப்பிடத்தக்கது. பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும் அவற்றினால் ஏற்படும் அக்கிரமங்களையும் வர்க்க முரண்பாடுகளையும் கூர்ந்து கவனித்து அலசிச் செல்லும் கதைஞர், உழைத்து உழைத்து அல்லலுற்று ஆற்றாது ஏங்கியழும் அப்பாவி மக்கள்மீது கொண்டுள்ள ஆழ்ந்த நேசத்தையும் அவரது வர்க்க நிலைப்பாட்டினையும் இக்கதை வெளிப்படுத்துகின்றது.

'கூலியின் மகன் கூலியாகவே வாழவேண்டும்', 'தலைமுறை தப்பாத அதிகாரமும் தலைமுறை தப்பாத கூலிகளும்' என நிலவிவரும் நியதியையும் கூலியுழைப்பாளிகள் பற்றிய மேலாதிக்கத்தினரின் மனப்போக்கையும் துல்லியமாக வெளிப்படுத்தியுள்ள கதைஞர், அந்நியதியை உடைத்தெறிய முயலும் புதிய தலைமுறையையும் அவர்களது செயற்பாட்டினையும் பொருத்தமான முறையில் காட்டியுள்ளார். மேற்கண்ட விடயங்களைக் கதைஞர் வெறுமனே தம் கூற்றாகவன்றி முரண்பட்ட வர்க்கத்தினரின் செயற்பாடுகள், எண்ணங்கள், மனோபாவம், உரையாடல்கள் முதலியவற்றின்மூலம் சிறப்புற வெளிப்படுத்தியுள்ளார்.

சிந்தனையைத் தூண்டும் வகையில் அமைந்துள்ள இக்கதையின் முடிவு கதைக்குத் தனிச்சோபை அளிக்கின்றது. ஒரு புறம், தாயின் கருவறையிலிருந்து இவ்வுலகை எட்டிப் பார்க்கும் குழந்தையின் அழுகைக் குரல்; மறுபுறம் அநீதிகளையும் மேன்மேலும் தாங்க முடியாத நிலையிற் பொறுமையிழந்து அவற்றுக்கெதிராக ஆவேசத்துடன் எழுச்சியுற முயலும் உழைப்பாளிகளின் எழுச்சிக்குரல். எனினும் இக்கதையிற் காணத் தகும் முக்கியமானதொரு குறைபாடு கதையின் இறுதிப்பகுதியில், கணேசனின் தாய் கணேசனுக்குக் கூறுவதாக அமைந்துள்ள கருத்துகள். அவை சிந்திக்க

வைப்பனவாக அமைந்துள்ள போதும் பாத்திரத்தின் இயல்புக்கும் தகுதிக்கும் அப்பாற்பட்டனவாகவே உள்ளன. எனினும் மகனுக்கில்லாத பட்டறிவும் அனுபவமும் தாயிடம் இருக்கக்கூடும்.

ஆசிரிய சேவையின் கஷ்டங்கள், வறுமைப்போராட்டம், ஆட்சியாளர்களின் பாராமுகம், அரசியற் பழிவாங்கல், தேர்தல் ஊழல்கள், புருஷலட்சணமான உத்தியோக மோகம் காரணமாக குடும்பத்தைப் பிரிந்து வாழவேண்டிய நிர்ப்பந்தத்தினால் ஏற்படும் மனப்போராட்டங்கள், தவிப்புகள், ஆசிரியர்களைப் பகடைக் காய்களாகப் பயன்படுத்தும் அரசியல்வாதிகளின் அக்கிரமங்கள் முதலியவற்றை அலசுவதாக அமைந்துள்ளது ''சமுதாயச் சுருக்கங்கள்'' என்னும் கதை, தேர்தல், சாக்கடை அரசியல்வாதிகளுடன் மட்டும் நின்றுவிடாது 'சின்னஞ்சிறிசு' களான பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் ஊடறுப்பதும் தொற்றுநோயாகப் பரவுவதும் தத்ரூபமாக இக்கதையிலே காட்டப்பட்டுள்ளன. வளர்ந்தவர்கள் சொற்ப பணத்துக்கும் மதுவுக்கும் துணிமணிகளுக்குமாக நியாயம், நீதி, நேர்மை முதலியவற்றைக் குழிதோண்டிப் புதைப்பதைப் போலவே, நாளை விரியவிருக்கும் சமுதாயச் சுருக்கங்களான சிறுவர்களும் எதிர்காலத்திற்கேற்ற ஒத்திகையாகக் கச்சானுக்கும் ஐஸ்பழத்திற்கும் ரொபிக்குமாகப் பக்கம் சாய்வது தர்மமா? தந்திரமா?

முதுபெரும் எழுத்தாளரான வ.அ. இராசரத்தினத்தின் 'தெய்வம் ஆசி வழங்குகிறது' கதையும் ஆசிரிய சமூகம் பற்றிய மேற்கண்ட விடயங்களையே அலசுவதாக அமைந்துள்ளது. ''பென்சன் எடுத்த பின் வாழ வழியில்லாமல் தவிக்க நேரிடின் நம்மூர் மகாவித்தியாலயத்திற்கு முன்னால் கடலைத்தட்டி வைச்சு யாவாரம் பண்ணுவன். அப்பவாச்சும் தொறக்க வேண்டியவன்களின்ர கண் தொறக்கட்டும்'' என வரும் பகுதி உள்ளத்தைத் தொடும் வகையில் அமைந்துள்ளது.

முஸ்லிம் சமூகத்தினர் மத்தியிலும் இன்று வேகமாகப் பரவி வரும் 'சீதனமுறை' என்னும் கொடிய நோயினால் ஏற்படும் பல்வேறுபட்ட பிரச்சினைகள், அனர்த்தங்கள், சீதனப் பிரச்சினையால் ஏழ்மையில் வாடும் கன்னிப் பெண் கள், விவாகமானவர்கள் முதலியோர் அடையும் வேதனை கள், தவிப்புகள், இறுக்கமான மத நம்பிக்கைகள், ஆசாரங் கள் முதலியவற்றை அலசுவதாக அமைந்துள்ளது. எம்.எல். எம். மன்சூரின் 'முக்காடுகள் மீட்டும் முகாரி ராகங்கள்' என்னும் கதை.

பிரச்சினைகளை அலசியுள்ள அளவிற்குக் கதைஞர் தீர்வு மார்க்கத்தைக் காட்டத் தவறியுள்ளார். ராகிலாக் களும் அனீஸாக்களும் இப்படியே வாழ்க்கை முழுவதும் வைதிகக் கட்டுப் பெட்டித் தனத்துடன், வாழத் தெரியாத வர்களாக உளம் நொந்து மனம் வெதும்பிப் புழுங்கி, குமைந்து குமுறிக் கொந்தளித்து வெந்து கருகி மடிந்து போகவேண்டுமா? அவர்களுக்கு விடுதலை காட்ட முடி யாதா? யசவதியோ வாழத் தெரிந்தவள்!

ஏறத்தாழ இதே நிலையிலேயே 'நிலவு குளிர்ச்சியாக இல்லை' கதையில் வரும் பட்டதாரி ஆயிரியையான 'கௌரி அக்கா' விளங்குகின்றாள்.

பின்தங்கிய கிராமப் புறங்களிலும் புரட்சிகரச் சிந்த னைகளும் அதன் அடிப்படையிலான செயல்களும் விடுதலை வேட்கையும் வேகமாகப் பரவிவரும் இன்றைய காலக்கட்டத் திற் செயல்வடிவில் இல்லாவிடினும் மனதளவிலாவது அப் பாத்திரங்கள் காலத்துக்கேற்றனவாக விடிவுக்கான வழிவ கைகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டாமா? 'முக்காடுகள் மீண்டும் முகாரி ராகங்கள்', நிலவு குளிர்ச்சியாக இல்லை' என்னும் இரு கதைகளிலும் மேற்கண்ட குறைபாடுகள் பூதாகரமாகத் தோன்றுகின்றன.

ஒருபுறம் பழம் பெருமைகளிலும் வறட்டுக் கௌரவங்களிலும் சாதித் திமிரிலும் ஊறித்திளைத்து, இன்று ஏற்பட்டுவரும் வேகமான மாற்றங்களையும் பிரச்சினைகளையும் உணர்ந்துகொள்ள முடியாத மார்க்கண்டர்கள்; மறுபுறம் வைதிக மரபுகளையும் கட்டுத்திட்டங்களையும் நியதிகளையும் - அவை இன்றைய காலகட்டத்துக்கு உதவாதவை என அறிவுபூர்வமாக உணர்ந்தும் அவற்றை எதிர்க்கத் திராணியற்ற பட்டதாரி ஆசிரியைகளான கௌரி அக்காக்களும் ராகிலாக்களும் அனீஸாக்களும்; அவர்களது மனக்குமைச்சல்களும் குமுறல்களும் தவிப்புகள் ஏக்கங்களும் விரக்தி வெறுப்புகளும் - இவையெல்லாவற்றையும் செம்மையாக உணர்ந்தும் விடிவைப் பற்றிச் சிந்திக்காது வெறுமனே அனுதாபப்படுகின்ற, பிரச்சினைகளைக் கண்டு அவற்றுக்கு முகங்கொடுக்க அஞ்சித் தப்பியோட முயலுகின்ற 'நான்' களும் மலிந்துள்ள சமுதாயத்திற்கு விடிவு என்பது முயற்கொம்பே!

வாழ்க்கைத் தேவைகளும் பொருளாதாரப் பிரச்சினைகளும் மிகுந்துவரும் இற்றை நாட்களிற் பொருள் வேட்கை கொண்ட கழுகாக மனிதன் மாறிக்கொண்டிருப்பதையும நீதி, நியாயம், அன்பு, பரிவு, மனிதநேயம் முதலியவை செல்லாக்காசுகளாகத் தூக்கியெறியப்படுவதையும் அதே சமயம் அவை இன்னும் முற்றாக அற்றுப்போய்விடவில்லை என்பதையும் கதைஞர் ரதி கந்தசாமி 'ஓர் உயிரின் விலை' என்னும் கதையிலே துல்லியமாக வெளிப்படுத்தியுள்ளார். நெஞ்சை உருகவைக்கும் சத்தியாவின் பரிதாப நிலையும் அவளது ஆவேசமும் வெறுப்பும் விரக்தியும் ஏற்படுத்திய வைராக்கியமும் அவளைப் புதுப்பிறவியாக்கியமையைக் கதைஞர் இயல்பாகவும் கச்சிதமாகவும் காட்டியுள்ளார்.

எஸ். முத்து குணரத்தினத்தின் 'நியாயப்படுத்துகின்ற கெட்டிக்காரர்கள்' என்னும் கதை, பஸ் வண்டிப்பயணம் ஒன்றினை மையமாகக்கொண்டு விரிவடைகின்றது. இக் கதையில், நாம் பிரயாணம் செய்யும் வேளையில் அன்றா

டம் காணும் பாத்திரங்களையும் அவர்களது வக்கிர மனோ பாவங்களையும் சுயநல வெறியையும் தரிசிக்க முடிகின்றது. கற்றறிந்தவர்களே இவ்வாறு நடந்துகொள்ளுவதும் நலிந்த வர்களும் பெண்கள். குழந்தைகளும் இதனால் அடையும் வேதனைகளும் நாளாந்தம் காணக்கூடியவையே. இவற்றைக் கதைஞர் மிகக்கூர்மையான அவதானிப்புடன் நோக்கி, சரளமான நடையில், படிப்போர் மனத்தில் உறைக்கும் வண்ணம் கதையை நகர்த்திச் செல்கின்றார். மெலியோரை வாட்டும் வலியோரின் செயலை ஆத்திரத்துடன் குத்திக் காட்டி, 'என்றைக்கும் இந்த உலகம் பலவான் கையில் தானா?' என்னும் வினாவை எழுப்பி ஆழமாகச் சிந்திக்க வைத்துள்ளார். அன்றாடத் தேவைகளும் பொருளாதாரப் பிரச்சினைகளும் மின்னல் வேகத்தில் அதிகரித்துவரும் இன் றைய உலகில் சுயநலமும் பொருள் வேட்கையும் மிகுந்து இயந்திரமாக மாறிவிட்ட மனிதனிடம் 'மனிதாபிமானமா வது மண்ணாங்கட்டியாவது' என்பதைக் கதைஞர் சூசக மாகப் புலப்படுத்துகின்றாரோ?

முன்னணி எழுத்தாளரான வ.அ. இராசரத்தினத்தின் 1+1=1; 1--1=2 என்னும் கதை ஆண்டாண்டு கால மாக வளர்ந்து வந்த இனவாதத்தின், விளைவுகள், எதிர் கால நிலைமைகள், ஆட்சியாளரின் தில்லுமுல்லுகள், இனங் களுக்கிடையிலான தப்பபிப்பிராயங்கள் முதலியனவற்றை சிந்தனையைத் தூண்டும் வகையில் அலசியுள்ளது. எனி னும், இக்கதையில் விறுவிறுப்பான கதையோட்டமோ உயிர்த்துடிப்பான பாத்திர உரையாடல்களோ இன்றிக் கலைத்துவம் குன்றிப் பெரும்பாலான பகுதிகள் கட்டுரைப் பாங்காக அமைந்துள்ளன.

மலையகத் தொழிலாளர் மத்தியில் நிலவும் கொடிய வறுமை, அறியாமை, பொறுப்பற்ற தந்தையர்களின் ஊதாரித்தனம், இவற்றின் விளைவாகத் தொழிலாளப் பெண்களும் குழந்தைகளும் அனுபவிக்கும் இன்னல்கள் துய ரங்கள் அவர்களது ஏக்கங்கள் தவிப்புகள், அறியாமை

மிக்க பெற்றோர் தம் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் அக்கறை செலுத்தாததுடன் அவநம்பிக்கை கொண்டு அவர்களே பிள்ளைகளின் கல்வியை பாழாக்க முனைதல் முதலியவற்றைச் சித்திரிப்பதாக, மலையகத்தின் பிரபல எழுத்தாளருள் ஒருவரான மாத்தளை சோமுவின் 'இனி ஒரு துன்பமில்லை' என்னும் கதை அமைந்துள்ளது. முத்துவின் 'உபதேசம்' சற்றே வயதுக்கு மீறியதாக இருப்பினும் பொருந்தக்கூடியதே. மாத்தளை சோமுவின் எழுத்தாற்றல் அவரது ஏனைய கதைகளிற் சோபிக்குமளவிற்கு இக்கதையிலே சோபிக்கவில்லை. □

தெணியான்

nef

"புற உலகில் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியை அப்படியே தத்ரூபமாக எழுத்தில் கொணர்ந்துவிட்டால், அது இலக்கிய மென்றாகிவிடாது. அது போலவே தனிமனித அல்லது சமூகப் பிரச்சினைகளை ஆழமாக அலசிவிடுவதாலும், அது இலக்கிய அந்தஸ்தைப் பெறமுடியாது.

இந்த அலசுதல், புத்தி மட்டத்தில் நடைபெறுவது, படைப்போ கலைஞனின் ஆழ்மனம் தொடர்பானது. இப் பிரச்சினைகள் என்றாவது ஒருநாள் மறைந்துவிடக்கூடும். அவை நிலையற்றவை. ஆனால், அவற்றை அடிப்படையாகக்கொண்ட இலக்கியமோ அழிவற்றது; அதாவது நிலையற்ற உலகிலிருந்து நிலையான படைப்புலகைக் கலைஞன் சிருஷ்டித்துவிடுகிறான்."

— *தமிழ்ச் சிறுகதை வரலாறு*

எம். வேதசகாயகுமார்

தகவம்